Registered as a News Paper
பொழிவு: 25
குவிப்பு: 04
பக்கங்கள்: 16
விலை: 40/-
ஏப்ரல்: 2021
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"அன்பியமும் சாட்சிய வாழ்வும்" அன்பிய யூபிலி ஆண்டு 2021"

# பாஸ்காப் பெருவிழாச் சிறப்பிதழ்



## உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்

### மன்னார் மறைமாவட்ட ஆயரின் உயிர்ப்புவிழாச் செய்தி

"சாவு முற்றிலும் ஒழிந்தது, வெற்றி கிடைத்தது." (1கொரி 15:54) உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் அமைதி உங்கள் அனைவரோடும் நிறைவாக தங்குவதாக. சவால்கள் நிறைந்த இன்றைய நவீன உலகில் எம் ஆண்டவர் இறைமகன் இயேசுவினுடைய உயிர்ப்பு உங்கள் அனைவருடைய உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதியையும், சமாதானத்தையும், நம்பிக்கையையும் கொண்டுவர ஆசிக்கின்றோம்.

"அன்பியமும், சாட்சிய வாழ்வும்" என்ற மையப் பொருளோடு அன்பிய யூபிலி ஆண்டு 2021இல் பயணிக்கும் நாம் தனி நபராக, இளையோராக, குடும்பங்களாக, அன்பியங்களாக, பங்குத் திருச்சபைகளாக, மறைமாவட்ட தளத் திருஅவையாக எம் சுயநல வாழ்வின் நிலைகளை புதைத்துவிட்டு முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நோக்கி இறைமகன் இயேசுவின் உயிர்ப்பின் மக்களாக புதுவாழ்வு வாழ அழைக்கின்றேன். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குபெற்ற ஒரு விசுவாசியினுடைய வாழ்வு இவ்வுலகத்தில் பாடுகள், மரணம் போன்ற சவால்களால் புடமிடப்பட்டு நிரந்தர வாழ்வாகிய உயிர்ப்பில் நம்பிக்கை கொள்வதாகும்.

எனவே என் அன்பார்ந்த இறைமக்களே! சவால்கள் பல வந்தாலும் அவற்றை இறைமகன் இயேசுவின் மனநிலையோடு எதிர்கொள்ளுவோம். உயிர்த்த ஆண்டவர் இயேசு உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் நாம் வாழுகின்ற எம் சமூகத்திற்கும் சாந்தி, சமாதானம், நம்பிக்கை நிறைந்த வாழ்வை வழங்குவாராக.•

## மன்னார் மறைசாட்சிகளின் கல்லறை சிற்றாலயப் பீடம் அபிசேகம் செய்யப்பட்டது





மன்னார் மறைமாவட்டத்தின் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் அமைந்துள்ள வேதசாட்சிகளின் கல்லறை சிற்றாலய திருப்பீடமானது கடந்த 07.03.2021 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் அபிசேகம் செய்யப்பட்டது. இத் திரு நிகழ்வில் வழிபாடு மற்றும் இளைஞர் ஆணைக் குழுக்களின் இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளார், தோட்டவெளிப் பங்குத் தந்தை அருட்பணி. அலெக்சாண்டர் சில்வா, ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்லஸ் அடிகளார் அடிகளார், திருப்புமுனை இயக்குனர் அருட்பணி. லொசிங்ரன் அமதி அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டனர். இச்சிற்றாலயமானது மன்னார் மறை மாவட்ட உதயத்தின் 40ம் ஆண்டு நிறைவு விழாத் திருப்பலியின் போது இலங்கைக்கான வத்திக்கான் திருப்பீட பிரதிநிதி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.•

## மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் திருத்தைல அபிசேக விழா






திருவருட்சாதனங்களுக்குப் பயன்படும் திருஎண்ணைகளை அர்ச்சிக்கும் திருப்பலியானது கடந்த 29.03.2021 அன்று மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இத் திருவழிபாட்டில் புகுமுக அருட்சாதன எண்ணெய், நோயில்பூசுதல் எண்ணெய், கிறிஸ்மா எண்ணெய் என்பன ஆயரால் அர்ச்சித்துப் புனிதப்படுத்தப்பட்டன. அருட்பணியாளர்களும், துறவியரும் இவ் அபிசேக நிகழ்வில் கலந்து கொண்டனர்.•

## இதய அஞ்சலி செய்கின்றோம்

### பேரருட் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை



மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக பணிப் பொறுப்பேற்று ஓய்வுநிலையில் சுகயீனமுற்று இறைபதமடைந்த எம் பாசமிகு ஆயர் தந்தை பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் இதயம் நிறைந்த அஞ்சலிகள். ஆயர் தந்தை அவர்கள் கடந்த 01.04.2021 அன்று சுகயீனமுற்று யாழ்ப்பாணம் திருச்சிலுவைக் கன்னியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது காலை 6.00 மணிக்கு இறைபதமடைந்தார்.

இச்செய்தி கேட்டு மன்னார் மறைமாவட்டம் மட்டுமல்ல தமிழ்பேசும் உலக மக்கள் அனைவரும் சோகத்தில் மூழ்கியுள்ளனர். ஆயரின் தலைமைத்துவ பண்புகளைப்பற்றி சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. சோகம் நிறைந்த உணர்வுகளோடு வழியனுப்பி வைக்கின்றோம்.



## உள்ளே...

மன்னார் மறைமாவட்டத்தின் அடையாளம்... - பக்கம் 02
அன்பியங்கள் காலத்தின் தேவையா - பக்கம் 04
மன்னார் கத்தோலிக்கத் திருஅவையின் தனித்துவமான ஆரம்பகால வரலாறு - பக்கம் 06
உயிர்ப்பின் செய்தி - பக்கம் 07
உயிர்ப்பின் விளைநிலம் எம் உள்ளம் - பக்கம் 08
காலங்கடந்தவர் கைவிடார் - பக்கம் 09

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## உயிர்த்தெழுவோம்

**நாமும் உயிர்த்தெழுவோம்**

இயேசு தன்னை இறைவன் என்று எடுத்தியம்பும் வகையில் சாவின் மீதும், தீமையின் மீதும் வெற்றி பெற்றார். பல்வேறு அரும் அடையாளங்களைச் செய்தார். பிறருக்கு உயிர் தந்தவர் சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று சீடர்களுக்கு மூன்று முறை கற்பித்தார். அவர் சொன்ன படியே உயிர்த்தெழுந்தார். (மத் 28:6). உயிர்ப்பின் அனுபவத்திற்குப் பிறகு சீடர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. தூய ஆவியின் ஒளியில் இயேசுவின் இயக்கமாக உருவாகி இயேசு அவர்களுக்குக் கற்பித்த வாழ்வில் மதிப்பீடுகளை வாழ முயன்றனர். அம்முயற்சியில் பல்வேறு எதிர்ப்புக்களையும், போராட்டங்களையும் சந்தித்தனர். எனினும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்குச் சாட்சியாக வாழ்வதில் அனைவரும் ஒருமனப்பட்டுச் செயல்பட்டனர். அவர்களை உந்தித்தள்ளி சாட்சியாக வாழத்தூண்டிய இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவம் இன்னும் நம்மையும் உயிர்த்தெழ அழைக்கின்றது. எதில் எமக்கு உயிர்த்தெழுதல் தேவை என்பதை அறியவேண்டும்.

**மனநிலை மாற்றம் வழியாக**

நம்முடைய வாழ்வில் உயிர்ப்பின் அனுபவத்தை பெற வேண்டும். அது எவ்வாறு என்றால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து நம்முடன் வாழ்கின்றார் என்ற நம்பிக்கை பெறுவதன் வழியாகவே இது சாத்தியமாகும். "உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்". (மத் 28:20) என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை பெறவேண்டும்.

**சாட்சிய வாழ்வுக்கு**

இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவத்தால் தொடப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக மாறினர் (திப 2:32). ஸ்தேவான் போன்றோர் தங்களுடைய உயிரையே கையளித்து இயேசுவைப் போலவே தமக்குத் தீமை செய்தவர்களை மன்னிக்கும் அளவிற்கு சான்றுபகர்ந்தனர் (திபா 7:59-60). இயேசுவின் சீடர்களைத் துன்புறுத்திய சவுலும் உயிர்ப்பின் அனுபவத்திற்குச் சாட்சியாளராக மாறினார் (திபா 9). தானும் இறைவனின் மீட்பு திட்டத்தில் பங்கு பெறுவதற்காக துன்புறுவதாகவும் (கொலோ 1:24), துன்பங்களை ஏற்றுக்கொள்வதாகவும் (2கொரி 4:7-15) கூறுகின்றார். எனவே சீடர்கள் போன்றே சாட்சிய வாழ்வு வாழ்ந்து இயேசு விரும்பிய இறையாட்சியை மண்ணில் காண அழைக்கப்படுகிறோம்.

**நிகழ்காலத்தைக் கடந்து**

உயிர்த்தெழுதலின் அனுபவம் நிகழ்கால வாழ்வோடு முடிவதில்லை. மாறாக உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கைக்கும் ஊற்றாக அமைந்துள்ளது. பவுல், "இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் எனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும்" (1கொரி 15:13) என்று குறிப்பிடுகின்றார். அதாவது மறு உலக வாழ்வின் மீதான நம்பிக்கை என்பது மனிதனை முழு மனிதனாக வாழத் தூண்டுகின்றது என்பதையும், கிறிஸ்துவுக்கு சாட்சிபகர உந்துதல் தருகின்றது என்றும் பவுலும் மற்ற சீடர்களும் கண்டார்கள். (1கொரி 15:15, திபா 4:2) எனவே உயிர்ப்பின் அனுபவம் நம்முடைய அன்றாட வாழ்வின் நிகழ்வுகளைக் கடந்துசென்று சாட்சிய வாழ்வு வாழத் தூண்டுவதுபோல எதிர்கால நிலைவாழ்விலும் (யோவா 6:54-58, 11:25) நம்பிக்கை கொண்டுவாழத் தூண்டுகின்றது. இதனை "நாம் யாவரும் சாகமாட்டோம் ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம்" (1கொரி 15:51) என்று குறிப்பிடலாம்

**முடிவுரை**

இயேசுவின் உயிர்ப்பு – ஒரு வரலாற்று நிகழ்வு (Historical Event) என்பதை கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்து பிறருக்கு நம்பிக்கையூட்டிய பல விவிலிய அறிஞர்களின் வாழ்விலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது. இயேசுவின் உயிர்த்தெழுதல் திருச்சட்டம் மற்றும் இறைவாக்கை நிறைவேற்றும் வகையில் அமைந்து பலரையும் மீட்புத் திட்டத்தில் பங்குபெற தூண்டுகின்றது. இது இயேசுவின் இயக்கத்தை உருவாக்க காரணமாகவும் அமைந்திருந்தது. நிகழ்கால வாழ்வில் இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ்வதன் மூலமும் எதிர்கால நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்கு மான அழைப்பாக இயேசுவின் உயிர்ப்பு அமைந்துள்ளது.

**உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புவிழா நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.**

**அன்புடன்**
**மன்னா பதிப்பாசிரியர்,**
**அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா**

# மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் அடையாளம் - அமரத்துவம் அடைந்தார்

மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் 16.04.1940 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, முருங்கன் மகாவித்தியாலயம், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார். கண்டி தேசியகுருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 13.12.1967ஆம் ஆண்டு முன்னாள் யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையினால் யாழ் மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1992.07.06 அன்று முன்னாள் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக நியமனம் பெற்று 1992.10.20 அன்று ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உட்பட இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடைசூழ மருதமடு அன்னை திருத்தலத்தில் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை, தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட மறைமாவட்டம் மட்டிலான தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வந்தார். இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்தபோது 15 பங்குகள் இருந்தன. இவர் ஓய்வு பெறும்போது 38 பங்குகளாக அவை அதிகரித்திருந்தன. மேலும் மறைமாவட்டத்தின் காலத்திற்கேற்ப தேவைகளைக் கருத்தில் கொண்டு அத்தேவைகளைப் பீர்த்தி செய்யப் பல ஆண் பெண் துறவறசபைகளை வரவழைத்துப் பணிகளை நிறைவேற்றினார்.

கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும் பாடுபட்டார். சிறைகளில் வாடும் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமலாக்கப்பட்ட வர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார்.

யுத்தத்தால் தமது இல்லிடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார். யுத்தத்தால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு வாழ்வோதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வரோடு நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார்.

யுத்தத்தாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர் துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார். வன்னியில் இருந்த மக்களில் 146,679 பேருக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியை கேட்டு சவால்களைக் கண்டு பயப்படாமல் துணிச்சலோடு செயற்பட்டார்.

**பணி ஓய்வு**

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் சுகவீனமடையும் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தார். திருச்சபையின் ஒழுங்கு விதிக்கு அமைய 75 வயது நிறைவில் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். 2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கம் "இனமான ஏந்தல்" என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு கம்பன் புகழ் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற விளைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமையவேண்டும்.●


**மன்னார் மடுமாதா**
மருத்துவமனை
வெளிநோயாளர் பிரிவிற்கான
**வைத்தியர் தேவை**

அரச சேவையிலிருந்து
ஓய்வுபெற்ற
தமிழ் மொழி பேசக்கூடிய
வைத்தியரை
எதிர்பார்க்கின்றோம்.
உணவு, தங்குமிட
வசதிகள்
செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
கீழ்வரும்
தொலைபேசி இலக்கத்தோடு
தொடர்பு கொள்ளவும்.
023 2223 878, 077 2950 558,
077 2643 763

- நிர்வாகம் -


## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

## —ஏப்ரல் 2021—

16. அமரர் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் பிறந்த தினம்
- அருட்பணி. ஜீவனதாஸ் பர்னாந்து அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (2019)

21. புனித யோசப்வாஸ் திருவிழா - உப்புக்குளம்

30. புனித அந்தோனியார் திருவிழா - தொங்குபாலம் (குஞ்சுக்குளம்)

# துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்சகோதரி. மெக்டலின் மொறைய்ஸ் F.M.M.



மன்னார் மறைமாவட்டத்தில் கடலாலும், தென்னை மரங்களாலும் சூழப்பட்ட வங்காலை என்னும் கிராமத்தில் காலம்சென்ற திரு. திருமதி சந்தியா மொறைய்ஸ் என்னும் தம்பதியினரின் அன்புப்புதல்வி அருட்சகோதரி மெக்டலின் மொறைய்ஸ் என்பவர். இவர் 1971.03.20 இல் புனித பிரான்சிஸ்கன் மரியாளின் மறைபரப்புச் சபையில் எமது மறைமாவட்ட முதல் அருட்சகோதரியாக காலடி எடுத்துவைத்தார். அவரைத் தொடர்ந்து இன்னும் எமது சபைக்கு புதிதாக யுவதிகள் இணைந்த வண்ணமே உள்ளனர். இவர் கடந்த 50 ஆண்டுகளாக தனது பணியை பற்பல இடங்களிலும் தனது ஆற்றல், திறமைக்கேற்ப பல்வேறு துறையில் இறை சேவையாற்றியுள்ளார்.

தனது ஆன்மீக வாழ்வை மேன்மேலும் மேன்மைப்படுத்த உரோமை நகர் சென்று அங்கே தனது கற்றலை மேற்கொண்டார். பின்பு மறை பரப்பாளராக பிரான்ஸ் தேசத்திற்கு அனுப்பப்பட்டார். அதுமட்டுமன்றி இச் சபையின் நவ சன்னியாச பொறுப்பாளராகவும் இளம் பெண்களை ஆன்மீகத்தில் பயிற்றுவிப்பதிலும் வழிகாட்டியாக இருந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்து கண்ணிய கட்டுப்பாடுடன் கூடிய சேவையாற்றியுள்ளார். அத்துடன் இச் சபையின் மாகாணத் தலைவியின் ஆலோசகராகவும், தலைமைத்துவப் பொறுப்பினையும் ஏற்று இறை பற்றுடன் தன் கடமையை செவ்வனே நிறைவேற்றி சபையின் வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் அயராது உழைத்து தனது துறவற வாழ்வின் இன்பம் கண்டவர்.●

# துயர் பகிர்கின்றோம்

**திருமதி. அந்தோனி கிறேஸ் இதயகீதம்**

மன்னார் மறைமாவட்டத்தின் முதன்மைச் செயலாளரான அருட்பணி. பீற்றர் மனோகரன் அடிகளாரின் அன்பு சகோதரி திருமதி. அந்தோனி கிறேஸ் இதயகீதம் அவர்கள் கடந்த 16.02.2021 அன்று இறையடி சேர்ந்தார்.

**திரு. சின்னக்கண்ணு**

கப்புச்சின் துறவற சபையைச் சேர்ந்தவரும் தரணிக்குளம் பங்குத்தந்தையுமான அருட்பணி. ஆரோக்கியசாமி அடிகளாரின் அன்புத் தந்தையார் திரு. சின்னக்கண்ணு அவர்கள் கடந்த 07.03.2021 அன்று இறைபதமடைந்தார்.

**திருமதி. கோதண்டி அந்தோனியாப்பிள்ளை**

இறம்பைக்குளம் பங்குத்தந்தையான அருட்பணி. ம. ஜெயபாலன் அடிகளாரின் அன்பு சகோதரி திருமதி. கோதண்டி அந்தோனியாப்பிள்ளை அவர்கள் கடந்த 12.03.2021 அன்று இறைபதமடைந்தார்.

இவர்களது பிரிவால் துயரும் அருட்பணியாளர்கள் மற்றும் அவரது உறவுகள் அனைவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களையும் இவர்களது ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாற செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மருதமடுத் திருத்தலத்தில் யாத்திரிகர்கள் தங்குமிட விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு





கடந்த 11.03.2021 வியாழக்கிழமை அன்று மாலை மடு தேவாலய பகுதிகளில் யாத்திரைக்காக வருகை தரும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சுற்றுலா துறை அமைச்சின் ஏற்பாட்டில் மடு பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், கே.திலீபன், இலங்கைக்கான இந்தியத் துணைதூதுவர் எஸ். பாலசந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ●

# புனித யோசேவ்வாஸ் சபையின் திருவிழா



இலங்கையில் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள புனித யோசேவ்வாசின் அருட்சகோதரிகளின் திருவிழாவானது கடந்த 20.02.2021 அன்று காலை 10.00 மணி அளவில் மன்னார் மறை மாவட்டத்தின் ஆயர் தந்தையும் சபையின் ஸ்தாபகரும் ஆகிய மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களின் தலைமையிலும், மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வரும் இச்சபையின் மதிப்பீட்டாளருமாகிய அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும், மன்னார் மறைமாவட்டத்தின் வழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. கிறிஸ்து நாயகம் அடிகளாரும் இவர்களோடு இணைந்து புனித யோசேவ்வாஸ் அருட்சகோதரிகளான பிறேமா கொடுதோர், ஆரோக்கிய கவிதா, மேரி மொனிக்கா, ஆரோக்கிய பொன்மலர், சூசான், ஜெயமலர், சாமளா, மெரி அன்சியா, யூலியற் மேரி மற்றும் சபையின் நவ கன்னியர்களும் அயல்வாழ் மக்களும் இணைந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் கூட்டுத்திருப்பலியாக மன்னார் புனித யோசேவ்வாஸ் சபையின் உருவாக்கல் இல்லத்தில் சிறப்பிக்கப்பட்டது. ●

# தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா 19.03.2021



மன்னார் மறைமாவட்டத்தின் தாழ்வுபாடு பங்கின் முதன்மை ஆலயமாகிய புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா 19.03.2021 அன்று காலை 06.00 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி ஜேசுராஜா அடிகளாரின் வழிகாட்டுதலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் பல அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதர சகோதரிகளின் பிரசன்னத்தோடு மிகவும் அருட்சியான முறையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழாத் திருப்பலியின் நிறைவில் பங்கின் பாதுகாவலர் புனித சூசையப்பரின் திருச்சுருப ஆசீர்வாதம் ஆயர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது. ●

# காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா



மடு மறைக்கோட்டத்தின் காத்தான்குளம் பங்கு புனித சூசையப்பர் ஆலயத் திருவிழாவானது கடந்த 19.03.2021 அன்று காலை 06.00 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாத் திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் பல அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதர சகோதரிகளின் பிரசன்னத்தோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருப்பலியின் நிறைவில் புனித சூசையப்பரின் திருச்சுருப ஆசீர்வாதம் இடம்பெற்றது. திருவிழாவிற்கான ஆயத்தங்களை காத்தான்குளம் பங்குத்தந்தை அருட்பணி. தாயாளன் கூஞ்ஞ அடிகளார் பங்குமக்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

# வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கலைஞர் மன்றம்



கடந்த 20.03.2021 அன்று மாலை 3.30 மணிக்கு வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த கலைஞர் களுக்கான மன்றம் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய மண்டபத்தில் கலையருவி இயக்குனர் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் ஆரம்ப நிகழ்வில் வவுனியா மறைக்கோட்ட முதல்வரும் வேப்பங்குளம் பங்குத்தந்தையுமாகிய அருட்பணி. இராஜநாயகம் அடிகளார், கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் அடிகளார், வேப்பங்குளம் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. சதாஸ்கர் அடிகளார் மற்றும் வேப்பங்குளம், கோமரசன்குளம் கலைஞர்களும் பிரசன்னமாகி இருந்தனர். மன்னார் மறைமாவட்டத்தில் அனைத்து ஆணைக்குழுக்களும் அதனுடைய செயற்பாடுகளும் மன்னார் தீவகத்தை மையப்படுத்தியதாக இருக்கின்ற படியாலும் மன்னாரில் இருந்து வவுனியா தொலைவில் இருக்கின்ற படியாலும் கலை மற்றும் ஊடகம் சார்ந்த துறைகளில் ஆர்வமுள்ள அருட்பணியாளர் ஒருவரது உதவியோடும் பங்குக்கலைஞர்களின் ஒத்துழைப்போடும் கலையருவியின் கலைத்துறை சம்பந்தமான செயற் பாடுகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டதே இக் கலைஞர் மன்றமாகும்.

அதேவேளை கவின்கலை வகுப்புக்களான ஓர்கன், வயலின், நடனம், சங்கீதம், ஒக்ரபேட் மற்றும் நாடகமும் அரங்கியலும் போன்ற வகுப்புக்கள் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆகவே வவுனியா மறைக் கோட்டத்தைச் சேர்ந்த அனைத்து பங்குகளிலுமிருந்து கலைஞர்களும் கலை ஆர்வமுள்ளவர்களும் இணைந்து கொள்ளவும். வவுனியா பிராந்திய கலைஞர் மன்றத்தின் இணைப்பாளராக கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் அடிகளார் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் மற்றும் கலையருவி இயக்குனர் ஆகியோரால் முன்மொழியப்பட்டு மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் அனுமதியோடு செயற்படுவார்.

இரண்டாவது கலைஞர்மன்றக் கூட்டம் வருகின்ற 17.04.2021 சனிக்கிழமை மாலை 3.30 ற்கு வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

# மன்னார் மறைமாவட்ட ஆயர்தந்தை அவர்களினால் IHD-Civicdialogue திட்டத்திற்கான ஐக்கிய அமைப்பு" அங்குரார்பண நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும்

கறிற்ராஸ் - வாழ்வுதயத்தின் IHD-civic dialogue திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார் மாவட்டத்தில் 8 இலக்கு கிராமங்களில் ஒருங்கிணைந்த முழு மனித அபிவிருத்தி செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் சமூக, பொருளாதார, அபிவிருத்திகளை மையமாக வைத்து இயங்கி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கிராம மட்டங்களில் இயங்கும் சமூகமட்ட அமைப்பு உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சி செயலமர்வானது கடந்த 24, 25 ஆகிய திகதிகளில் வாழ்வுதய மண்டபத்தில் கறிற்ராஸ்-வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை செ. அன்ரன் அடிகளார் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் சமகால COVID 19 விடயங்களை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்றுள்ளது.


மேற்படி செயலமர்விற்கு வளவாளராக திரு அறிவழகன் (வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர்) அவர்கள் செயற்பட்டார். இச் செயலமர்வில் கறிற்ராஸ் - இலங்கையின் திட்ட முகாமையாளர் திரு சஜித் சில்வா அவர்களும், இத்திட்டத்தின் தேசிய நிலைய இணைப்பாளர் செல்வி மிசேல், மற்றும் தேசிய நிலைய அலுவலர் செல்வி சத்துரணி, அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் இறுதி நாளில் கறிற்ராஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை செ. அன்ரன் அடிகளார் அவர்களின் சிந்தனைக்கு அமைவாக இத்திட்ட அமைப்பு உறுப்பினர்கள், தொடர்ந்து சுயமாக எதிர்காலத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்திகளில் செயற்படுவதற்கு இலகுவாக ஐக்கிய அமைப்பு என்னும் பெயர் சூட்டப்பட்டு, மன்னார் மறைமாவட்ட ஆயர் தந்தை மேதகு இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களினால் அங்குரார்பணம் செய்யப்பட்டதோடு, மேற்படி செயலமர்வில் பங்குபற்றிய 40 உறுப்பினர்களுக்கான சான்றிதழும் ஆயர்தந்தை அவர்களினால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியானது கறிற்ராஸ் - கொறியா நாடானது, கறிற்ராஸ் - இலங்கையூடாக கறிற்ராஸ் - வாழ்வுதயத்திற்கு வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட செய்திகள்

## கோமரசன்குளம் கல்வாரி திருத்தல சிலுவைப்பாதையும் திருப்பலியும்



கடந்த 26-03-2020 அன்று மாலை 3:00 மணிக்கு வவுனியா கோமரசன்குளம் கல்வாரியில் சிலுவைப்பாதைத் தியானம் மிகவும் அமைதியாகவும், பயபக்தியாகவும் நடைபெற்றது, சிலுவைப் பாதையைத் தொடந்து, திருப்பலி ஆரம்பமாகியது, திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் பீரீஸ் அடிகளார், மற்றும் தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியசாமி அடிகளார் ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர்.●

## மரியாயின் சேனையாளர்களுக்கான தவக்கால தியானம்



மரியாயின் சேனையாளர்களுக்கான உபவாச தவக்காலத்தியானம் கடந்த 20.02.2021 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு குடும்பநலப் பணியகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அருட்பணியாளர் இராபேல் கூத்தர் V.C அடிகளாரினால் நடாத்தப்பட்டது. மேலும் 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்து, எமது பணிவாழ்விற்காக இறைவேண்டல் செய்யப்பட்டது. 1.00 மணிக்கு இடைவேளை வழங்கப்பட்டு, 1.30 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு குணமாக்கல் வழிபாடு இடம்பெற்றது.

தொடர்ந்து 4.00 மணிக்கு இறையாசீரோடு தேவ விரோத செயல்களை விட்டொழித்து தாழ்ச்சி நிறைந்த மனதோடு அன்னை மரியாளின் புண்ணிய நெறிகளைக் கைக்கொண்டு உலகெங்கும் நற்செய்தியை பறைசாற்றி உங்கள் பணிகளைத் தொடர்ந்தாற்ற வேண்டும் என எடுத்துரைத்து இயேசுவோடு கூட நடக்க நற்கருணை ஆசீர்வழங்கி அருட்தந்தை அவர்கள் உபவாச தியானத்தை நிறைவுசெய்து வைத்தார். மேற்படி நிகழ்வு மரியாயின் சேனை ஆன்மீக இயக்குனரும், குடும்பநல பணியகத்தின் இயக்குனருமான அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் வழிகாட்டுதலில் மரியாயின் சேனை மன்னார் கொமிசியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தியானத்தில் மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையின் உறுப்பினர்கள் 160 பேர் கலந்து சிறப்பித்தனர்.●

## கலையருவி கலைஞர்களுக்கான தவக்கால தியானம்





கலையருவியின் கலைஞர்களுக்கான தவக்காலத் தியானமானது கடந்த 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு கலையருவியின் மண்டபத்தில் மாந்தைப் பங்குத்தந்தை அருட்பணி. அமல்ராஜ் அடிகளாருடன் இணைந்து கலையருவியின் இயக்குனர் அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார் ஆகியோரால் நடாத்தப்பட்டது. இத்தியானத்தில் கலையருவியின் கலைஞர்கள் 100 பேர் கலந்து கொண்டனர்.●

## “எழுந்திடு” குறும்பட வெளியீடு



மன்னார் தகவல் தொடர்பாடல் பயிற்சி நிலையத்தினால் இன்று 25.03.2021 காலை 9.00 மணிக்கு ஆகாஸ் கொட்டல் மண்டபத்தில் “எழுந்திடு” குறும்பட வெளியீடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதீயாக மன்னார் மாவட்ட செயலாளர் கௌரவ திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்களும், கௌரவ விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர் பிரதேச செயலாளர் திரு. M. பிரதீப் அவர்களும், மடு பிரதேச செயலாளர் திருமதி. K. B. நிஜாகரன் அவர்களும், நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. M. ஶ்ரீஷ்கந்தகுமார் அவர்களும், தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் மன்னார் உதவிப்பணிப்பாளர் திரு. U. L. A. மஜீத் அவர்களும், RPR நிறுவனத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி திரு. M. M. சபூர்தின் ஆகியோர் பிரன்னமாகி இருந்தனர்.

கடந்த மூன்று மாத காலமாக CCT நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கற்கைநெறி வகுப்புக்களில் பங்குபற்றி பயன்பெற்ற மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 30 இளைஞர், யுவதிகளின் ஒத்துழைப்போடு எடுக்கப்பட்ட “எழுந்திடு” குறும்பட வெளியீடும், அவர்களுக்கான சான்றுதழ்கள் வழங்களும் இந்நிகழ்வின்போது இடம்பெற்றன. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர்தந்தை அவர்கள் ஆசிச் செய்தியினையும், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் முதன்மை விருந்தினர் உரையையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சிகள் யாவும் மன்னார் CCT திட்ட அதிகாரி திரு. ஜோண்சன் அவர்களின் தலைமையில் மன்னார் CCT கிளையின் திட்ட நடத்துனர் திரு. ஜசோதரன் அவர்களின் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றன. இதன்போது கொழும்பு நிர்வாக அலுவலகரும் கணக்காளருமாகிய திரு. கமிலஸ் அவர்களும், YSF நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி. சிவதர்ஷினி அவர்களும் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி திட்டத்தை நடாத்திய மன்னார் CCT நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் பயன்பெற்ற இளைஞர், யுவதிகள் அனைவரையும் அன்போடு மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்தி பாராட்டுகின்றோம்.●

## புனித வின்சன்ட் டி போல் சபை அங்கத்தவர்களுக்கான வருடாந்த தவக்கால உபவாசத் தியானம்



கிறிஸ்துவுக்குள் முழுமையை நோக்கிய பயணத்தில் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும், பணிவாழ்வை பலப்படுத்தி இறையனுபவத்தினுள் கடந்து செல்லவும், புதுப்பித்தல் அனுபவத்தை உருவாக்கவும், அருளின் காலமாகிய இத் தவக்காலத்தில் உபவாசத்தியானம் ஒன்று கடந்த 27.02.2021 அன்று மன்னார் குடும்ப நல பொதுநிலையினர் பணிமனையில் சிறப்பாக நடைபெற்றது. இத்தியானமானது அன்று காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை நடைபெற்றது. அருட்பணி. இராபேல் கூத்தூர் V.C அடிகளார் சிறப்பான தவக்கால தியான மறையுரைகளையும் வழிபாடுகளையும் நடத்தினார். அவர் தனது மறை உரையில் புனித வின்சன் டி போல் பணிப்பாளர்களை பற்றிக் கூறுகையில், கிறிஸ்துவின் மனநிலையோடு பல தடைகள் வந்தாலும் சமூகத்திற்காக தமது பணிகளைச் செய்ய வேண்டுமெனவும், இச்சபையின் பணித்தொண்டு நிறுவனப் பணியல்ல மாறாக அப்போஸ்தலிக்க பணியாக இருப்பதால் யாருக்கு உதவி தேவையென அறிந்து அவர்களை இனங்கண்டு அச்சிறியோருக்கு உதவி வழங்கும் போது நமது சேவையில் முழு நிறைவை அடைகின்றோம் என எடுத்துக் கூறினார். இறுதியாக திருப்பலியுடனும், நற்கருணை ஆசீருடனும் இத்தியானம் நிறைவுபெற்றது. இத்தவக்கால தியானம் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆன்ம இயக்குனர் அருட்பணி. எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் தலைமையில் ஒழுங்கமைத்து நெறிப்படுத்தப் பட்டது. மறைமாவட்ட பங்குகளிலுள்ள வளர்ந்தோர் பந்திகளிலிருந்தும் இளையோர் பந்திகளிலிருந்தும் 82 உறுப்பினர்கள் பங்குபற்றி பயனடைந்துள்ளனர்.●

## கவின்கலை, ஊடக கற்கைநெறி வகுப்புக்கள் ஆரம்பம்



மன்னார் கலையருவியினால் கலைத்துறை, ஊடகத்துறை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப் பட்டு வருகின்றன. அவ்வகையில் கலையருவியின் கவின் கலை பயிலகத்தில் வயலின் (05.12.2020), ஓர்கன் (20.12.2020), நடனம் (13.03.2021) ஆகிய வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் கலையருவி ஊடகப் பிரிவினால் குறுங்கால ஊடகத்துறை கற்கைநெறி வகுப்புக்கள் கடந்த 13.03.2021 அன்று காலை 10.00 மணிக்கு கலையருவி இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமாகிய அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார் அவர்களால் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. இக்குறுங்கால கற்கைநெறியானது மூன்று மாதங்களை உள்ளடக்கியதாகும். அதன் பின்பு தகுதி பெறுகின்ற மாணவர்கள் டிப்ளோமா சான்றிதழ் வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். இவ் ஆரம்ப நிகழ்விற்கு யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. S. டினேஸ் கொடுதோர், மன்னார் யுனஎயஉெந வுநஉாெைஉயட ஐளெவவைரவந பணிப்பாளர் திரு. R.J.மோகன் குரூஸ், திரு. S. யேசுதாசன் (MA in Journalism and Mast Communication), ரூபவாகினி ஊடகவியலாளர் திரு. நயன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அன்பியமும் சாட்சிய வாழ்வும்” அன்பிய யூபிலி ஆண்டு - 2021

# அன்பியங்கள் காலத்தின் தேவையா?

அருட்பணி. போல் றொபின்சன்
இயக்குனர், அன்பிய பணியகம்
திருகோணமலை மறைமாவட்டம்.

**அன்பியம் - ஓர் அறிமுகம்**

இலங்கைத் திருஅவையில் அன்பியங்களின் ஆரம்பமும் அவற்றின் பணியும், பயணமும் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்து யூபிலி ஆண்டில் (1996 – 2021) கால் பதிக்கும் வேளையில் நடந்து வந்த பாதையை மீட்டுப் பார்த்து நடக்க வேண்டிய பாதையை சரி செய்து புதுப்பித்தலை காண்பதே யூபிலி ஆண்டின் நோக்கமாக இருக்க வேண்டும். இதனால் தான் அன்பிய யூபிலி ஆண்டின் கருப்பொருள் கூட “அன்பியங்கள் வழி கிறிஸ்தவ வாழ்வின் புதுப்பித்தலை நோக்கி” என தரப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் காலத்துக்குக் காலம் தோன்றிய தனித்துவமான சிந்தனையாளர்களும் அவர்களின் தனித்துவமான சிந்தனைகளும், செயல்களும் பல பாரம்பரிய சிந்தனைகளுக்குள் புரட்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியதை நாம் அறிவோம்.

லியனாடோ டாவின்சியும் சித்திரத்தில் புரட்சியும் (1452 – 1519), டெகார்ட்டும் கணிதத்தின் சிந்தனையில் புரட்சியும் (1596 – 1650), கலிலியோவும் உலக அமைப்பின் சிந்தனையில் புரட்சியும் (1564 – 1642), மாக்கியவெலி (1469 – 1527) மற்றும் சேக்ஸ்பியர் (1564 – 1616) கலையில், எழுத்தில் புரட்சியும் என்று 14ம் நூற்றாண்டு தொடங்கி 17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் அனைத்திலும் “மீள் பிறப்பு” என்று (Rebirth / Renaissance – ரெனோசான்ஸ்) பெருமை கொண்ட காலம் அது. உலகம் புதிய புரட்சியில் பயணிக்கத் தொடங்கியதும் இக்காலத்தில் தான். தொடர்ந்து 20ம் நூற்றாண்டில் உலக வரலாற்றில் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களும், கொள்கைகளும், முதலாம், இரண்டாம் உலகப்போர்களும், நவீன ஆயுத கண்டுபிடிப்புக்களும் உலக திருஅவை வரலாற்றிலும் நேர்மறை (Positive) மற்றும் எதிர்மறையான (Negative) மாற்றங்களையும், தாக்கங்களையும் தோற்றுவித்தன. இவ் உலக வரலாற்றில் தோன்றிய கலை, கலாச்சார, பொருளாதார புரட்சிகள் போன்றே ஓர் ஆன்மீக மீள் பிறப்பு (Spiritual Rebirth/ Spiritual Renaissance) திரு அவைக்குள்ளும் அவசியம் தேவை எனும் சிந்தனை தெய்வாதீனமாக இறை ஆவியின் தூண்டுதலால் திருஅவைக்குள் நுழைந்தது என்றே சொல்ல வேண்டும்.

திருத்தந்தை புனித 23ம் அருளப்பர் ( Pope John xxiii 1958 – 1963) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி முழு உலகத் திருஅவையும் ஆச்சரியப்படுத்துமளவிலான புதிய சிந்தனையும், புதிய நோக்கும், புதிய ஆன்மீகப் பயணமும் தேவை என்று அறைகூவல் விடுத்தார். இறைவார்த்தையையே அனைத்திற்கும் மையமாக வைத்து வாழ்விலும், வழிபாட்டிலும் புதிய அர்த்தமும், சுவையும் காண வழிவகுத்தார். இதன் விளைவாக பல புதிய சிந்தனைகளும், மாற்றங்களும் இறை அருளால் திருஅவைக்குள் முளைவிட்டன. தொடர்ந்து திருத்தந்தை 6ம் பவுல் (1963 – 1978) திருஅவையின் மறுமலர்ச்சிக்கு சிறு கிறிஸ்தவ குழும முறையே மிகச் சிறந்தது என தொடர்ச்சியாக வலியுறுத்தத் தொடங்கினார். “டெயி வேர்பும்” (DEI VERBUM 18, NOV,1965) “இறைவனின் வார்த்தை” எனும் சுற்றுமடலில் 6ம் அத்தியாயம் 21ம் இலக்கத்தில் “இறைவார்த்தை திருஅவையினதும், அதன் பிள்ளைகளின் வாழ்விலும், வாழ்வின் எல்லா சூழல்களிலும், பலமாகவும், ஆன்ம உணவாகவும் இருந்து துணை செய்கின்றது” என்கிறார்.

திருஅவையின் இப் “புதிய முறையில் திருஅவையாக” (New way of Being the church) எனும் பயணத்தில் இறைவார்த்தையை மையப்படுத்துவதும் அதன் வழி இறையரசைக் கட்டி எழுப்புவதுமே மேலானது எனும் ஆழமான சிந்தனை 2ம் வத்திக்கான் சங்கத்தில் ஆணித்தரமாக முன்வைக்கப்பட்டன. 2ம் வத்திக்கான் சங்கம் ஏற்படுத்திய இப்புதிய ஆன்மீக புரட்சியும் ஆதித் திருஅவை (Participatory church) எனும் உணர்வும், உலகின் பல நாடுகளிலும் தொடக்ககால அன்பிய திருஅவை வாழ்வை மையப்படுத்திய சிறு கிறிஸ்தவ குழுமங்களாய் தோன்றுவதற்கு வழிவகுத்தன.


**சிறு கிறிஸ்தவ குழுமங்களும் - பெயர்களும்.**

காலத்தின் தேவைக்கேற்ப சமூக, ஆன்மீக, கலாச்சார அமைவுக்கேற்ப பல நாடுகளிலும் சிறு கிறிஸ்தவ குழுமங்கள் பல வடிவங்களில் பரவத் தொடங்கின. இவைகள் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் “அடிப்படை கிறிஸ்தவ குழுமங்கள்” (Basic Christian communities BCC) எனும் பெயரிலும் ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் “அடித்தள திருஅவைக் குழுமங்கள்” (Basic Ecclesial communities – BEC) அல்லது “வாழும் கிறிஸ்தவ குழுமங்கள்” (Living Christian communities – LCC) அல்லது சிறு கிறிஸ்தவ குழுமங்கள்” (Small Christian communities – SCC) எனும் பல முறைகளில் தங்களது சமூக ஆன்மீக முக்கியத்துவத்திற்கும் தேவைக்கும் ஏற்ப பெயர் சூட்டப்பட்டு வளர்ந்து வந்துள்ளது. இவற்றில் ஒரு சில குழும வாழ்க்கை முறைகள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே சில நாடுகளில் சில படிமுறைகளால் பின்பற்றி, செயல்பட்டு வந்துள்ளதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இவ்வகை நீண்டகால வரலாற்று முயற்சிகள், மாற்றங்கள், வளர்ச்சிகளோடு ஆசிய திருஅவையும் தனது ஆசிய மக்களின் சமூக, ஆன்மீக, பொருளாதார வாழ்வின் அடிப்படையில் “புதிய முறை திருஅவையாக” (New way of Being the church) பிறப்பதற்கு முயற்சித்துக் கொண்டும் வழி தேடிக் கொண்டும் இருந்தது. உண்மையாகவே இது ஒரு தூய ஆவியின் தூண்டுதலும், செயலும் என்றே சொல்ல வேண்டும். காரணம் 1993 இல் ஆசிய ஆயர் குழுவின் சம்மேளனம் - (FEDERATION OF ASIAN BISHOPS' CONFERENCE FABC) இந்தோனேசிய நாட்டின் பாண்டுங் எனும் நகரில் ஒன்று கூடியதோடு, பங்கேற்கும் திருஅவையாக ஆசிய திருஅவையை வழிநடத்தக் கூடிய பொருத்தமான ஆன்மீக, சமூக, பொருளாதார வாழ்வும் உள்வாங்கப்பட்ட ஓர் பொறிமுறையையும் (Mechanism). அணுகுமுறையையும் (Approach) ஆழமாய் சிந்திக்கத் தொடங்கியது.

ஆசிய ஆயர் சம்மேளனத்தின் ஆழ்ந்த சிந்தனையில் ஆவியின் துணையோடு பிறந்தது தான் “ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை” (ஆங்கிலத்தில் ASIAN INTEGRAL PASTORAL APPROACH) இவ் ஆங்கில பதத்தின் முதல் எழுத்துக்களை எடுத்துத் தான் “அசிப்பா” (ASIPA) எனும் சொல் உருவாக்கப்பட்டு நாளடைவில் அதுவே பல ஆசிய நாடுகளில் சிறு கிறிஸ்தவ குழுமங்கள் அல்லது அன்பியங்கள் எனும் பதத்திற்கு பதிலாக பாவிக்கப்பட்டு வந்துள்ளது. (குறிப்பு : நைஜீரியா நாட்டின் அசுன் மாநிலத்தில் உள்ள ASIPA எனும் பட்டினத்திற்கும் நாம் குறிப்பிடும் ASIPA எனும் பதத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது).

காலப்போக்கில் “அசிப்பா” (ASIPA) எனும் சொல் பாவனையைத் தொடர்ந்து இந்தியாவில் “தீபா” எனும் சொல் கிறிஸ்தவ குழுமங்களை குறிக்க பயன்பட்டது. (DIIPA – Developing Indian Integral Pastoral Approach) இன்னும் பொருத்தமாக நாளடைவில் “அன்பியம்” எனும் பதம் இந்தியாவின் கோட்டாறு மறைமாவட்டத்தில் தோன்றி பல தமிழ் பேசும் பகுதிகளுக்கும், மறைமாவட்டங்களுக்கும் பரவத் தொடங்கியது. அன்பியம் எனும் பதம் கூட “Animating New Pastoral integral Approach for Mission” (ANPIAM) “உயிரோட்டமுள்ள பணிக்கான புதிய மேய்ப்புப்பணி ஒருங்கிணைந்த அணுகுமுறை” எனும் சிந்தனையில் இருந்து எடுக்கப்பட்ட முதல் எழுத்துக்களின் தொகுப்பு என்பதையும் நாம் அறிய வேண்டும். ஆயினும் இன்று தமிழ் பேசும் நாடுகளிலும், மறைமாவட்டங்களிலும் அனேகரின் மனங்களில் இலகுவாக “அன்பியம்” எனும் பதம் பதிந்து விட்டது மட்டுமல்ல அதையே அனேகரும் பாவிக்க விரும்புகின்றனர். காரணம் இப்பதம் சிறு கிறிஸ்தவ குழும வாழ்வின் மையத்தையும் அதன் தன்மையையும் எளிதாக சுட்டிக் காட்டுவதால் தான். அன்பு வாழ்வை இயல்பாகக் கொண்ட வாழ்க்கை முறை ஆதித் திருஅவையில் இருந்தது போல இன்றும் அன்பியங்கள் சிறு கிறிஸ்தவ குழுமங்களாய் கூடி வரும்போது அனைத்திலும் அன்பே மையமாக இருந்து



நம் கிறிஸ்தவ சமூக வாழ்வை வழிநடத்த வேண்டும்.


**அன்பியங்களின் அணுகுமுறை : (APPROACH)**

ஒருங்கிணைந்த அணுகுமுறையாக இருக்க வேண்டும். (Integral Approach)

சிறு கிறீஸ்தவ குழுமங்கள் கூடி வரும் போது அல்லது பங்குத் திருஅவையிலோ, மறைமாவட்ட திருஅவையிலோ, குழந்தைகள், இளையோர், வளர்ந்தோர், முதியோர், நோய்வாய்ப்பட்டோர் என பலரும் பலவிதமான உடல், உள, ஆன்மீக தேவையுள்ளோராய் இருப்பார்கள். இவர்கள் அனைவரின் தேவைகளும் மதிக்கப்பட்டு கருத்தில் கொள்ளப்பட்டு கூடுமான வரையில் அன்பிய உறுப்பினர்களாய் இணைந்து இவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போது அன்பியங்கள் ஒருங்கிணைந்த தன்மை கொண்டதாய் அமைகின்றது.

உதாரணமாக : குறிப்பிட்ட ஓர் அன்பிய குழுவில் வறிய குடும்பங்கள் வாழ்கின்றார்கள். ஞாயிறு திருப்பலிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சில குடும்பங்கள் வாழ்கின்றார்கள். சில தவறான வழியில் வாலிபர்கள் வழிதவறிப் போகின்றார்கள். கல்வி அறிவு பெற வசதி இல்லாதவர்கள் இருக்கின்றார்கள் எனவே இவ்வகை சூழல்களில் இவர்களின் ஆன்மீக தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அன்புச் சமூகமாய் சகோதர உணர்வோடு சரி செய்யப்பட வேண்டும். நம்பிக்கையை கொடுக்கிறவர்களாய் சிறு கிறிஸ்தவ குழும உறுப்பினர்கள் மாற வேண்டும்.

* * * * * *




**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு
வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மன்னார் மறைமாவட்ட வரலாற்றுத் தடங்கள்"

# மன்னார் கத்தோலிக்கத் திருஅவையின் தனித்துவமான ஆரம்பகால வரலாறு முதல் புனித யோசேவ்வாஸ் அடிகளின் வருகைவரை

சென்ற மாத தொடர்ச்சி

**4.5. வளர்ச்சிப்படிகள்**

**4.5.1. கிறிஸ்தவர்களல்லாதோருடன் உரையாடல்**

ஹென்றிக்கஸ் அடிகள் தென் இந்தியாவில் பயனுள்ள முறையில் அமைத்திருந்த ஒரு மறையறிவிப்பு முறையை மன்னாரிலும் அறிமுகப்படுத்தினார். அதுதான் கிறிஸ்தவர் அல்லாதோருடன் உரையாடல். இந்த அணுகுமுறை கிறிஸ்தவரல்லாதோருக்கு மட்டுமல்ல கிறிஸ்தவர்களுக்கும் பயனளித்தது. கிறிஸ்தவர்கள் தமது மறையறிவை ஒழுங்காக ஆதாரபூர்வமாக அதிகரிப்பதில் ஆர்வம் காட்டினர். கிறிஸ்தவரல்லாதோரும் கிறிஸ்தவத்தைப் பற்றி இதுவரை கொண்டிருந்த தப்பெண்ணங்களையும், சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தனர். இந்த உரையாடல்கள் சுமூகமான சூழலில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**4.5.2. உயர் திருஅவை அதிகாரிகளது தரிசிப்புகளும் அவதானிப்புகளும்**

**4.5.2.1. ஆயர்களின் தரிசிப்பு**

1560ம் ஆண்டு யாழ்ப்பாண அரசன் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பின் மன்னாரில் தங்கியிருந்த கொச்சின் ஆயர் ஜோர்ச் ரெமுடோ O.P. ஆண்டகை இந்தியாவிலிருந்து மன்னாருக்கு பரதகுல கிறிஸ்தவர்கள் கொண்டுவந்து குடியேற்றப்பட்ட போது அவர்களை வரவேற்ற பின், 1566ம் ஆண்டு மன்னாருக்குத் தமது உத்தியோகபூர்வ தரிசிப்புக்கு வந்திருந்தார். இத்தரிசிப்பு ஏப்ரல்-மே மாதங்களில் இடம் பெற்றது. மன்னார் மறைத்தளம் குறுகிய காலத்தில் அடைந்த வளர்ச்சியை அவதானித்த ஆயர் அங்கு யேசு சபையினரின் கல்லூரி (உயர்கல்வி நிலையம்) ஒன்று ஆரம்பிக்கலாம் என்று கருதி கட்டிடப்பணிகளை முன்னெடுக்க ஒரு தொகைப் பணத்தையும் வழங்கினார். இக்கல்லூரி தமிழில் தமது புலமையை ஆழப்படுத்த விரும்பும் யேசு சபைக் குருக்களுக்கான வசதிகளையும், சூழவுள்ள தமிழ் மறைத் தளங்களில் பணியாற்றும் குருக்கள் வந்து சற்று ஓய்வெடுத்துச் செல்லும் இடமாகவும் அமையலாம் என்பதும் ஆயரின் திட்டமாயிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் இத்திட்டம் கைகூடாது போயிற்று. சீரான வரும் படியில்லாத முத்துக்குளிப்பு, அடிக்கடி மன்னாரில் பரவிவந்த கொள்ளை நோயும் மக்கள் இதனால் இந்தியாவுக்கு இடம் பெயர்தல் ஆகியவை காரணிகளாக இருந்திருக்கலாம். அத்துடன் இக்கல்லூரிக்கும் முதல்வராக இருக்கவிருந்த ஹென்றிக்கஸ் அடிகளின் சிறந்த உடல் நிலைக்கு ஏற்ற சுவாத்தியமும் மன்னாரில் இல்லை. அத்துடன் மன்னாரில் வந்து குடியேறிய கணிசமான தொகையினர் இந்தியாவுக்குத் திரும்பிச்செல்ல அவர்களுடன் சில குருக்களும் (ஹென்றிக்கஸ் அடிகள் உட்பட) சென்றனர். இறுதியில் இக்கல்லூரி தென் இந்தியாவில் புன்னைக்காயலில் அமைந்தது. ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகள் அதன் முதல் முதல்வர் ஆனார்.

இன்னுமொரு ஆயர் தரிசிப்பு 1570ம் ஆண்டு இடம் பெற்றது. இம்முறை கொச்சின் ஆயராக இருந்தவரும் டோமினிக்கன் சபையைச் சேர்ந்த டொம் ஹென்றிக் டி தவோரா என்பவரே அவர். அப்போது மன்னாரில் பணியாற்றிய குருக்கள் இவரது எளிமை, தாழ்ச்சி மற்றும் சாதூரியமான செயற்பாடுகளால் திருப்தியடைந்ததாகத் தெரிகின்றது. 1591ம் ஆண்டு கொச்சின் ஆயராயிருந்த பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அண்ட்ரே டி சாந்த மரியாவின் தரிசிப்பும் இடம்பெற்றது. அப்போது இடம்பெறுக் கொண்டிருந்த முத்துக்குளித்தல் பணியையும் இவர் சென்று பார்வையிட்டார்.

**4.5.2.2. யேசு சபைத் தலைமைப்பீடத்தின் சார்பிலான தரிசிப்புக்கள்**

1570ம் ஆண்டு முதல் தடவையாக யேசு சபையினர் கொன்சாலோ அல்வாறெஸ் அடிகளைத் தரிசிப்பாளராக மன்னாருக்கு அனுப்பினர். இத்தரிசிப்பு குருக்களுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. இவர் சென்ற கிராமங்களிலெல்லாம் மக்கள் இவருக்கு உற்சாக வரவேற்பளித்தனர். 1574ம் ஆண்டு அடுத்த யேசு சபைத் தரிசிப்பாளராக வலிஞ்ஞானோ அடிகள் மன்னாருக்கு வந்தார். இவரது உணர்வலைகள் இந்திய தரிசிப்பு முடிவு களையும் பார்க்க மன்னார் தரிசிப்புப்பற்றிச் சிறப்பானவையாக இருந்தன. மன்னாரில் கிறிஸ்தவர்களே முற்றுமுழுதாகத் தம் மத்தியில் பணிபுரியும் குருக்களைத் தாபரிக்கின்றனர் என்று இவர் குறிப்பிடுகின்றார். மேலும் 1577ம் ஆண்டு தமது தரிசிப்பின் இறுதியில் விடுத்த அறிக்கையில் ஹென்றிக்கஸ் அடிகளின் வழிநடத்தலில் (இந்தியா சென்ற பின்னும் ஹென்றிக்கஸ் அடிகள் தென் இந்திய - மன்னார் மறைத் தளங்களை உள்ளடக்கிய யேசு சபைக் குழுமத்தின் முதல்வராகத் தொடர்ந்தார்.) மன்னார் மக்களும் அருளடையாளங்களைப் பெறுவதில் முன்மாதிரிகையான கிறிஸ்தவர்களாக விளங்கினர் என்று குறிப்பிடுகின்றார்.

அருட்பணி. மங்களராஜா
புனித சவேரியார் குரும்டம், யாழ்ப்பாணம்

**4.5.2.3. இலங்கை பிரான்சிஸ்கன் சபை முதல்வரின் தரிசிப்பு**

இலங்கை பிரான்சிஸ்கன் சபைக் குழுமத்தின் முதல்வர் ஜோவாவோ டி வில்லா டொ கொண்டே அடிகள் 1567ல் மன்னாருக்கு (மன்னார் தீவில் பிரான்சிஸ்கன் சபையினருக்கு ஒரு ஆலயம் இருந்தது) வந்து யேசு சபையினரின் விருந்தாளியாகச் சில நாட்கள் எருக்கலம்பிட்டியில் உள்ள அவர்களது இல்லத்தில் தங்கியிருந்தார். அவர் பெரும் தொகையான சிறுவர்கள் ஆர்வத்துடன் மறைக்கல்வி பயில வருவதையும், கிறிஸ்தவர்களது பணிவையும் அவர்கள் ஆலயத்திற்கு பக்தியுடன் அடிக்கடி வந்து செபிப்பதையும், குருக்கள் மட்டில் அவர்கள் காட்டும் அன்பையும் பார்த்து அதிசயித்தார்.

**4.5.3. இன்னுமொரு மறைசாட்சியத்தில் வெளியிடப்பட்ட இறை நம்பிக்கை**

1544ம் ஆண்டு இடம் பெற்ற மறைசாட்சிய நிகழ்வில் வெளியிடப்பட்ட மன்னார் மக்களின் இறை நம்பிக்கை உண்மையில் அழமானது என்பதை எண்பிக்க 1566ம் ஆண்டு இடம்பெற்ற இன்னுமொரு சம்பவம் சான்று பகர்கின்றது. இதற்கு 1560ம் ஆண்டிலிருந்து மன்னார் மக்கள் பெற்ற மறையறிவும் கிறிஸ்தவ வாழ்வு அனுபவமும் காரணம் என்று



கூறலாம். 05.12.1566ல் ஜி. பாய்ஸ் எனும் யேசு சபைக்குரு கோவாவிலிருந்து எவ். வாஸ் எனும் இன்னுமொரு யேசு சபைக்குருவுக்கு எழுதிய மடலில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார். சில கிறிஸ்தவர்கள் மன்னாரில் இருந்து கோவாவிற்கு ஒரு சிறிய கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்பகுதிக் கடலில் வழமையில் கடற் கொள்ளையில் ஈடுபடும் சில முஸ்லிம்களின் பிடியில் இவர்கள் சிக்கினர். கப்பலில் இருந்த 6 கிறிஸ்தவர்கள் பிடிக்கப்பட்டு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவினால் தான் விடுவிக்கப்படுவார்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் தங்களுக்கு எது நேர்ந்தாலும் பரவாயில்லை தாம் தமது கத்தோலிக்க திருமறையை விட்டுவிடுவதாக இல்லை என்று கூறி விட்டார்கள். அவர்களுள் 5 பேர் கொல்லப்பட்டார்கள். ஒருவர் ஏதோ வகையில் அவர்கள் பிடியிலிருந்து தப்பி கோவா வந்து அங்கிருந்த யேசு சபையினரது கல்லூரிக்கு வந்து சேர்ந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

**4.5.4. பிரத்தியேக மறைப்பணி – முத்துக்குளித்தல் காலத்தில்**

முத்துக்குளித்தல் காலத்தில் யேசு சபையினரது மறைப்பணி குறிப்பிடத்தக்கதொன்றாகும். சுறாமர் அடிகள் முத்துக் குளித்தல் பற்றி விபரமாக எழுதுகின்றார். (பெரிய முத்துக் குளித்தல் - மார்ச்சில் இருந்து ஏப்ரல் வரை 20-30 நாட்கள் நீடிப்பது, சிறிய முத்துக்குளித்தல் - செப்ரெம்பர் 18-20 நாட்கள் நீடிக்கும்.) இதில் ஈடுபடுவோர் தமது மனைவி மக்களை விட்டு விட்டு மாதோட்டம் தெற்கில் உள்ள முசலிப் பகுதிக்கு வருவர். அவர்கள் அரிப்பில் இருந்து தெற்கு நோக்கி உள்ள சிலாவத்துறை, கொண்டச்சி, கல்லாறு, மறிச்சுக்கட்டி பின்னர் குதிரை மலை வரைக்கும் உள்ள கிராமங்களில் தற்காலிக கொட்டகைகள் அமைத்துத் தங்கியிருப்பர். இப்போதும் இப்பகுதிக் கடற்கரையோரங்களில் சிப்பிக் குவியல்களைக் காணலாம். முத்துக்குளித்தல் இல்லாத நாட்களில் இப்பகுதி வெறிச்சோடியிருக்கும். முத்துக்குளித்தல் நாட்களில் திடீரென 50,000 - 100,000 பேர் வரை இக்கரையோரங்களில் முகாமிட்டிருப்பர். இங்கு பரவர்கள், கரையார்கள், மறவர், சிங்களவர், முஸ்லீம்கள், மற்றும் பலர் முத்துக்குளித்தலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுபவர்கள் இருப்பர். அக்காலத்தில் சீனமுத்துக்கள் மிகவும் வெண்மையாகவும், பேர்சியக்குடாவில் பாறெய்ன் பகுதியில் எடுக்கப்படும் முத்துக்கள் மிகவும் உருண்டை வடிவாகவும் இங்கு எடுக்கப்படும் முத்துக்கள் சற்று சிறியதாக (பாலைப்பழ அளவில்) இருந்தாலும் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டன. பரதகுல மக்களின் மதமாற்றத்தின் பின் பெரும்பாலான சுழியோடிகள் கிறிஸ்தவர்களாக இருந்தனர். ஏறக்குறைய 12,000 சுழியோடிகளில் 7000 பேர் கிறிஸ்தவர்களாயிருந்தனர். முக்கியமான பெரிய முத்துக்குளித்தல் தவக்காலம் - புனித வாரத்தில் இடம்பெற்று வந்ததால் அங்கு யேசு சபையினரால் பராமரிக்கப்பட்டு வந்த இப்பரதகுல மக்களது ஆன்மீக நலன்களைக் கவனிக்க அவர்களே வந்தனர். (ஏற்கெனவே அரிப்பில் இருந்த பிரான்சிஸ்கன் சபைக் குருவால் இத்தகைய பெரிய மக்கள் தொகையைப் பராமரிப்பது முடியாத காரியமாக இருந்திருக்கும்) அத்துடன் முத்துக்குளித்தல் சம்பந்தமாகப் பல மூட நம்பிக்கைகள் மற்றும் பேய்க்காரியங்கள் இன்னமும் வழக்கில் இருந்ததால் இவற்றைத் தவிர்க்கக் குருக்களின் பிரசன்னம் தேவையாக இருந்தது எனலாம். அத்துடன் கிறிஸ்தவரல்லாதோர் பலர் கிறிஸ்தவர்களோடு ஒன்று கூடும் இது போன்ற இடங்களில் மறையறிவிப்பும் இடம்பெற வாய்ப்புக்கள் இருந்தன. றொட்றிகஸ் அடிகள் யேசு சபையின் தரிசிப்பாளராக இப்பகுதிக்கு வந்தபோது கொச்சினில் இருந்து கொச்சின் பகுதி யேசு சபை முதல்வர் உட்பட ஐவர் 1582ம் ஆண்டு தவக்காலத்தில் முத்துக்குளித்தல் பகுதிக்கு (முசலிப் பகுதி) ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவதில் தமது பெரும்பாலான நேரத்தைச் செலவழித்ததாகவும் பல மன மாற்றங்கள் இடம்பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார். பின்னர் 1599ல் யேசு சபைத் தரிசிப்பாளர் பிமென்ரா அடிகள் முத்துக்குளித்தல் துறையையும் தரிசித்து சபை முதல்வருக்கெழுதிய மடலில் அப்பகுதியில் யேசு சபையின் பிரசன்னமின்றிச் சட்டம், ஒழுங்கைப் பேணுவது சிரமம் என்றும் 16ம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில் யேசு சபையினர் வருடம் தோறும் அங்கு செல்வது வழக்கம் என்றும் பரதகுலக் கிறிஸ்தவர்கள் அப்பகுதியில் மூன்று ஆலயங்களும் அங்கு குருக்கள் வரும் போது தங்குமிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்று குறிப்பிடுகின்றார்.

**4.6. பின்னடைவுகள்**

மன்னார் மாதோட்டப் பகுதியை உள்ளடக்கிய மறைத்தளம் சில பின்னடைவுகளையும் இக்காலத்தில் எதிர்நோக்க நேர்ந்தது. இப்பின்னடைவுகள் கூடுதலாக கத்தோலிக்கர் செறிவாக வாழ்ந்து வந்த மன்னார் தீவு மறைத்தளங்களையே பாதித்ததெனலாம்.

**4.6.1. நோய்ப்பரவலும் இடப்பெயர்வும்**

மன்னார்த்தீவில் பெரும்பகுதியான நிலப்பரப்பு காய்ந்து, வரண்டு செழிப்பற்றதாகவேயிருந்தது. அத்துடன் அங்கு அடிக்கடி பரவும் நோய்த்தாக்கம் வந்து குடியேறிய மக்களை மனம் தளர வைத்தது. வந்து ஒரு வருடம் முடிவதற்குள்ளேயே அவர்கள் திரும்பிச் செல்வது பற்றி எண்ணத் தொடங்கினர். அத்துடன் தென்னிந்தியாவில் இருந்தபோது அவர்களுக்குச் சிம்மசொற்பனமாக விளங்கிய மதுராவின் அரசன் விஸ்வநாதா இறந்த செய்தி கிடைத்ததும் அவர்கள் திரும்ப இந்தியா செல்வது பற்றித் தீவிரமாகச் சிந்தித்தனர். அந்தவேளை மன்னார் போர்த்துக்கேய கப்டனாயிருந்த ஜோர்ஜ் டி மெல்லோ டி காஸ்ட்ரோவின் வற்புறுத்தலால் அவர்களை அப்போதைக்குத் தடுக்க முடிந்தது. அப்போதைக்கு இம் மக்கள் தம்மோடு வந்த குருக்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்தமையால் இந்தியா திரும்பவில்லை. 1564ம் ஆண்டு மன்னாரில் கொடிய கொள்ளைநோய் ஏற்பட்டு மக்களுக்குச் சொல்லெண்ணாத் துயரைக் கொடுத்தது. அங்கு பணியாற்றிய பெரேரா அடிகள் உட்பட 4000 மக்கள் மடிந்தனர், பஞ்சமும் அவர்களை வாட்டியது. அவ் வருடம் முத்துக்குளித்தலும் இடம் பெறவில்லை. குருக்கள் எங்காவது பணம் திரட்டி உணவு கொள்வனவு செய்ய முயன்றும் அம்முயற்சியும் கை கூடவில்லை இறப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்தது என்றால் பலர் இறுதிச்சடங்குகள்,- (நோயில் பூசுதல்) ஒப்புரவு அருளடையாளம் பெறாமலே இறந்தனர். இறுதியில் பெருமளவிலான மக்களும் ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகளார் உட்பட சில குருக்களும் தங்கள் பழைய கிராமங்களுக்கு (தென் இந்தியாவிற்கு) சென்றனர். இந்த அவலங்கள் மன்னார்தீவில் இறையரசின் வளர்ச்சியைப் பாதித்தாலும் அங்கு தங்கியிருந்தவர்கள் தமது இறை நம்பிக்கையை இழக்கவில்லை. இவற்றின் மத்தியிலும் ஒருவர் ஒருவருக்கு உதவுவதிலும், வைத்தியசாலைகள் மற்றும் 'மிசறிக்கோர்டியா' எனும் இரக்க இல்லத்திற்கும் தம்மாலியன்ற உதவிகளை தமது இயலாமையிலும் வழங்கி வந்தனர்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாஸ்கா விழாச் சிறப்புப் பக்கம்

# உயிர்ப்பின் செய்தி

வி.ஜெ.யேசுதாஸ்
புகுமுக மெய்யியல்

கத்தோலிக்கர்களாகிய எமக்கு திருவழிபாட்டு ஆண்டின் விழாக்கள் வெறுமனே விழாக்களாகவே முடிந்து விடுகின்றன. விழாக்களைத் தாண்டி விழாக்கள் ஊடாக இறைவன் ஒவ்வொருவருக்கும் தருகின்ற தனிப்பட்ட செய்திகளை தேடுகின்ற நெஞ்சங்கள் எம் மத்தியில் குறைந்து வருகின்றன. மகிழ்ச்சியோடும் குதுகலிப்போடும் கிறிஸ்து பிறப்பில் ஆரம்பித்து, பின் முகவாட்டத்தோடும் நெற்றியில் சாம்பலோடும் தவக்காலத்திற்குள் புகுந்து, பிறர் அறிய நோன்பிருந்தும் பிறர் அறியா நோன்பிருந்தும் வெளியில் கவலையோடும் துக்கத்தோடும் ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மரணத்தை அனுசரித்து, விட்ட குடி மீண்டும் தொடர்வதற்கும், கோழியின் தொடைகளை ருசி பார்ப்பதற்கும், பத்தாயிரத்தில் பட்டுச்சாறி உடுத்துவதற்கும் வந்ததையா உயிர்ப்பு ஞாயிறென்று ஆண்டவரின் உயிர்ப்பைக் கொண்டாடி, இடைநடுவே நம் ஆலயங்கள் பெயர் தாங்கி நிற்கின்ற புனிதர்களின் விழா என்ற பெயரில் முதலாம் நாளை புனிதரின் கொடியில் தொடங்கி இறுதி நாளை நம் ஆண்டவரின் குடியில் முடித்து ஒரு மாதிரி ஓர் திருவழிபாட்டு ஆண்டின் விழாக்களை முடித்து மீண்டும் அடுத்த திருவழிபாட்டு ஆண்டில் கொண்டாட்டங்களுக்காக விழாக்களை எதிர்பார்க்கின்ற சாதாரண மக்களாகவே நாம் மாறி வருகின்றோம். ஆனால் விழாக்களையும் தாண்டி ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு விழாக்கள் ஊடாகவும் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட செய்திகளை தருகின்றார். ஆனால் எம்முடைய செவிகளை ஆண்டவரின் செய்திகளிற்கு திறந்து வைத்திருக்கின்றோமா என்பது கேள்வி. இதனால் தான் நம் ஆண்டவர் தன்னுடைய போதனைகளின் இறுதியிலே அடிக்கடி உரத்துக் கூறிய வார்த்தை " கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் " (லூக்கா 8:8). இன்றும் ஆண்டவர் உரத்துச் சொல்லுகின்றார். " என் உயிர்ப்பின் ஊடாக நான் தருகின்ற செய்தியை கேட்க செவியுள்ளவன் கேட்கட்டும்".

அன்பானவர்களே இவ்வுலகில் ஆண்டவர் இயேசு வாழ்ந்த வாழ்வின் ஒவ்வொரு விநாடிகளும் இறைதந்தையின் திருவுளப்படியே அமைந்திருந்தன. இறைதந்தையின் திட்டப்படி அவர் மண்ணுலகிற்கு வந்தார். பாவம் தவிர மற்ற அனைத்திலும் நம்மைப்போல வாழ்கை நடாத்தினார். சென்ற இடமெல்லாம் நன்மை செய்தார். செவிடரை கேட்கச் செய்தார். குருடரை பார்க்கச் செய்தார். பேச்சிழந்தவரை பேசச் செய்தார். முடவரை நடக்கச் செய்தார். நோய்களை குணமாக்கினார். பேய்களை ஓட்டினார். நற்செய்தியை பறைசாற்றினார். தம் இறைவல்லமையால் மக்களின் ஆன்மீக மற்றும் வயிற்றுப் பசியை போக்கினார். மக்கள் முன்னிலையில் அற்புதங்களை செய்தார். தீய உள்ளம் கொண்டோரை கண்டித்தார். பாவிகளை மனம் திருப்பினார். எல்லா இடங்களிலும் மக்கள் அவரைத் தேடத் தொடங்கினார்கள். மக்களின் பார்வைப் பொருளாகவே அவர் மாறினார். இப்படியாக இறைவனின் திட்டங்கள் இதமாகவும் சுகமாகவும் அரங்கேறிய போது இயேசுவின் பாடுகள் அரங்கேற வேண்டிய காலம் வந்தது. இயேசுவும் தாம் அனுபவிக்கப் போகின்ற இந்த பாடுகள் மிகவும் துன்பம் நிறைந்தவை என்பதை அறிந்து ஆழ்துயரம் கொண்டவராய் தந்தையை நோக்கி முடியுமானால் அந்த துன்பக் கிண்ணத்தை தன்னை விட்டு நீக்குமாறு மன்றாடினார். ஆனால் தன்னுடைய வேண்டுதலின் இறுதியிலோ " ஆனாலும் என் விருப்பப்படி அல்ல: உம் விருப்பப்படியே நிகழட்டும்" (லூக்கா 22:42) என்று தன்னுடைய வாழ்வின் இறுதிக் கணத்தையும் தன்னுடைய தந்தையின் திருவுளத்திற்கு அர்ப்பணித்தார். அனைத்தும் நன்றாக தானே அரங்கேறிக் கொண்டிருந்தன. நடுவில் ஏன் நம் ஆண்டவருக்கு இந்த பாடுகள், மரணம்? நேரடியாக விண்ணேற்றம் என்ற பகுதியை அரங்கேற்றியிருக்கலாமே! என்ற எண்ணம் எம்மில் சிலருக்கு எழலாம். எலியாவை எடுத்துக் கொண்டதைப் போல் நம் ஆண்டவரையும் எடுத்துக்



கொண்டிருக்கலாமே! அவர்தான் இரத்த வியர்வை சிந்தி மன்றாடினாரே!அவர்தம் மன்றாட்டை தந்தை கேட்டிருக்கலாமே! மனிதராக இவ்வுலகிற்கு வந்ததை தவிர அவர்செய்த பாவம் என்ன? இவ்வாறான பல கேள்விகள் எம்மில் எழலாம். ஆனால் அனைத்து கேள்விகளிற்கும் வேதாகமத்தில் ஒரே இடத்தில் பதிலைக் காணலாம். "கடவுள் எல்லாவற்றையும் தமக்கென்று தாமே உண்டாக்கினார். அவர் மக்கள் பலரை மாட்சியில் அழைத்துச் செல்ல விரும்பியபோது, அவர்களது மீட்பை, தொடங்கி வழிநடத்துபவரை துன்பங்கள் மூலம் நிறைவுள்ளவர் ஆக்கினார். இது ஏற்ற செயலே" (எபிரேயர் 2:3). ஆம் ஊனின் இயல்பைக் கொண்ட எம்மைப்போல் நம் ஆண்டவரும் அதே இயல்பில் பங்குகொண்டு சாவின் மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையை அழிக்கவேண்டும் என்பதே, தந்தையின் திருவுளம். அன்பாவனவர்களே, நம் ஆண்டவரை மனித வாழ்வில் தந்தை நிறைவுள்ளவராக்கினார். இதனால் நாம் நம் ஆண்டவருக்கு நம்முடைய வாழ்வைப்பற்றி என்ன தெரியும்? எங்களுடைய வேதனைகளை பற்றி என்ன தெரியும்? எங்கள் துன்பங்கள் பற்றி என்ன தெரியும்? என்று ஒருபோதும் கேட்டிட முடியாது. ஏனெனில் அவர் மனிதனாக வாழ்ந்தார். வெற்றி கரமாக வாழ்ந்து முடித்தார். இதனால் நம் ஆண்டவர் எம்மைப் பார்த்து கேட்கின்ற கேள்வி "உன்னைப் போல வாழ்ந்து துன்பம் நிறைந்த பாடுகள், மரணத்தை தாண்டி உயிர்ப்பின் மாட்சியை சுவைத்த நான், உன்னை உன் நாளாந்த வாழ்விலேயே உயிர்ப்பிக்க தயாராக இருக்கின்றேன். ஆனால் உயிர்க்க நீ தயாரா?" உண்மையைக் கூறின் உள்ளத்தால் இறந்து வெறுமனே உடல் மட்டும் எஞ்சிய நடை பிணங்களாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது எமது ஆன்மாவை உயிர்ப்பிக்க வேண்டிய தருணம். ஏனெனில் எம் உள்ளங்கள் போட்டியாலும் பொறாமையாலும் நிறைந்து போய் கிடக்கின்றன.

எம்மவர் உள்ளங்களில் இரக்கம் இறந்து போய் விட்டது. அன்பு என்ற நதி பாய்ந்தோடிய எம் சமூகத்திலே அன்பு என்ற குட்டையைக் கூட அடையாளம் காண முடியாதிருக்கின்றது. ஊருக்காய் மண்ணுக்காய் வீட்டுக்கென்று ஒரு ஆள் அனுப்பிய எம் இனம் இன்று எனக்கு, எனது குடும்பத்திற்கு என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆண்டவர் தம் உயிர்ப்பினால் இஸ்ரயேல் இனம் மட்டுமே ஆண்டவருக்குரிய இனம் என்ற நிலையை மாற்றி நாடு தாண்டி மொழி வேறுபாடு கடந்து இன வேறுபாடு கடந்து அனைத்தின மக்களையும் இறைவனுக்குரிய பிள்ளைகளாக உருமாற்றியிருக்கின்ற வேளையிலே, எம் சமூகமோ தன் இனத்துக்குள்ளேயே, தன் பங்குகளுக்குள்ளேயே சாதிக்கு ஓர் கோவில் என பிரிந்து வாழும் அவல நிலையிலே இருக்கின்றது. எம் சமுதாயம் கல்வியிலே கடை நிலையிலும், ஆனால் போதைவஸ்து பாவனையில் முதலிடத்திலும் என தரவரிசையில் நீடிக்கின்றது. களியாட்டங்கள் அதிகரித்து கருணைச் செயல்கள் உருவிழந்து போய் விட்டன. காமத்தின் மோகத்தில் தாய்க்கும், மகளுக்கும், உடன் பிறந்த சகோதரிக்கும் வித்தியாசம் தெரியாது மிதந்து கொண்டிருக்கின்றது எம் சமூகம். பங்கில் அயலவனோ பட்டியால் சாகின்றான் பங்குத் திருச்சபையோ ஆலயவிழா என்ற போர்வையில் வான வேடிக்கைகள் காட்டி காசெல்லாவற்றையும் கரியாக்கிக் கொண்டிருக்கின்றது. எம் சமூகம் மன்னிக்கும் மனப்பாங்கை மண்ணுக்குள் புதைத்து விட்டது. கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும், காட்டி கொடுப்புக்களும், அரசியல் நாடகங்களும், துரோகங்களும் கொடி கட்டி பறக்கின்றன. இப்படியான சூழலிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற உன்னையும் என்னையும் பார்த்து ஆண்டவர் கேட்கின்றார். "உயிர்ப்பிக்க நான் தயார். உயிர்க்க நீ தயாரா? தயாரெனில் நான் என்னை என் தந்தையின் திருவுளத்திற்கு ஒப்புக்கொடுத்தது போல் நீயும் உன்னை ஒப்புக்கொடு".

அன்பானவர்களே ஆண்டவர் தன்னுடைய உயிர்ப்பினாலே எம்மை தந்தையின் உரிமைச் சொத்தாக்கினார். இதனை ஆண்டவர் இயேசு தன் உயிர்ப்பின் பின் மகதலா மரியாவுக்கு கூறிய வார்த்தைகளில் இருந்து விளங்கிக் கொள்ளலாம். "நீ என் சகோதரர்களிடம், என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்ல இருக்கிறேன் எனச் சொல்" (யோவான் 20:17) என்றார். ஆண்டவர் எம்மை தமது சகோதரர் ஆக்கினார். "தூய்மைக்குகிறவர், தூய்மையாக்கப் படுவோர் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. இதனால் இயேசு இவர்களை சகோதரர் சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்பட வில்லை" (எபிரேயர் 2:11). ஆகவே நாம் ஆண்டவர் இயேசுவின் சகோதரர்கள் என்றால் நம் இறைதந்தையின் பிள்ளைகள் என்றால் அதனை நம்முடைய செயல்களில் காட்ட வேண்டும். நமக்கு முன்மாதிரிகை காட்டவே நம்மாண்டவர் தந்தைக்குரிய வாழ்வை இந்த உலகில் வாழ்ந்து காட்டினார்.

இன்று எம்மையும் தந்தையின் திருவுளப்படி வாழ அழைக்கின்றார். இந்த வாழ்க்கையை வாழுகின்ற போது நம் ஆண்டவர் அனுபவித்தது போல நரமும் துன்பங்கள் அனுபவிக்க நேரிடலாம். அப்பொழுது மகிழுங்கள், ஏனெனில் நாம் அடையப்போகும் கைம்மாறோ பெரிது. "இப்போது சிறிது காலம் நீங்கள் பலவகைச் சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும் அந் நாளிலே பேருவகை கொள்வீர்கள். "(1பேதுரு1:6) "என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லும் போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கப் போகும் கைம்மாறு மிகுதியாகும்" (மத்தேயு 5:11-12). உயிர்ப்பிக்க நம் ஆண்டவர் தயார். துன்பங்களைத் தாண்டி உயிர்க்க நாம் தயாரா?

# உயிர்ப்புத் தரும் புது வாழ்வு

சிலுவையிலே அறையுண்ட அதே கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர் பெற்று விட்டார். அவருடைய உயிர்ப்பினால் உலகம் முழுவதும் புத்துயிர் பெறுகின்றது. தனக்குள் இருந்த உயிரை உலகம் புதுப்பித்துகொள்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பால் கிறிஸ்துவின் உயிர்ப்பில் இது நிகழ்கின்றது. கடவுளோடு ஒப்புரவான வாழ்வு தான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு! கடவுளோடு ஒப்புரவாகிவிட்டோம். முறிந்த உறவு இணைக்கப் பட்டு விட்டது என்பதைக் காட்டும் வாழ்வு தான் கிறிஸ்துவில் நாமும் நம்மில் கிறிஸ்துவும் வாழும் வாழ்வு. இது தான் உயிர்ப்புத் தரும் புதுவாழ்வும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களே புதுவாழ்வும்

உயிர்ப்புக்கு முதன்முதலாக சான்று பகர்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் மனம் மாறுகின்றனர். கிறிஸ்துவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு கிறிஸ்துவில் அவர்கள் அறிந்திருந்த தன்மை மாறுகின்றது. இவ்வுலகில் அவருடன் வாழும்போது ஓரளவிற்குத் தான் அப்போஸ்தலர்கள் இயேசுவை புரிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது அறிவு அதற்கு மேல் போகவில்லை ஆனால் கிறிஸ்து உயிர்த்த பின் அவரைப் பற்றிய புது அறிவு அனைவருக்கும் கொடுக்கப்பட வில்லை அவரை விசுவசித்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் புதுத்தன்மையை உயிர்ப்பைப் புரிந்துகொள்ள முடிந்தது. தான் முதலில் சொல்லியவைகளின் பொருளை அவர்களுக்குத் தெளிவாக்குகின்றார். (லூக் 24:8) அவர்களது அகக் கண்களைத் திறக்கின்றார். (லூக் 24:31-35) அப் புது அறிவை முழுமைப்படுத்தும் பணி தூயஆவியிடம் விட்டுவிடப் படுகின்றது. அவர்களின் தன்னலம் புதிய சகோதரத்துவம் மலர்ந்து புதுச் சமூகம் உருவாகிறது. (தி.ப 2:42- 46)

**திருச்சபையின் புது வாழ்வு**

கிறிஸ்துவின் இடத்தைத் தூய ஆவியானவர் நிரப்புவதனால் கிறிஸ்துவின் பிரிவை அப்போஸ்தலர்கள் உணர்வதில்லை. கிறிஸ்து அவர்களோடு இருப்பதாக உணர்ந்து கிறிஸ்துவில் வாழ கிறிஸ்துவுக்காக வாழ தொடங்குகின்றனர். கடவுளின் திட்டப்படி புனித சின்னப்பர் தோன்றுகின்றார். கிறிஸ்துவைச் சந்தித்த இவர் கிறிஸ்தவ சபைகளை உருவாக்குகின்றார். "கிறிஸ்துவில் வாழ்வு" பற்றி கற்றுத்தருகின்றார்.

**கிறிஸ்துவில் வாழ்வு**

"கிறிஸ்துவில்" என்ற சொற்றொடரை புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தைத் தவிர மற்ற எல்லாத் திருமுகங்களிலும் பயன்படுத்துகின்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாம் கடவுளோடு ஒப்புரவா கின்றோம். அப்போது கிறிஸ்து நம்மில் குடிகொள்கிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மிலே உறைய வருகிறார். அதனால் நாம் கிறிஸ்துவின் அன்பில் சமாதானத்தில் வாழ தொடங்குகின்றோம். கிறிஸ்துவில் நாம் வாழ தொடங்கும் போது அது புது அனுபவமாகிறது, படைப்பாகிறது நம்மில் கிறிஸ்து வாழ்கிறார். இவ் வாழ்வைத்தான் புனித சின்னப்பர் "புதுப்படைப்பு" "புதுவாழ்வு" என்று கூறுகின்றார். ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதியதொரு படைப்பாகிவிட்டான் பழையன கழிந்தன இதோ புதியன தோன்றியுள்ளன (2கொரி 5:17)

**கிறிஸ்துவில் வாழ்வதால் வரும் விளைவுகள்**

புதிய வாழ்வு என்பது நாம் கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு வாழும் வாழ்கையாகும் இப்புதுவாழ்வு நம்மைப் புது மனிதர்களாக்கி நம்மேலே பல மாற்றங்களை ஏற்படுத்து கின்றது. நம்முடைய இயல்பிலே, இயற்கையிலே, வாழ்விலே வாழும் வழிகளிலே இப்புதுவாழ்வு ஊடுருவுகிறது.

**புதிய இனம்**

கிறிஸ்துவோடு நாம் புதிய வாழ்வு வாழ தொடங்கும்போது அவரிலே முற்றிலும் உறைந்து விடுகிறோம். நம்முடைய உணர்வுகள் எல்லாம் அவரில் ஒன்றிக்கின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணையும்போது புதிய இனமாகின்றோம். புதிய குலமாக உருப்பெறுவதால் நம்மிடையே முன்பிருந்த வேறுபாடுகள் மறைந்தே ஆகவேண்டும் கிறிஸ்துவிலே புதுவாழ்வு வாழ தொடங்குவதால் புதிய படைப்பாகின்றோம்.

→ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கா விழாச் சிறப்புப் பக்கம்

# உயிர்ப்பின் விளைநிலம் எம் உள்ளம்

அ. ஜஸ்மின் ஷறோன் - நானாட்டான்

"மனிதா நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்...!" இத்திரு வாக்கியம் விபூதிப்புதன் அன்று எம் நெற்றியிலே சாம்பலால் சிலுவை அடையாளம் இடும் போது எமக்கு கூறப்படும் இறைவார்த்தை. இவ்வார்த்தையை சற்று ஆழமாக சிந்தித்தோமேயானால் தொடக்கத்திலே கடவுள் மனிதனை மண்ணால் படைத்தார் என்று நாம் விசுவசிக்கின்றோம். அதே போன்று எமது இறுதிக்காலத்தில் நாம் உயிர்துறக்கும் போது நிலத்தில் உள்ள மண்ணை தோண்டி அதனுள்ளே இறந்த எம் உடலை அடக்கம் செய்கின்றார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இவ் இரண்டிற்கும் உள்ள இவ் இடைவெளியில் இவ் இறைவார்த்தையை அதன் அர்த்தத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் படைக்கப்பட்ட மனிதன் தன் சுயதேவைகளை பெற்று உயிர்வாழ தேவையான உணவுப்பொருட்களை மண்ணிலிருந்தே பெற்றுக்கொள்கின்றான். மூச்சுவிடும் காற்று இவ் இயற்கையில் இருந்தே கிடைக்கின்றது. இம் மண்ணில் நல்ல விளைச்சலை தரக்கூடிய மண்ணும் இருக்கின்றது. நல்ல விளைச்சலை தரமுடியாத மண்ணும் இருக்கின்றது. "அதன், அதன் தன்மையை பொறுத்து நிலம் தன் விளைச்சலை அளிக்கும்"

இதமான, மென்மையான மணல் மண்ணினால் நல்ல விளைச்சலை தரமுடியும். ஆனால் இறுக்கமான, வைரமான களிமண்ணினால் நல்ல விளைச்சலை பெரிதாக தரமுடியாது. அதே போன்று எமது மனம் எவ்வாறான மண்ணினால் தயாரிக்கப்பட்ட மனமாக இருக்கின்றது என்பதை இவ்விடத்தில் நாம் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது மனம் இளகிப்போன மனமா...! இல்லை இறுகிப்போன மனமா...!சற்று ஆழமாக சிந்திப்போம்.

இறுகிப்போன மண்ணிலே எப்படி நல்ல விளைச்சலை தரமுடியாதோ அதேபோன்று எம்மனமும் இறுகிப்போய் இருந்தால் சமுதாயத்திற்கு எம்மால் நல்ல விளைச்சலை நல்ல பலனை கொடுக்க முடியாது என்பது நிஜம். அதே போன்று இளகிப்போன சலிந்து கொட்டக்கூடிய, காற்றில் பறக்கக்கூடிய மணல் மண்ணைப்போல இளகிய மனம் இருந்தால் எம்மைவிட சிறந்த மனிதர் இவ்வுலகில் இருக்க முடியாது. எம்மால் எல்லா நல்ல விடயங்களையும் சிறப்பாக செய்ய முடியும், நல்ல கனிகளை கொடுக்க முடியும் ஏன் பிறருக்காக எம் உயிரையும் கூட கொடுக்கமுடியும். இவ்வாறான இளகிப்போன உள்ளங்கள் எம்மத்தியில் எத்தனை? எத்தனை? என்று எண்ணிப்பார்க்க முடியுமா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதனாக பிறந்த ஒரு குழந்தைக்கு இவ்வாறான இளகிப்போன மனம் இருந்தது. சிலுவையிலே அறையப்பட்டு உயிர் விடுமளவிற்கு மௌனித்து நின்ற தியாக தீபம் அது. மண்ணால் படைக்கப் பட்ட மனிதனின் பாவக்கறையை அகற்ற தன்னுயிரை இழந்த தியாக நெஞ்சம் அது. துயரத்தின் பாதையில் தூரவழி நடந்து,



துன்பங்களை தாங்கி, துயரங்களை கடந்து தன் தாயையே தரணிக்கு தாரைவார்த்து தந்து தலைமகனான அவர் நமக்காக உயிர்துறந்து எமக்கு மீட்பு பெற்று தந்தார். இறந்த அவர் மீண்டுமாக உயிர்பெற்றெழுந்தார். ஏன் இறந்தார்? எதற்காக மீண்டும் எழுந்தார்? என்ற கேள்வி எமக்குள் எழலாம்.

பிறந்த அவர் எமது பாவங்களை களைய ஒரே ஒருமுறை இறந்தார். மீண்டும் நாம் புது மனிதர்களாக பாவம் அற்ற தூய உள்ளம் படைத்தவர்களாக வெள்ளை மனம் கொண்ட உள்ளங்களாக நாம் வாழ அவர் மீண்டுமாக உயிர் பெற்றெழுந்தார். இவ் உயிர்ப்பின் வழியாக எம் நாளாந்த வாழ்க்கை முறை மாற்றமடைந்து இயேசுவோடு சேர்ந்து நாமும் உயிர்பெற்ற மக்களாக மாறவேண்டும். அப்போதுதான் அவர் எமக்காக பட்ட வேதனைகள், துன்பங்கள், கசையடிகள், முள்முடிகள், சிலுவைச்சாவு என்பவற்றிற்கு அர்த்தம் கிடைக்கும்.

உயிர்த்த ஆண்டவர் இயேசுவை எம் உள்ளங்களிலே தாங்கிய நெஞ்சங்களாக நாம் மாறவேண்டும். சிலுவை வழியாக மீட்பை பெற்றுத்தந்த ஆண்டவரின் உயிர்ப்பில் அன்பு, தியாகம், அமைதி, அர்ப்பணம், பொறுமை, தன்னடக்கம், பொதுநலம், தூய உள்ளம் போன்ற நற்கனிகள் பொதிந்து கிடக்கின்றன. அவரில் நாம் உயிர்தெழுந்து புதிய மனிதர்களாக மாறுவோமேயானால் மேலே கூறப்பட்ட நற்கனிகள் எமக்குள் இருக்க வேண்டும். நாளாந்த எம் வாழ்வில் இவற்றை நாம் கடைப்பிடித்து வாழ்ந்தோமேயானால் உயிர்த்த ஆண்டவர் இயேசு எம்மோடு பயணிக்கிறார் என்று நாம் உணரலாம். அதற்கு எதிர்மாறாக நமது நாளந்த வாழ்க்கை, சுயநலம், வெளிவேடம், போட்டி, பொறாமை, வெறுப்பு, காய்மகாரம், பேராசை போன்றவற்றால் நிரம்பிய வாழ்வாக அமைந்திருந்தால் நிச்சயமாக ஆண்டவரின் உயிர்ப்பில் எமக்கு பங்கு இல்லை. அவர் எம்முடன் பயணிக்க வில்லை என்றே கூறமுடியும். தடைகளை தகர்த்தெறிந்து தரணியை மீட்க வந்த கிறிஸ்து தாம்பெற்ற புதுவாழ்வை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பினார்.

இயேசுவின் வழியில் உயிர்ப்பு உண்டு என்ற அசையாத நம்பிக்கை எம்மில் வேரூன்ற வேண்டும். விண்ணக வாழ்வில் நிறைமகிழ்வை நாம் காணவேண்டும். எனில் மண்ணக வாழ்வில் கடவுளின் சாயலாக நாம் வாழவேண்டும். எம் உள்ளமும் அவரின் சாயலாக மலர வேண்டும். இறந்து உயிர்த்தவர் எவருமில்லை மானிட மகனான இயேசு உரைத்தவாறே உயிர்த்தெழுந்து எம்முடன் உயிர் வாழ்கின்றார் என்ற நம்பிக்கையில் நாம் வாழும்போது பல்வேறு தடைகளை உடைத்தெறிந்து வாழ்கை பயணத்தில் எதிர் நீச்சல்போட உறுதி தருகின்றது. இயேசுவின் உயிர்ப்பு எமக்கு விடுதலை வாழ்வை பெற்றுத்தருகின்றது.

நாளாந்தம் எமது வாழ்க்கை நிலையில் நாம் வாழும் அன்பற்ற மனநிலைக்கும், எமது பாவ வாழ்விற்கும், சுயநலமான செயற்பாடுகளுக்கும், தன்னலமான வாழ்விற்கும் நாம் மடியும்போது நாளாந்தம் எமது வாழ்வில் எம் உள்ளத்தில் ஆண்டவரின் உயிர்ப்பு தினந்தோறும் உள்ளார்ந்த இறையனுபவமாக மாறும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான பாவ நிலைகளுடன் நாம் வாழும்போது உள்ளத்தால் நாம் இறந்தவர்களாக மாறிவிட்டோம் என்பதை உணருகின்றோமா? உடல், உயிரோடு இருந்தாலும் எமது உள்ளம் செத்ததாக மாறிவிட்டதை ஏற்றுக்கொள்கின்றோமா? இயேசுவின் உயிர்ப்பின் மகழ்ச்சியில் பங்குகொள்ள எம் பாவதளைகளை அறுத்தெறிந்து விட்டு புதிய உயிர்ப்பில் எம் வாழ்வை அமைத்துக் கொள்வோம். மனித மனங்களை புரிந்து கொண்டு இயேசு காட்டிய புது வாழ்வில் எம் உள்ளத்தை உன்னதமான வழியில் நடத்திட எம்மை அர்ப்பணிப்போம் இயேசுவின் உயிர்ப்பு எம் மாறாத மனங்களில் மாற்றத்தை உருவாக்கட்டும்...!

# உயிர்ப்பு மூவொரு கடவுளின் செயலே!

தன்னார்வப்பணியாளர்,
கி. அருளப்பு - விடத்தல் தீவு

உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருப்பேன் என்று சொல்லி உறவுக்கு கைகொடுத்தார் ஆண்டவர் இயேசு! உறவு வாழ்வின் இலக்கணமே உயிர்ப்பாகிறது! அது உலக வரலாற்றில் உன்னத உயிர்ப்பாகிறது! சாகக் கூடாதவர் செத்தார் எனவே அவர் உயிர்த்தார்! சாகக் கூடியவர்கள் செத்தார்கள் இன்னும் அவர்கள் உயிர்க்கவில்லை. சாவுக்கு ஓர் அர்த்தம் கொடுக்கவே இயேசு மரணத்தை ஏற்றுக்கொண்டார். சாவு ஓர் அழிவும் அல்ல முடிவு அல்ல! வெறுமையும் அல்ல! அது வாழ்வின் தொடக்கமே. முழுமை என்பதை அறிந்து கொள்ளவே இயேசு மரணத்தை ஏற்றுக்கொண்டார். இலட்சக் கணக்கான யூதர்களை கொன்ற ஹிட்லரின் கல்லறை இன்று வரை மூடியே கிடக்கின்றது. வெற்றிமேல் வெற்றியை குவித்த நெப்போலியனின் கல்லறை கேட்பாரற்று கிடக்கின்றது. உலகையே வெல்லவேண்டும் என்று எண்ணிய அலெக்சாண்டரின் கல்லறையை யாருமே கண்டு கொள்வ தில்லை ஆனால் அன்பை மூலதனமாக கொண்டு அதன் இறுதி வெளிப்படமாக மரணத்தை வென்று உயிர்த்த இயேசுவின் கல்லறை இன்னும் ஜெருசலேமில் திறந்தே காணப்படுகின்றது! கிறிஸ்தவம் தழைத்தோங்கியதற்கு காரணம் இயேசுவின் உயிர்ப்பே ஆகும்!

உயிர்ப்பு மூவொரு கடவுளின் செயலேயாகும் கிறிஸ்துவின் உயிர்ப்பு இயற்கையை விஞ்சிய கடவுளின் செயல் இதில் மூன்று ஆட்களும் அவரவருக்குரிய தனித்தன்மையோடு ஒன்றுபட்டு செயல்படுகின்றார்கள். தந்தை தமது வல்லமையை வெளிப்படுத்துகின்றார். மகன் தாமே சுதந்திரமாக கையளித்து தமது உயிரை மீண்டும் பெறுகின்றார். (யோவா 10:11) தூய ஆவியானவர் இயேசுவின் உடலையும், ஆன்மாவையும் மீண்டும் இணைத்து புத்துயிர் ஊட்டி மாட்சிமைப்படுத்துகின்றார். சாவுக்கு அர்த்தம் கொடுக்கவே இயேசு உயிர்த்தார். உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொண்ட அப்போஸ்தலர்கள்போல் நாமும் விசுவாச வாழ்வு வாழும்போது அங்கே இயேசு உயிர் வாழ்கிறார். இயேசு விட்டுச்சென்ற விழுமியங்களை விதைப்போம் முடிந்தால் விதையாவோம். அதற்காக உயிர்தெழுவோம் நாம் இறந்த பின்புதான் உயிர்ப்போம் என்பதல்ல? இவ்வுலக வாழ்விலே நம் ஒவ்வொரு செயல்களும், எதிர்பார்ப்புகளும் உயிர்பெற வேண்டும்! இன்னல்களைச் சந்திக்காத வரை இமயங்களைத் தொடர முடியாது. இவ்வுலகில் நாம் இறக்காதவரை மறு உலகில்



நமக்கு உயிர்ப்பில்லை. தீமை நிறைந்த உலகத்தின் வார்த்தையை விட்டு விட்டு இறைவார்த்தையைக் கடைப்பிடிப்பதுதான் உயிர்ப்பு! மானிட உருவேற்றலின் உச்ச நிகழ்வாக இருப்பதுதான் உயிர்ப்பு. கிறிஸ்துவின் இறை தன்மையும் அவருடைய செயல்கள், போதனைகள் அனைத்தையும் இது உறுதிப்படுத்துகின்றது. மேலும் பாவத்தையும் சாவையும் வென்று உயிர்த்த இயேசுவே நமது உயிர்ப்புக்கும் நாம் ஏற்புடையோர் ஆவதற்கும் காரணமாயிருக்கின்றார். நமது உடலையும் நிறைவு காலத்தின்போது உயிர்த்தெழச் செய்வார். இத்தகைய மேன்மை மிக்க இயேசுவின் உயிர்ப்பு நமக்கு மறுவாழ்வு என்னும் கொடையைத் தருகின்றது. நாம் மண்ணோடு மண்ணாக மாறினாலும் நம்மை மீண்டும் உயிர்தெழச் செய்யும் ஆற்றல் ஆண்டவர் இயேசுவுக்கே உண்டு. ஏனெனில் நம் கடவுள் வாழ்வோரின் கடவுள் உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் என்கிறார் ஆண்டவர். கிறிஸ்தவம் புதிய ஏற்பாட்டுக் கிறீஸ்தவம் அதாவது அது ஓர் உயிர்ப்பின் மதம் உயிர்பில்தான் அந்த மதத்தின் அழுத்தம் இருக்கின்றது. உயிர்ப்பு என்பது திருச்சபை வெளித்தோன்றுவதற்கான முற்கோள் ஆகும். இறைவனில் கொண்டுள்ள சிறப்பான நம்பிக்கையும் அடிப்படையாகும் உயிர்ப்பு வரலாற்றின் மையபுள்ளி.

இயேசுவின் உயிர்ப்பு என்பது இறைவனுடைய புதிய செயல், அவருடைய மீட்பின் செயல் உயிர்த்த இயேசுவே வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியை வழங்கினார். அவர் உங்களோடு என்றும் இருப்பார். அவர் உண்மையின் ஆவியானவர் உலகம் அவரை பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் உலகம் அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை நீங்கள் அவரை அறிவீர்கள் ஏனெனில் அவர் உங்களோடு தங்கி உங்களுக்குள் இருக்கிறார். (யோவா 14:16-17) மனிதத்தின் முழுமையை தரும் இயேசுவின் உயிர்ப்பு எல்லாம் ஆவிமயம் கடவுளின் ஆவியானவர் கடைசி ஆதாமோ உயிர் தரும் ஆண்டவராம் இயேசு (1கொரி 15:16) பரிசுத்த ஆவியானவரே அவர் தந்தையிடம் இருந்து வரும் உண்மையின் ஆவியானவர் (யோவா 3:6) இயேசுவின் உயிரப்பில் கிறிஸ்தவன் பங்கெடுக்க அவன் ஆவியின் சாயலாகிறான் அவரது உயிர்ப்பில் பங்கெடுப்பதென்பது மகிமையான விடயம் அது சாகாமையில் பங்கெடுப்பதே. இவையே உயிர்தரும் அருள்கொடை மனிதத்தின் முழுமையைத் தரும் இயேசுவின் உயிர்ப்பு எல்லாம் ஆவி மயமே! உலகம் வெறுக்கும் போது உன்னில் நிலைக்கிறார். உயிர்ப்பும் உயிரும் ஈர்ந்து நாளும் உடனிருகின்றார். மண்ணகப் பொருளில் மகத்துவம் இல்லை விண்ணகச் செல்வம் வீழ்வதுமில்லை உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும். இருவருக்கு உங்களது ஊழியம் நடக்குமா? செல்வம் ஒரு புறம் கடவுள் ஒருபுறம் ஒன்றைத் தேர்ந்தெடு செல்வம் தேர்ந்தால் தீராத்துயரம் கடவுளை தேர்ந்தெடுத்தால் தினம் நிம்மதி திருமுழுக்கு வழியாக உயிர்த்த இயேசுவோடு விண்ணில் அமர்வோம் கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா விழாச் சிறப்புப் பக்கம்

# காலங் கடந்தவர் கைவிடார்

**முன்னுரை**

காலங் கடந்த இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு பாவம் தவிர மற்றனைத்திலும் எம்மைப்போல் வாழ்ந்த அவரின், இவ்வுலகத் தன்மைகள் அனைத்தையும் மாற்றியமைத்த, புரட்டிப் போட்டதோர் நிகழ்வாகும். கல்லறையில் மனித உடலோடேயே அடக்கம் பண்ணப்பட்டார். ஆனால் காலமெல்லாம் கடந்தவராக புதியதோர் வேற்றுருப்பெற்ற உடலோடு, திருத்தூதுவரான பவுலின் கூற்றின்படி மாட்சிப்படுத்தப்பட்ட உடலோடு உயிர்த்தெழுந்தார். எமது உடலும் ஓர் நாள் சம்பாவனை பெற இவ்வாறு உயிர்த்தெழ வேண்டும். ஏனெனில் நாம் செய்த பாவங்களுக்கு எம் உடலும் காரணம். ஆனால் இந்த ஆசாபாசமான நோவும் நோயும் கொண்ட உடலோடு அல்ல மாறாக மண்ணில் விழும் கோதுமை மணி, வேறுடலாக வெளிவருவது போல மறு உலகில் (விண்ணுலகிலோ, நரகத்திலோ) முடிவில்லாக் காலமும் வாழ மாட்சிப்படுத்தப்பட்ட உடலோடு உயிர்த்தெழுவோம். (1கொரி 15:35-53)

**“துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள்.”(மத் 15:27)**

இயேசு படுகொலை செய்யப்பட்ட உடனே, சீடர்கள் பயத்தோடும் அச்ச நடுக்கத்தோடும் அவமானம், ஏமாற்றம் விரக்தியோடும், தோல்விமனதோடும் பூட்டிய அறைக்குள் இருந்தனர். தாங்களும் பிடிபட்டுக் கொலை செய்யப்பட்டு விடுவோமோ என்னும் பயம் ஒருபுறம், தலைவர் இயேசு தம்மைக் கைவிட்டு விட்டாரே, வெளியில் தலைகாட்ட முடியுமா? என்ற அவமானம் மறுபுறம், பழைய தொழில்களோடு வாழ்க்கைக்குத் திரும்புவோம் என்ற தோல்வி மனம் வேறொருபுறம், மூன்று வருடங்கள் மார்பு தட்டி ஒன்றாக வாழ்ந்த தங்களில் ஒருவரால் காட்டிக் கொடுக்கப் பட்டு, வேறொருவரால் மறுதலிக்கப்பட்டு, தம் எல்லோராலும் கைவிடப்பட்டு அவலச்சாவை அவர் பெற தாமே காரணமாக அமைந்தோமேயென்ற குற்றப்பழியுணர்வு இன்னொருபுறம், ஓரிரு நாட்களில் எல்லாமே முடிந்துவிட்டது என்ற திகைப்பு, விரக்தி மற்றொருபுறம் என்று பல்வேறுபட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகளுடன் தம்மையே தனிமைப்படுத்தியிருந்தனர்.


விடியற்காலையில் ஓர் பெண்ணின் வார்த்தைகளை நம்பாமல் கல்லறைக்கு ஓடித் துணிகள் நிலத்தில் கிடக்கக் கண்டனர். அன்று மாலை இயேசு வேற்றுருப் பெற்றவராய் பூட்டிய அறைக்குள்ளே காட்சி கொடுத்து அமைதியின் வாழ்த்தைக் கூறினார். மகதலா மரியாவின் செய்தியை நம்பாததைக் (மாற் 16:14) கண்டித்தார். முதலில் தயங்கினாலும், பின்னர் படிப்படியாகத் தொடர் காட்சிகளால் திடமடைந்த சீடர் மகிழ்ச்சி கொண்டனர். தனது நற்செய்தியின் தூதுவர்களாக எதிர்காலத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக நாற்பது நாட்கள் இயேசு அவர்களைத் திடப்படுத்த வேண்டி இருந்தது. அனைத்தையும் விளங்கப்படுத்தித் தூயஆவியால் உறுதிப்படுத்தினார். “பிள்ளைகளே மீன் ஒன்றும் கிடைக்க வில்லையா?” என்ற கேள்வியின் பரிவால் கட்டுண்டவர்களாக மகிழ்ச்சி கொண்டு அவரைக் குழந்தைகள் போலப் பணிந்தனர். அவர் தம்மைக் கைவிடவில்லை என்று நம்பிக்கை கொண்டனர்.

**“நான் ஆண்டவரைக் கண்டேன்” (யோவா 20:18)**

மாட்சிமிகு உடலோடு உயிர்த்த இயேசுவின் காட்சிகளில் இருந்து சீடர்கள் பெற்ற அனுபவங்களை நான்கு நற்செய்தியாளர்களும் சிறப்பாக லூக்காவும் யோவானும் மிகவும் சிறப்பாக வடித்திருக்கின்றனர். சூரியனை நேருக்கு நேர் பார்த்துப் பறக்கும் பறவையாகிய கழுகின் பார்வையைக் கொண்ட அமைதியான, வயதில் இளையவரான திருத்தூதர் யோவான் பல அனுபவங்களைத் தருகின்றார். நற்செய்தித் தொடக்கத்தில் தன்னைச் சந்தித்த இரண்டு சீடர்களிடம் இயேசு கேட்ட “என்ன தேடுகிறீர்கள்?” (யோவா 1:38) என்னும் கேள்வியுடன் நற்செய்தி தொடங்கி, “நாங்கள் யாரிடம் போவோம்?” (யோவா 7:68) என்னும் பேதுருவின் நம்பிக்கை அறிக்கையில் சரணடைந்து, மகதலா மரியாவிடம் இயேசு கேட்ட “யாரைத் தேடுகிறாய்?” (யோவா 20:15) என்னும் கேள்வியுடன் பலமடைந்து, “அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்” என்னும் யோவானின் பதிலுடன் முதிர்வடைகின்றது. இங்கு நம்பிக்கையின் செய்தி, ஒரு நிகழ்வுடன் தொடங்கி இயேசுவைச் சந்திப்பதுடன் வளர்ந்து அவரில் நம்பிக்கையை முதிர்வடையச் செய்யும் பதிலுடன் உறுதியடைகின்றது. நமது வாழ்விலும் இதையே இயேசு எதிர்பார்க்கின்றார்.

**“நாங்கள் கேட்டோம் …சான்று பகர்கிறோம்”(1யோவா 1:1-2)**

திருத்தூதர் யோவானும் (யேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர்) மகதலா மரியாவும் (இயேசுவின் முதல் காட்சி பெற்றுத் தூதுரைக்க அனுப்பப் பெற்றவர்) இயேசுவில் ஆழமாக அன்பு கொண்டிருந்தனர். புனித மார்கரீத் மேரி அலகொக் (திரு இருதயப் பக்தியின் தூதுவர்), புனித கேட்றூட் (யேசுவின் மார்பில் சாய்ந்திருந்து அன்பைச் சுவைத்தவர்) போன்ற காட்சிபெற்ற புனிதைகளுக்கு முன்பே, யோவானும் மகதலா மரியாவும் யேசுவை நேரடியாகச் சந்தித்து தொட்டுணர்ந்து அவரோடு உண்டு குடித்து, இறையனுபவம் பெற்றிருந்தனர் (திப 10:41). இவ்விருவரில் முன்னையவர் இயேசுவின் அன்பை மனதிற்குள் வைத்திருந்து ஆழ்மனதில் தியானிப்பவராகவே காணப்பட்டார். பின்னையவர் அந்த அன்பிலேயே பைத்தியமாகி “ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்” (யோவா 20:15) என்று



அப்பட்டமாகத் தன் அன்பை வெளிப்படுத்துகின்றார். “மரியா”, “ரபூனி” (போதகரே) என்னும் சொற்களினூடாக மகதலா மரியா பெற்ற மகிழ்விற்கு அளவேயில்லை. ஏனெனில் இது உயிர்த்த இயேசுவால் கொடுக்கப்பட்ட நிரந்தர மகிழ்ச்சி. இதைப் பெற்றவள் தொடக்கத்தில் பாவியாக இருந்து இயேசுவால் மன்னிப்புப் பெற்றுத் திருத்தூதுவராகும் பேறு பெற்ற மகதலா ஊரைச் சார்ந்த ஓர் பெண்ணான மரியா.

**“உங்களுக்கு அமைதி உரித்தாகுக!”(யோவா 20:19)**

யூதர்களுக்கு அஞ்சி மூடி வைத்திருந்த கதவுகளின் உள்ளே இயேசு, உயிர்த்தெழுந்த அன்று மாலையே காட்சி கொடுக்கின்றார். அவர் அவர்களுக்குக் கொடுத்த கொடை அமைதி. தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறிப் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை அளித்தார். இங்கு ஒன்று தெளிவாகின்றது. நல்ல பாவஅறிக்கையின் பின்புதான் இயேசு தூய ஆவியாரைக் கொடுப்பதை நாம் சமாரியப் பெண்ணின் நிகழ்வில் காண்கின்றோம். நிச்சயமாக இங்கும் தபோர் மலைக் காட்சியில் கண்டது போன்ற தோற்ற மாற்றத்தைக் கண்டு சீடர்கள் உள்ளம் குத்துண்டு வேதனையால் வருந்தியழுது நல்ல பாவறிக்கை செய்திருப்பார்கள். அதன் பின்பே “அமைதி உரித்தாகுக” என்னும் வார்த்தையைக் கூறித் தூய ஆவியாரைக் கொடுத்துப் பாவமன்னிப்பின் அதிகாரத்தோடு தூதுவர்களாக அனுப்புகின்றார் இயேசு. இயேசுவில் இன்னொரு அன்புப் பைத்தியமாகவே வாழ்ந்த தோமா அவ்வேளை இல்லை. “அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்ப மாட்டேன்”(யோவா 20:25) என்று கூறி வெளியேறி இயேசுவின் உயிர்ப்பை ஆதாரபூர்வமாக நிருபிக்க எண்ணி ஒரு வார காலமாக அலைந்து திரிகின்றார்.

**“காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்.” (யோவா 21:29)**

இயேசுவின் விலாவைக் குத்திய ஈட்டியுடன் கல்லறையைக் காவல்செய்த செந்தூரியனைத் தொழுநோய்ப் பள்ளத்தாக்கில் இருந்து கொண்டுவந்து மருந்திட்டுக்கட்டி ஈட்டிமுனையைப் பெற்றுக்கொண்டதோடு “ஒளி, ஒளி, பாரியதோர் ஒளி” என்ற அவனது உயிர்ப்பின் வாக்குமூலத்தை ஆதாரமாகப் பெற்று, ஓடிவந்து ஏனைய திருத்தூதர்களிடம் மன்னிப்பு வேண்டிய வேளையில், இடம் பெற்ற இயேசுவின் காட்சியில் உள்ளம் குத்துண்டவராகி “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!” யோவா 21:28) என்றுகூறி நல்ல பாவறிக்கை செய்கின்றார். அருட்சகோதரி புனித மரிய பவுஸ்தீனா இயேசுவை, இரக்கத்தின் கடவுளாக முப்பரிமாணக் காட்சியில் கண்டு, உத்தரிப்பு நிலை மற்றும் நரகம் போன்றவற்றில் பாவிகள் அனுபவிக்கும் சொல்லொணா வேதனையை அறிய முன்பே, இயேசுவை இவ்வுலகில் இரக்கத்தின் கடவுளாகவும் மறுவுலகில் நீதியின் அரசராகவும் கண்டவர் தோமா. சீடர்களுக்கான இந்த இரண்டாவது காட்சியில் தோமாவை இயேசு பயன்படுத்தி, அனைத்து நிகழ்வுகளின் தொடக்கமும் முடிவும் இறைவனேயாதலால் அவரது சொல், செயல், சிந்தனைகளில் உறுதிப்பாடு கொள்வதே நம்பிக்கை என்பதை, மிகவும் அழகாக “நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றுகூறி எமக்குத் தெளிவாக்குகின்றார்.

**“நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?”(லூக் 24:32)**

எங்கும் தோன்றக்கூடிய மாட்சிக்குரிய உடலோடு உயிர்த்தெழுந்த இயேசு, சீடர்களுடன் நடந்துசென்ற போது “அவர் யாரென்று அறிந்துணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. (லூக் 24:16) “எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரமாயிற்று பொழுதும் போயிற்று” என்று கட்டாயப்படுத்தித் தங்க வைத்தபோது பந்தியில் அமர்ந்த அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுத்த வேளையிலேயே அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். இதுவே இயேசு நிறைவேற்றிய இரண்டாவது திருப்பலி. இரவுணவு வேளையும், கல்வாரிப்பலியும் இணைந்து அவரது முதல் திருப்பலியாகின்றது. இங்கு வார்த்தையும் நற்கருணையும் இடம்பெறுவதைக் காண்கிறோம். இரவுணவு வேளையில் இயேசு தனது செயல்களுக்கு கொடுக்கும் விளக்கம், கல்வாரிப் பலியை அர்த்தமுள்ளதாக்கியது. அப்பத்தைப் பிடுவது இயேசுவுக்கே உரிய தனித்துவமான செயல் என்பதை எம்மாவுஸிலும் சீடர்கள் கண்டு தம்மிடையே இயேசுவின் நடமாட்டத்தை உய்த்துணர்ந்து கொண்டனர். இதே விடயத்தைக் கல்வாரியில் அனைத்துலகுமே கண்டது.

**“அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்”(யோவா 21:7)**

அவர்கள் ஏழு சீடர்கள். மீண்டும் பழைய தொழிலைத் தொடர்ந்து செய்யப் புறப்படுகின்றனர். ஆயினும் இயேசு அவர்களைக் கைவிடவில்லை. “பிள்ளைகளே மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?... படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும்” (யோவா 21:5-6) என்ற இயேசுவின் வார்த்தைகளால் நம்பிக்கையடைந்தனர். “யாரைத் தேடுகிறாய்? என்று மகதலா மரியாவிடம் இயேசு ஏற்கெனவே கேட்ட கேள்விக்கு “அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்” என்று யோவான், பேதுருவிடம் கூறிய கூற்று இங்கு விடையாக அமைகின்றது. இக் கூற்றிலிருந்து யோவான் நற்செய்தியாளர், முதல் சீடர்கள் (யோவா 1:35-51), மார்த்தா (யோவா 11:27), பேதுரு (யோவா 6:68-69) அன்புச் சீடர் (யோவா 21:7) போன்றோரின் நம்பிக்கையறிக்கை ஊடாகத் தனது நூலின் வழியே, இயேசுவில் ஒவ்வொருவரும் கொள்ளவேண்டிய நம்பிக்கையை வளர்த்துத் தருவதைக் காண்கின்றோம்.

**“நீ, என்மீது அன்பு செலுத்துகிறாயா?” (யோவா 21:16)**

யூதாஸ் மனம்மாற இயேசு வழங்கிய மூன்று சந்தர்ப்பங் களையும் அவன் கண்டடையாதவாறு, பணம் என்னும் அலகை (யோவா 13:2) அவனுள் புகுந்தது (யோவா 13:10-11, 13:21, 13:26-27). பேதுருவிற்கு இயேசு வழங்கிய மூன்று சந்தர்ப்பங்களையும் அவர் பின்னர் கண்டுணர்ந்து மீளவும் நினைவுகூர்ந்து மனம் வெதும்பி அழுது மனம் மாறினார். (மத் 16:23, யோவா 13:6-9, லூக் 22:34). உயிர்ப்பின் பின்பு, “சீமோனே, சீமோனே…நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து” (லூக் 22:31-32) என்று ஒரு திருத்தந்தைக்கு இருக்கவேண்டிய அடிப்படைப் பண்பை எடுத்துக்கூறித் தன் ஆடுகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தார். இறுமாப்புக் கொண்டு, பெரிய தலைவராகத் தன்னைக் காட்டி, எல்லாவற்றிலும் முந்திக் கொண்டிருந்த பேதுருவை, பவுலைப் போன்று அடிபோட்டுத் தாழ்ச்சியுள்ள ஊக்குவிப்பாளராக, நெறிப்படுத்துனராக, வழிநடத்துனராக, அனைத்திலும் மேலாக ஓர் கனிவுள்ள மேய்ப்பனாக ஏற்படுத்தினார் இயேசு. இது பேதுருவுக்குக் கிடைத்த மாபெரும் உளமாற்றம், உருமாற்றம், தோற்ற மாற்றமாகும்.

**முடிவுரை**

அஞ்சி நடுங்கி அவமானத்தோடும் குற்றப்பழியுணர்வுடனும் இருந்த சீடர்களை நல்ல பாவ அறிக்கையின் பின்பு உயிர்ப்பின் கொடையாகிய அமைதி வாழத்துக்கூறி அரவணைத்தார் இயேசு. தூய ஆவியாரையும் பாவமன்னிப்பு அதிகாரத்தையும் கொடுத்து உலகெங்கும் அனுப்பியதால் இன்று நாம் கத்தோலிக்க நம்பிக்கையை அறிக்கையிடு கின்றோம். அவரது இரத்தத்தின் பலன் வீணாகிவிடாமல் உயிர்ப்பின் கொடையாகிய அமைதியை தூய ஆவியாரில் சுவைக்க நாமும் உளமாற்றம், உருமாற்றம், தோற்ற மாற்றம் பெறுவோம்.


**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாஸ்கா விழாச் சிறப்புப் பக்கம்

# நம்மீது காட்டும் இறைவனின் அன்பு வெளிச்சம்

அருட்பணி. M.A ஜெயசீலன்

**முன்னுரை**

நாம் வாழுகின்ற இந்த அழகிய உலகிற்கும் அதில் நிறைந்துள்ள எண்ணற்ற அற்புதங்களுக்கும், அதிசயங்களுக்கும் அன்பே உருவான இறைவனின் பேரன்பு தான் மூல காரணமாகும். நமது மெய், வாய், கண், மூக்கு, செவி போன்றவற்றால் நாம் அறிந்து கொள்கின்ற நமது புலன் அறிவிற்கு அப்பாற்பட்ட விதத்திலே உலகில் பல உண்மைகள் நிறைந்திருக்கின்றன. இதை நமது நம்பிக்கை அறிக்கையிலே 'விண்ணகமும் மண்ணகமும் காண்பவை காணாதவை யாவும் படைத்த எல்லாம் வல்ல தந்தை அவரே' என அறிக்கையிடுகின்றோம். இறைவன் தமது சாயலிலும் பாவனையிலும் மனிதர்களாகிய எம்மைப் படைத்து அவரை



அறியவும் அன்பு செய்யவும் எமக்குத் தந்த அற்புதமான இருப்பும், நம்மை தமது சொந்தப் பிள்ளைகளாக மாற்றிய அவரது பேரன்பு நமது அறிவிற்கு அப்பாற்பட்டது. ஆயினும் இறைவனிலும் அவரது அன்பிலும் நாம் வைக்கும் நம்பிக்கையின் வழியாக அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுகின்றோம் (எபேசியர் 3:18-19). இத்தகைய இறை அன்பினால் நாம் அனைவரும் ஈர்க்கப்பெற வேண்டுமென்ற ஆவலோடு இவ் ஆக்கம் 'நம்மீது காட்டும் இறைவனின் பேரன்பு' பற்றிய சில உண்மைகளை பகிர விளைகின்றது.

**இயேசுவில் வெளிப்படும் இறைவனின் பேரன்பு**

இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல் (கொலோசையர் 1:15). இறைத்தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கின்றது (கொலோசையர் 2:9) எனவும் இறைவார்த்தை கூறுகின்றது. இயேசு தம் சீடரிடம் 'என்னைக் காண்பது தந்தையை காண்பது ஆகும்' என மொழிந்தார் (யோவான் 14:7). இயேசுவின் போதனைகள், செயல்கள், அற்புதங்கள், வாழ்வு அனைத்தும் கடவுள் நம்மீது கொண்ட பேரன்பை வெளிப்படுத்தியது. இறை தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே தனது உணவு என இயேசு கூறினார் (யோவான் 4:34). மனுக்குலத்தின் மீது இறைவன் கொண்ட மட்டற்ற பேரன்பால் தனது மகனை அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் என இயேசு திருவாய் மொழிந்தார் (யோவான் 3:16). இதை நன்கு கண்டுணர்ந்து அனுபவித்த திருத்தூதர் புனித யோவான் தனது திருமுகத்தில் கடவுள் இன்பாய் இருக்கின்றார். கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. அன்பின் தன்மை விளங்கிற்று மற்றும் கடவுள் நம்மீது கொண்ட அன்பை அறிந்துள்ளோம், நம்புகின்றோம் எனவும் சான்று பகர்கின்றோம் (1யோவான் 4:8-16).

**இறைவனின் பேரன்பின் சில பண்புகள்**

'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' என்பதே தனது பெயர் என இறைவன் தன்னை வெளிப்படுத்தினார் (விடுதலைப்பயணம் 3:14). இது இறைவன் காலங்களைக் கடந்தவர் எனவும் மற்றும் கடந்த, நிகழ், வரும் காலங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கிறவர், செயற்படுபவர் என்பதை குறித்து நிற்கின்றது. எனவே தான் இறைவன் நம்மீது கொண்ட பேரன்பு நிலையானது, மாறாதது, நிபந்தனை அற்றது... என்று கூறிக்கொண்டே போகலாம். பின்வரும் உண்மை வலியுறுத்திக் கூறப்பட வேண்டியதுடன் நமது மனதில் ஆழப்பதிக்கப்பட வேண்டியதுமாகும். அதாவது ஒவ்வொரு நொடிப்பொழுதும் மாற்றத்திற்கும், நிலையற்ற தன்மைகளுக்கும் முகம் கொடுக்கின்ற நமது வாழ்வில் இறைவனின் பேரன்பு ஒன்றே என்றும் மாறாததும் நிலையானதும் ஆகும். ஏனென்றால் இறைவன் நம்மீது காட்டும் பேரன்பு எந்த வேளையிலும் இடைநடுவில் ஏன் இறப்பிலும் கூட முடிவடைய முடியாது. அது அவ்வாறு இடைநடுவில் முடிவடையுமானால் அது அன்பாக இருக்க முடியாது. இறைவன் நமக்கு ஏமாற்றத்தை தருபவராக இருக்கவே முடியாது. இதையே புனித பவுல் நன்கு அனுபவித்து அறிந்து 'அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது, ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாக கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது' (உரோமையர் 5:5) என்ற உண்மையை உறுதிசெய்கின்றார்.

**நமது நாளாந்த வாழ்வில் இறைவனின் பேரன்பு**

இறைவன் தமது பேரன்பின் நிமித்தம் எம்மைப் படைப்பதற்கு முன்னரே, நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார் (எபேசியர் 1:5-6). அவருடைய பேரன்பு எம் நாளாந்த வாழ்வில் அவருடைய பாதுகாப்பாக, பராமரிப்பாக, வழிநடத்துதலாக மற்றும் அவருடைய பேரிரக்கமாக எம் வாழ்வை நிரப்புகின்றது, அலங்கரிக்கின்றது. நிபந்தனையற்ற விதத்திலே நம்மேல் தமது நன்மைகளை இறைவன் பொழிகின்றார் (மத்தேயு 5:45).

**நாம் எதிர்கொள்ளும் சவால்கள்**

மீட்பின் வரலாறு கடவுளின் பேரன்பை உய்த்துணர்வதில் மனுக்குலம் எதிர்நோக்கும் சவால்களையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை. ஆதிப்பெற்றோராகிய ஆதாம் ஏவாளின் பாவச் செயல் தொடக்கம் இறைவனின் பேரன்பை மனுக்குலம் புறக்கணித்த சம்பவங்கள் வேதாகமத்தில் ஏராளம். இன்றைய நவீன உலகில் வாழும் நாங்களும் உலகத்தின் மாயைகளுக்குள்ளும் சவால்களுக்குள்ளும் சிக்குண்டு, ஒளியைவிட இருளையே விரும்பி இறைவனின் பேரன்பை எம்மால் சுவைக்க முடியாது இருப்போமாகில் அது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

**நிறைவாக**

எனவே அன்பிய வாழ்வின் ஊடாக சாட்சிய வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ள நாம் இறைவன் நம்மீது காட்டும் பேரன்பை உய்த்துணர முயல்வோம். அவ் பேரன்புக்கு எம்மை அர்ப்பணிப்போம்.

கடவுளின் அன்பையும் கிறிஸ்துவின் மன உறுதியையும் அடைய ஆண்டவர் உங்கள் உள்ளங்களைத் தூண்டுவாராக! (2தெசலோனிக்கர் 3:5).

# உயிர்ப்பின் மறைபொருளும், —கிறிஸ்தவ வாழ்வும்—

அருட்சகோ. டிலோய்டன் பெர்னாண்டோ
தேசிய குருமடம் கண்டி

கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச மறைபொருளானது "கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்" என்பதாகும் கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பின் மறைபொருளில் முழுமை பெறுகிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பு வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு. இதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வும் முழுமைபெற்று ஒரு நாள் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவோம் என்ற நிலையான நம்பிக்கையை தருகின்றது. காரணம் கிறிஸ்தவ வாழ்வுக்கு



கிறிஸ்துவின் உயிர்ப்பு மறைபொருளாக விளங்குகின்றது. கிறிஸ்தவ வாழ்வு முழுவதுமே அவருடைய பாஸ்கா மறைபொருளில் நிறைவு பெற்றுள்ளது.

மனித வாழ்வின் நிலையான தன்மையை உறுதி செய்ய இறைமகன் தன்நிலைபாராது இவ்வுலகம் வந்து தன்னுடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருள் வழியாக மனிதனுக்கும், கடவுளுக்குமிடையே இருந்த பாவம் என்ற பாலத்தை உடைத்து ஒரு நிலையான இடை நிலையாளராக செயற்பட்டு மனித வாழ்வின் புனிதத்தை உயர்த்தினார். "கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் நமது விசுவாசம் வீணே" என்று புனித பவுல் கூறுகின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்குகொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் "வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அது எடுக்கப்படுவதில்லை". எனவே இறப்பு என்பது ஒரு நிகழ்வு அல்ல, மாறாக நிலை வாழ்விற்கான முதல்படி. அந்த நிலையை எமக்கு பெற்றுக்கொடுத்தார். நம் ஆண்டவர் இயேசு. இறந்தோருள் தலைப்பேறாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மையும் ஒருநாள் உயிர்த்தெழச் செய்வார் என்ற நம்பிக்கையை தருகின்றார். "விதை விதைக்கப்படுவது முளைத்து பலன்கொடுக்கவே". அதுபோல விதைக்கப்படும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒருநாள் முளைத்து பலன் கொடுப்பான். இதுவே கிறிஸ்தவ இறப்பு எமக்கு தரும் பாடம். எனவே தான் இறப்பை கண்டு அஞ்சவேண்டியதில்லை.

இறப்பு என்ற ஒன்று இருந்தால் தான் கிறிஸ்துவை போல நாமும் உயிர்ப்போம். இல்லையேல் எமது கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமற்றதாக மாறிவிடும். எனவே தான் கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது கிறிஸ்தவ வாழ்வின் கொடுமுடியாக திகழ்கின்றது. தவக்காலத்தை ஆரம்பித்து, 40 நாட்கள் கிறிஸ்துவின் பாடுகளை தியானித்து அவருடைய உயிர்ப்பில் பங்குகொள்கின்றோம் என்றால் அது ஒரு வாழ்வின் நிகழ்வு. இத்தகைய தலைப்பேறான கிறிஸ்துவின் உயிர்ப்பு எம் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அழைப்பு "கல்லறையினின்று உயிர்ப்பு" இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிகழும் என்ற நம்பிக்கையில் வாழும்படி அழைக்கின்றது. கிறிஸ்தவ இறப்பிற்கு அர்த்தம் கொடுத்தார் கிறிஸ்து. அவரது இறப்பின் போது இரண்டாக கிழிந்த திரைச்சீலை கடவுளுக்கும் எமக்குமிடையே இருந்த முறிவை தகர்த்தெறிந்தது.

கடவுளிடம் நேரடியாக மனிதன் சென்றடைய அவருடைய மகனின் பாடுகளில் பங்குகொண்டு அவருடைய உயிர்ப்பின் வழியாக மீட்புப்பெற அழைப்பு கொடுக்கின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பின் விழாவை கொண்டாடும் நாங்கள் விழாவின் அர்த்தம் புரிய வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் பெறுமதியான நிகழ்வும் உயிர்ப்பே. நாம் உயிர்ப்போம். கிறிஸ்துவின் நம்பிக்கையில் அவருடைய உயிர்ப்பில் இணைந்து கொள்வோம். எவ்வாறு அவர் இறந்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தாரோ அதுபோல இவ்வுலகில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாமும் இறந்து உயிர்ப்போம். அவருடைய மகிமையில் பங்கு கொள்ளவே. அவருடைய இறையரசின் மக்களாக மாறுவோம். இதுவே இன்றைய உயிர்ப்பின் விழா எமக்கு தரும் செய்தியாக இருக்கின்றது.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

# பயம் ஏன் நமக்கு

A.M.F. பீரீஸ்
மறையாசிரியர் - வங்கலை.

மனிதனின் எதிரிகள் இரண்டு. ஒன்று பயம் மற்றது கவலை. பயம் வலுவடைந்த வியாதி! கவலை மெல்ல அரிக்கும் நோய் பயத்தாலும் கவலையாலும் மனிதன் தன் வாழ்வை நாசமாக்கிக் கொள்கின்றான். சூழ்ந்திருப்போரின் வாழ்வையும் நாசமாக்குகின்றான். இப்படிப்பட்ட பலரை நம்மிடையே நாம் காணக்கூடும். எந்த சாதாரண விசயத்தை இவர்களிடம் கொண்டு சென்றாலும் நாம் எதிர்பார்க்காத பயங்களை, அபாயங்களை நம்முன் பரப்பி விட அவர்களையும் அறியாமல் அவர்கள் முயல்வார்கள். இவர்கள் சந்தேகப் பிராணிகள் இவர்கள் தங்களைச் சுற்றிலும் எண்ணங்களால் - பயம், கவலை என்ற எண்ணங்களால் பெரிய சுவர்களை எழுப்பிக் கொண்டிருப்பார்கள். காரியங்களை செய்ய முடியாதவர்கள் இவர்கள். இளம் வயதில் ஏற்பட்ட சிறு சம்பவங்கள் இவர்களை இப்படியோர் எண்ணப் பாதையில் இறக்கிவிட்டிருக்கும் செய்ய முடியாதவர்கள் செயல் திறன் கொண்டவர்களை ஒருநாளும் மன்னிப்பதில்லை பிறரது உற்சாகத்தை இவர்கள் முளையில் கிள்ளி எறியப் பார்ப்பார்கள். நமது எண்ணங்கள் எழுப்பி இருக்கும் சுவர்களை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் எண்ணச் சுவர்களாய் விளங்கும் ஒப்பாரி வைக்கும் மனித சுவர்களின் இயல்புகளையும் நம்மை சூழ்ந்திருப்போரிடம் புரிந்துகொள்ள வேண்டும். அஞ்சுவ தஞ்சாமை பேதமை என்கின்றார். பொய்யா - மொழிப்புலவர் திருவள்ளுவனார். பயப்பட வேண்டிய விடயங்களுக்கு நாம் பயப் படத்தான் வேண்டும். அதை விட்டு விட்டு எடுத்ததற்கெல்லாம் பயந்து கொண்டிருப்பது பேடியின் செயலாகும். அன்று வள்ளுவர் இப்படிப் பயத்தை பாகு படுத்தியதையே இன்று மனோதத்துவ நிபுணர்கள் பயத்தின் இரு பிரிவுகள் என ஏற்றுக்கொள்கின்றனர்.

பயம் பெரும்பாலும் நமது கற்பனையில் விளைவது எதிர்காலத்தில் நிகழப்போகும் ஒன்றை இப்படிப்போகுமோ, அப்படிநடக்குமோ என்று பல பல கற்பனை செய்து கொண்டு அவதிப்படுவதே பயம். நான்கு முறை இதே பாதையில் சிந்திக்கத் துவங்கியதும் பயம் நமது இயல்பாக, பழக்கமாக மாறிவிடுகிறது. அஞ்சி அஞ்சி சாவார் - இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே என்றார் பாரதி. இவருக்கு மருத்துவரைக் கண்டால் பயம் சிலருக்கு மேலதிகாரிகளைக் கண்டால் பயம், மனைவியரை அல்லது கணவரைக் கண்டால் பயம். பெரும்பாலான பயம் அனைத்தும் நமது அசாதாரணக் கற்பனையினால் விளைவது.

ஒரு சம்பவம் நிகழ்வதற்கு முன் நமது பயங்களை எழுதி வைத்து பின்னால் அவற்றை சாவாகாசமாகப் படித்துப் பார்த்ததால் உப்புப்பெறாத விஷயங்களுக்கெல்லாம் நாம் பயந்திருக்கின்றோம் என்பது தெரியவரும். பயம் - மனித இலட்சியங்களின் அடியில் இலேசாகக் குழி பறிக்கும் இயல்புடையது. மனித நம்பிக்கையை அசைக்கும் தைரியத்தை ஆட்டம் காணவைக்கும் தன்மை கொண்டது. நோயினால் சாகுமுன், சாவின் பயத்தால் மனிதர்கள் செத்திருக் கின்றார்கள். எதிரியால் தோற்கடிக்கப்படுவதற்கு முன் வெறும் பயத்தால் படைகள் நாட்டைப் பறி கொடுத்திருக்கின்றன. பயம் ஒரு நஞ்சு, விஷம் நமது உடலில் பலத்த மாறுபாட்டை நம் உடலில் உண்டு பண்ணுகின்றது. பயப்படும் ஒருவன், ஒன்று ஓட முயலுகின்றான் அல்லது தற்காப்புக்காச் சண்டை போடத் தயாராகின்றான். அப்போது மனிதனின் கண்கள் பெரிதாகின்றன இரத்தத்தில் சர்க்கரை வேகமாக பாய்கின்றது, வேகமாக மூச்சு போய் வருகின்றது. இதய ஓட்டத்தையும், சீரண நீர் சுரப்பதையும் இது பாதிக்கின்றது.

பயம் உண்மையாக இருக்கலாம் அல்லது நமது கற்பனையாய் இருக்கலாம். நாம் எப்படி நம்புகிறோமோ அதற்கு ஏற்ப நம் உடல் மாறுபடுகின்றது. பயப்படுகிறவர்கள் சர்வயாக்கிரதையான மனிதர்கள் எதற்கும் முன்செல்ல முதலில் செய்ய தயங்குவார்கள் வீடு என்ற நான்கு மூளைக்குள்தான் அவர்கள் நிம்மதியாய் இருப்பார்கள். இவர்களை அடையாளம் கண்டுகொள்வது எளிது. பல பேச்சாளர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் கூட்டத்திற்கோ, வகுப்பிற்கோ போகும் முன் சதைகள் முறுக்கேறி நெருக்கடி நிலையில் அவர்கள் இருப்பதுண்டு. அப்போது உடல் வியர்க்கும் வார்த்தைகள் தடுமாறும். வயிறுகுமட்டும். பயத்தில் வாழ்பவர்கள் எல்லாம் இப்படி தான். மோகனதாஸ் காந்தி என்ற இளைஞர் வழக்கறிஞராய் வாழ்வைத் தொடங்கினார் என்பதை சற்று சிந்திக்க வேண்டும். அவர் தனது முதல் வழக்கின்போது வாதிட எழுந்தபோது காந்தியின் கண்களிருண்டன. காது பஞ்சடைந்தது நா தழுதழுத்தது. அழாத குறையாக அவர் தன் ஆசனத்தில் அமர்ந்தார். பிற வழக்கறிஞர்களும் நீதிபதியும் புன்னகைத் திருக்கக் கூடும். ஆனால் காந்தி அதனை உணரும் நிலையில் இல்லை. அத்தகைய நிலையை அவருடைய வரலாறு மீண்டும் தொடர்ந்து கூறுகின்றது. அப்படிபட்ட மனிதர் இந்தியாவின் விடுதலை கோரிக்கையை எடுத்துக் கொண்டு இங்கிலாந்தின் பாராளுமன்றத்திலே பின்னால் விவாதித்தார். நாட்டின் விடுதலைக்கு வழி சமைத்தார் என்று வீர மகா காந்தியின் துணிச்சலை கூறி நிற்கின்றது. எத்தகைய மாற்றம் என்பதை நினைத்து பாருங்கள்! இன்னுமாக தத்துவ ஞானி எமர்சன் கூறுகின்றார். எதைக் கண்டு பயப்படுகிறீர்களோ அதை செய்ய தொடங்குங்கள், பயம் செத்து போவதை காண்பீர்கள் என்று தண்ணீரைக் கண்டு பயப்படுகின்றவன் குளத்தில் இறங்கி நீந்த கற்றுக் கொள்ள வேண்டும் பின் நீரைப்பற்றிய பயம் போய்விடும் இருவிழிகளில் பயத்தைப் போக்கலாம் ஏன் பயப்படுகின்றோம்? ஏன் பயப்பட வேண்டும்? தலையா போய்விடும்? என்று தீவிரமாக பயத்தை அக்குவேறு அணிவேறாக அலசுவது முதல் வழி. அலசினால் காரணம் இல்லாததற்கு நாம் பயந்து கொண்டு இருக்கின்றோம் என்பது விளங்கும். இரண்டாவது எதைக்கண்டு பயப்படுகின்றோமோ அதில் சிறிது சிறிதாக நுழைந்து காரியங்களை செய்யத் தொடங்குவது. செயலே பயத்தை போக்கும் அருமருந்து என்கிறார்கள் அறிஞர்கள். பயம் மனதை கவ்வி இருக்கும்போது அதை அப்புறப்படுத்துவது எளிதல்ல நம்பிக்கைதான் பயத்தின் மாற்று மருந்து பயத்திற்கு நேர்மாறான தைரியமான எண்ணங்களை மனதிற்குள் விடுவது அதைப்பற்றி சிந்திப்பது நல்ல பலனைத்தரும் பயத்தை பற்றி யோகானத்தர் ஒரு கதை சொல்லி இருக்கிறார். ஒரு ஞானியின் நிஸ்டை கலைந்த போது ஒரு சிறு எலி அவரிடம் வந்தது. அவர் அந்த சுண்டெலியைப் பார்த்து "உனக்கு என்ன வேண்டும்" என்றான் ஞானி. "இந்த பூனையைக் கண்டு பயமாக இருக்கிறது என்னை ஒரு பூனையாக மாற்றி விட்டால் உங்களுக்கு புண்ணியம் உண்டு" என்றது அந்த எலி. ஞானி எலியை பூனையாக மாற்றினார். இரண்டு நாள் கழிந்து மீண்டும் அந்த பூனை வந்தது இப்போது என்ன பிரச்சனை என்று கேட்டார் அந்த ஞானி. சதா என்னை நாய் விரட்டுகின்றது என்னை நாயாக மாற்றிவிட்டால். மிக நல்லது என்றது பூனை. பூனையை நாயாக மாற்றினார்.

➡ 15

# பெற்றோரை பராமரித்தலும் கனம் பண்ணுதலும்

ஜேசுதாசன் பாமினி குருஸ்
முள்ளிக்குளம், மன்னார்.

**பெற்றோரை கனம் பண்ணுதல்**

உன் தந்தையையும் தாயையும் மதித்து நட இதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் நீ நெடுநாள் வாழ்வாய் (இணைச்சட்டம் 5:16)

அன்பு நெஞ்சங்களே தாய் தந்தை பற்றி உலகில் உள்ள அறிஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கள் என பலரும் பல கருத்துக்களையும், கவிதைகளையும், பாடல்களையும் எழுதி இருந்தாலும் அதை நாம் சிந்தித்துப் பார்ப்பதோ, மதிப்பளிப்பதோ மிகக் குறைவுதான். ஆனால் எம் கத்தோலிக்கர்களின் உயிர் நாடியாகிய திருவிவிலியம் சொல்வதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பே இந்த உலகில் அவன் பிறக்க வேண்டும் என்று தீர்மானிப்பதும், நம்மை உருவாக்கியதும் கடவுள். அதனால்தான் இறைவார்த்தை இப்படி சொல்கின்றது. உன் தாயின் கருவில் உருவாகும் முன்பே நான் உன்னை அறிவேன்

அடுத்த நிலையில் எமது பெற்றோர்தான். எம்முடைய பிறப்பிலும், வளர்ச்சியிலும் தாய்க்கும் தந்தைக்கும் சரிசமனான பங்கு உண்டு. ஒரு குழந்தையின் பிறப்பில் இருந்து அக் குழந்தையின் முழுமையான வளர்ச்சி வரை வார்த்தைகளில் வடிக்கமுடியாத பல தியாகங்களை அவர்கள் செய்கின்றார்கள். பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சி பருவத்திலும் கவனம் எடுத்து பார்த்து பார்த்து வளர்க்கின்றார்கள். தனது குழந்தையை எமது திருஅவைக்கும், பெற்றோருக்கும், சமூகத்திற்கும் ஏற்புடைய பிள்ளையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக செயற்படுகின்றார்கள்.

இன்னிலையில்தான் அன்புகாட்டவேண்டிய இடத்தில் அன்பு காட்டி, அரவணைத்து, உற்சாகப்படுத்தி, தட்டிக்கொடுத்தும், கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டித்தும், திருத்தியும், அறிவுரைகள் கூறியும் வளர்க்கின்றார்கள். இதை சில பிள்ளைகள் உணர்ந்து கொள்கின்றார்கள். பல பிள்ளைகள் உணர்ந்துகொள்ள முடியாமல் சீரளிகின்றார்கள். பெற்றோரின் சிறிய கண்டிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் பல தப்பான வழிகளை தேடி ஓடுகின்றார்கள்.

தந்தை தாயை மதிக்காமல் தமது இளமைப்பருவத்தில் தான் போன போக்கில் வாழ்ந்து மது, போதைவஸ்து, விபச்சாரம் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி தன்னிலை மறந்தவர்களாக பெற்று வளர்த்த பெற்றோரை கை நீட்டி அடித்தும் அவமானப்படுத்தி அலைக்களிக்கின்ற பிள்ளைகளும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு விவிலியம் சொல்வது இதுதான் **தன் தந்தையையோ, தாயையோ சபிப்பவர் கொல்லப்பட வேண்டும். (மத்தேயு 15:4) தன் தந்தை தாயை சபிப்பவரின் குருதிப்பிணி அவர் மேலேயே இருக்கும் (லேவி 20:9)**

அன்பான உள்ளங்களே திருவிவிலியம் சொல்லும் வார்த்தைகளை சாதாரணமாக எடுத்து விடமுடியாது. இந்த வார்த்தைகள் எக்காலத்திலும் நிறைவேறிக் கொண்டிருக்கும் உண்மைகளே என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எந்த பெற்றோரும் தனது பிள்ளையை கொடுமை செய்யவேண்டுமென்று நினைக்க மாட்டார்கள். மாறாக தன் உயிரைக் கொடுத்தாவது தம் பிள்ளைகளை வாழ வைக்க வேண்டும் என்று அவர்களின் உள்ளம் துடித்துக்கொண்டே இருக்கும். கடலிலும், தரையிலும், வானிலும் போராடி, வெயிலிலும், மழையிலும், காற்றிலும், பனியிலும் தம்மை உருக்கி பிள்ளைகள் வாழ்வில் ஒளியேற்றுகின்ற பாச தீபங்கள் தான் நம் பெற்றோர். **தன் தந்தையையோ தாயையோ பழிப்பவர் சபிக்கப்படட்டும் (இணைசட்டம் 27:16)** பெற்றோரின் தியாகங்களை கொஞ்சமும் உணராமல் தம் இளமைப்பருவத்தில் தன் காலூன்றி நிற்கும் நிலை வந்ததும் பெற்றோரை உதாசீனம் செய்யும் பிள்ளைகளும் தனக்கென்று ஒரு வாழ்க்கையைத் தேடிய பின்பு பெற்றோரை ஒதுக்கி இரண்டாம் நிலை தள்ளி விடுகின்ற பிள்ளைகளும் நம் சமூகத்தில் உண்டு. சொத்து பத்திற்காகவும், காணிபூமிக்காகவும் சண்டையிட்டு தகாத வார்த்தைகளால் பெற்றோரை ஏசி, கைநீட்டி அடித்து துன்புறுத்துகின்ற ஈனப்பிறவிகள் நம் மத்தியில் இல்லையா?

➡ 14

## - அருட்திரு.பி.ஏ.தோமஸ் அமதி அடிகளாரின் வாழ்வும் பணியும் -

# தோமஸ் அடிகளார் தோலகட்டி சந்நியாசி

செபமாலை கன்னியர் மடம், பட்டித்தோட்டம்

**நிச்சயமற்ற எதிர் காலத்தினுள் குதித்தல்**

"இறைவா என் கைகளைப் பிடித்து என்னை நடத்திச் செல்லும். நான் செல்லும் போது உம்மில் சாய்ந்து கொள்கின்றேன். என்னுடைய பாரத்தை நீரே தாங்கிக் கொள்ளும். பரிசுத்த ஆவியே விரைவாக இறங்கி வாரும். என்னை நோக்கியுள்ளது உமது பணியே நான் உம்மையே நம்புகின்றேன் என்னை வழிநடத்தும்" "நான் தான் சபை நிறுவுனரா? இல்லை பரிசுத்த ஆவியே நீர் தாம் இந்த பரிசுத்த சபையை ஆரம்பிப்பவர். அடிகளாருடைய சுய உரையாடல் ஒரு ஆழமான செபமாக மாறியது. நற்கருணை நாதர் முன் முழந்தாள்படியிட்டு செப்த்தில் மூழ்கினார். சுற்றுச் சூழல் மிகவும் அமைதியாக இருந்தாலும் அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் ஒரு வினா எழுந்தது. ஆண்டவரே நான் ஒன்றுமில்லாதவன் என்னைக் கொண்டு நீர் என்ன செய்ய முடியும்? மௌனமாய் இறைவன் முன் இருந்தார். தன்னிடம் வருபவர்களுக்கு என்றும் அதிசயங்கள் செய்யும் அடைக்கல அன்னை மரியாள் அருட்தந்தை தோமஸ் அடிகளாருக்காக காத்திருந்தாள். அடிகளார் அனைத்தையும் அத்தாயின் கரங்களில் ஒப்படைத்தார். பாவம் பல வழிகளில் தன் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது. செபம், தபம். ஓ! இந்த இரண்டு வார்த்தைகளையும் நான் எப்படி இந்த சமகால சமுதாயத்தின் செவிகளில் புகுத்துவேன் நிச்சயம் அவர்கள் என்னைக் கேலி செய்வார்கள். அறிவற்றவர்கள், சர்வ சாதாரண மக்கள் மாத்திரமல்ல நன்கு கற்றறிந்தவர்களும், புத்திமான்களும் கூட இந்தச் செய்தியைக் கேட்டு நகைப்பார்கள். "என்னைப் பின் செல்லுங்கள் என்றதும் சீடர்கள் தம் வலைகளையும், படகுகளையும் தமக்குள்ள யாவற்றையும் துறந்து இயேசுவைப் பின் தொடர்ந்தனர் என்னும் இறைவார்த்தையை உளம் கொண்டார். அருட்தந்தை தோமஸ் அடிகளார் இறைவனின் சமுத்திரத்தில் தன் படகினை செலுத்துவதற்காக திடமான விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டவரானார். சபை தோற்றம் பெறுமானால் அது பரிசுத்த ஆவியின் பணி அன்றேல் அது என்ன தோல்வி. தன்னையும் இந்தப் புதிய பணியையும் மரியாயின் மாசற்ற இருதயத்தின் மூலம் இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தன் செபத்தையும் தப முயற்சிகளையும் இரு மடங்காக்கினார். "இறைவன் வீட்டைக் கட்டினால் ஒழிய அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே" இதை தனக்குள் சொல்லிக் கொண்டார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கிய சாரளம்

# காயங்களும் குருதிப்பெருக்கும்

திரு.ச.தேவசகாயம், நியூயோர்க் USA.

நாளந்தம் நமது வீடுகளிலும், வேலை செய்யும் இடங்களிலும், பிரயாணங்களின் போதும் எதிர்பாராத விதமாக பல்வேறு விபத்துக்களைச் சந்திக்கின்றோம். இவ்வாறான விபத்துக்களில் நாம் எதிர்கொள்ளும் முக்கியமான பாதிப்பு காயம், முறிவு மற்றும் இதனால் ஏற்படக்கூடிய குருதி இழப்பு போன்றவையாகும்.

தோலின் இழையத்தில் ஏற்படும் சிதைவினைக் காயம் என வரையறை செய்யலாம். இக்காயத்தின் தன்மையினைப் பொறுத்து வெட்டுக்காயம், கிழிவு அல்லது சிராய்ப்புக் காயம், நசிவு அல்லது கண்டல் காயம், துளைகாயம், துப்பாக்கிச் சூட்டுக்காயம் என வகைப்படுத்தலாம்.

இவ்வாறு காயம் ஏற்படும்போது குருதிச் சுற்றோட்டத்தில் இருந்து குருதி வெளியேறுவதை குருதிப்பெருக்கு என அழைக்கின்றோம். இக்குருதிப்பெருக்கை சிறியளவான குருதிப்பெருக்கு, வெளிப்புறக் குருதிப்பெருக்கு, உட்புறக் குருதிப் பெருக்கு என வகைப்படுத்தலாம். வெளியேறும் குருதி எமது கண்ணுக்குத் தென்பட்டால் அது வெளிப்புறக் குருதிப் பெருக்கு எனப்படும். உதரணமாக காயப்பட்ட கை அல்லது கால் மற்றும் பிற உறுப்புக்களிலிருந்து குருதி வெளியேறு வதைக் குறிப்பிடலாம். ஆனால் வெளியேறும் குருதி எமது கண்ணுக்குத் தெரியாது உடலின் உட்புறமாக வெளியேறுமாக இருப்பின் அதனை உட்புறக் குருதிப்பெருக்கு என்பர். இதுவே மிகவும் ஆபத்தானதாகும். உதாரணமாக, வயிற்றின் உட்பகுதியில் ஏற்படும் குருதிப்பெருக்கினை குறிப்பிடலாம். இவ்வாறு உடலின் உட்புறத்தில் ஏற்படும் குருதிப்பெருக்கினை எமது உடலிலுள்ள துவாரங்கள் வழியாக வெளியேறுவதை வைத்தும் வேறும் சில அறிகுறிகளை வைத்தும் அறிந்து கொள்ளலாம்.

ஆயினும் இங்கு பெரியளவான வெளிப்புறக் குருதிப் பெருக்கும் அதற்கான முதலுதவி பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது. அதிகளவான குருதி இழப்பு ஏற்படும் போது, குருதிச் சுற்றோட்ட தொகுதி உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் போதியளவு குருதியினை வழங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக குறிப்பாக, மூளை மற்றும் இதயம் போன்ற உறுப்புக்களுக்கு போதியளவு குருதி கிடைக்காத காரணத்தால் அதிர்ச்சி ஏற்படுகின்றது. அவ்வாறு அதிர்ச்சி ஏற்படும்போது வெளிறிய சாம்பல் நிறத்தோல், உடல் வெப்பநிலையில் வீழ்ச்சி, உடல் வியர்த்தல், விரைவான சுவாசம், நினைவிழத்தல் போன்ற அறிகுறிகளைக் காணலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குருதிப்பெருக்கிற்கான முதலுதவி யினைச் செய்துகொண்டு அதிர்ச்சிக்கான முதலுதவியையும் செய்தல் வேண்டும்.

**அதிகளவான வெளிப்புறமான குருதிப்பெருக்கு ஏற்பட்ட ஒருவருக்கு பின்வருமாறு முதலுதவியினைச் செய்தல் வேண்டும்:**

காயப்பட்ட பகுதியின் மேல் ஏதாவது ஆடை மூடி இருப்பின் அதனை அகற்றி காயத்தினையும் குருதி வெளியேறும் இடத்தினை சரியாக இனங்காண வேண்டும்.

காயப்பட்ட பகுதியின் மேல் துப்பரவான துணியினை அல்லது ஒட்டாத பொலித்தீன் வகையான பொருளைக் காயத்தின் மேல் வைத்து நேரடி அமுக்கம் கொடுக்கவும். இவ்வாறு துப்பரவான துணி கிடைக்காத சந்தர்ப்பத்தில் நோயாளியின் கை பாதிப்புறாமல் இருப்பின் அவரது கையினால் காயத்தின் மேல் நேரடியாக அமுக்கத்தை கொடுக்க அறிவுறுத்தவும். காயத்தின் மேல் ஏதாவது பிறபொருள் குத்தியிருக்கும்போது அப்பொருளை எடுக்காது அதனருகில் அழுத்தம் கொடுக்கவும். இவ்வாறு நேரடி அமுக்கம் கொடுத்துக்கொண்டு இருக்கும் போதே காயப்பட்ட பகுதியை இதயமட்டத்திற்கு மேல் சற்று உயர்த்தி வைக்கவும். இவ்வாறு வைத்திருப்பதன் மூலம் குருதி இழப்பை கட்டுப்படுத்த முடியும்.

முடியுமாயின் நோயாளியைத் தரையில் படுக்க வைத்து கால்கள் இரண்டையும் உயர்த்தி வைக்கவும். தடிப்பான போர்வையினால் நோயாளியின் காலிருந்து கழுத்துவரை போர்த்திவிடவும். இதனால் அவருக்கு ஏற்படக்கூடிய அதிர்ச்சியில் இருந்து அவரை பாதுகாக்க முடியும். காயப்பட்ட பகுதியினை துப்பரவான துணி அல்லது பந்தணத்தைக் கொண்டு இறுக்கி கட்டவும். இவ்வாறு கட்டும் போது இரத்தோட்டத்தை தடைசெய்யாதவாறு கட்டுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.


காயத்தின் மேல் துணியினை வைத்து கட்டிய பின்னரும் கூட தொடர்ந்து குருதி வெளியேறுமாக இருப்பின் அதற்கு மேல் மீண்டும் ஒரு துணியை அல்லது பந்தணத்தை வைத்து இறுக்கிக் கட்டவும். இவ்வாறு கட்டியும் மேலும் குருதி வெளியேறி கட்டிய இரண்டு துணியும் நனைந்து காணப்படும் போது இவை இரண்டையும் நீக்கிவிட்டு புதிய துணியை வைத்துக் கட்டுதல் வேண்டும். காயப்பட்ட பகுதிக்கு மேல் உள்ள குருதியைக் கட்டுப்படுத்தும் அமுக்கப் புள்ளியின் மேல் அழுத்திப் பிடிப்பதன் மூலம் குருதிப்பெருக்கை கட்டுப்படுத்த முடியும். (இது தொடர்பான போதிய அனுபமுள்ளவர்களால் மட்டுமே இதைச் செய்யமுடியும் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

கட்டுப்போடப்பட்ட பகுதியை இதய மட்டத்திற்கு மேல் உயர்த்தியவாறு கட்டுப்போடப்பட்ட பகுதிக்கு மேல் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒருமுறை நாடித்துடிப்பினைப் பரிசோதிக்கவும். போடப்பட்ட கட்டானது மிகவும் இறுக்கமாக இருப்பின் அதனை சற்று தளர்த்தி குருதி சுற்றோட்டத்திற்கு ஏற்ப மீண்டும் கட்டவும். அவரது நாடித்துடிப்பு, சுவாசம் என்பவற்றைப் பரிசோதித்துக் கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும். சில வேளை நோயாளி சுயநினைவை இழப்பாராயின் அவரது சுவாசத்தைப் பரிசோதித்து தேவை ஏற்படின் செயற்கை சுவாசம் மற்றும் வெளி மார்பு அமுக்கத்தினைச் செய்தல் வேண்டும். (இதனை முறையாகப் பயிற்சி பெற்றவர்களால் மட்டுமே செய்ய முடியும் என்பதை கருத்தில் கொள்ளவும்)

முக்கியமாக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாக காயம் ஏற்பட்ட பின்னர் நோயாளிக்கு குடிப்பதற்கோ உண்பதற்கோ எதுவும் கொடுக்க வேண்டாம் காரணம் நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதும் மயக்க மருந்து கொடுக்க வேண்டியிருப்பின் இதனால் அவரது சிகிச்சைக்கான நேரம் தாமதமாகலாம்.

அத்துடன் காயப்பட்ட இடத்தில் ஏதாவது கண்ணாடி அல்லது மரம் போன்ற பொருள் குத்தியவாறு இருப்பின் அதனை அகற்ற முயற்சிக்க வேண்டாம். அப்பொருளை அசைக்காது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.●

## உடலுக்கும் பார்வைக்கும் குளிர்ச்சி தரும் தர்பூசணி



தர்பூசணியில் லைக்கோபீன் என்ற ஆன்டிஆக்ஸிடென்ட் அதிக அளவில் உள்ளது. இது மார்பு, நுரையீரல், கர்ப்பப்பை, பெருங்குடல் போன்ற இடங்களில் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கும். பொட்டாசியமும் அதிக அளவில் உள்ளதால் மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கும். இதயத்துடிப்பை சீராக்கும்.

தர்பூசணியில் பீட்டா கரோட்டின், வைட்டமின் சி, லூடீன், சியாக்ஸன்தின் போன்ற ஆன்டி ஆக்ஸிடென்ட்கள் அதிகளவில் உள்ளன. இவை மாலைக்கண்நோய், கண்விழி மிகை அழுத்த நோய் போன்றவற்றிலிருந்து கண்களைப் பாதுகாக்கும். அதேபோல இதில் 90 சதவிகிதம் அளவுக்கு நீர் உள்ளது. கோடை காலங்களில் இதைச் சாப்பிட்டால் நீரிழப்பு பிரச்சினைகள் ஏற்படாது. இதைத் தொடர்ந்து சாப்பிட்டுவர எடை குறையும்.

தர்பூசணி சாப்பிட்ட பிறகு அதன் தோல் பகுதியை தூக்கி எறியாமல், நம் சருமத்தில் தடவலாம். இதில் பக்ரீரியா தொற்று மற்றும் அலர்ஜிக்கு எதிரான தன்மை உள்ளது. முகப்பரு பிரச்சினைக்கும் இது நல்ல தீர்வு தரும். தர்பூசணியை தொடர்ந்துச் சாப்பிட்டுவந்தால், மனநிலை அமைதியாக, நன்றாக இருக்கும். கோடையில் ஏற்படும் எல்லா பிரச்சினைகளிலிருந்தும் நம்மை காக்கிறது தர்பூசணி. உடல் சூட்டைத் தணிக்கும் வெப்பம் மிகுந்த இந்த காலத்தில் இது நமக்கு கிடைத்த வரப்பிரசாதம்.●

## உடல் எடை அதிகரிக்காமல் இருப்பதற்கான உடற்பயிற்சி




நீங்கள் தினசரி கடைப்பிடிக்கும் வகையில் மூன்று விதமான எளிய உடற்பயிற்சிகளைப் பார்க்கலாம். ஒவ்வொரு பயிற்சிக்கும் 4 நிமிடங்கள் எனப் பிரித்துக்கொள்ளவும். ஒவ்வொரு பயிற்சியைச் செய்யும்போதும் 30 விநாடிகள் பயிற்சி, 10 விநாடிகள் ஓய்வு எனும் வகையில் கடைப்பிடிக்க வேண்டும்.

உடற்பயிற்சியை ஆரம்பிக்கும் முன்னர், "வார்ம் அப்" போன்று 10 விநாடிகள் நடைப்பயிற்சியை மேற்கொள்வது அவசியம்.

**1. படி ஏறும் பயிற்சி :** உங்கள் வீட்டில் இருக்கும் படிகளில் 4 நிமிடங்கள் ஏறி, இறங்க வேண்டும். ஆரம்பம் முதல் முடிக்கும் வரை ஒரே வேகத்தில் பயிற்சி செய்வது அவசியம். 4 நிமிடப் பயிற்சி நேரத்தில், ஒவ்வொரு 30 விநாடிக்கும் 10 விநாடிகள் ஓய்வு அவசியம்

**2. நாற்காலிப் பயிற்சி (Squat):** தோப்புக்கரணத்துக்கு மாற்றாக அதைவிட எளிமையாகச் செய்யக்கூடிய பயிற்சி இது. இரண்டு நாற்காலிகளை சிறிய இடைவெளி விட்டு வைக்கவும். முதல் நாற்காலியில் சரியாக அமர்ந்து, பின் அதிலிருந்து எழுந்து இரண்டாவது நாற்காலியில் அமர வேண்டும். ஆரம்பம் முதல் முடிக்கும் வரை ஒரே வேகத்தில் பயிற்சி செய்வது அவசியம். 4 நிமிடங்கள் செய்யவேண்டிய இப்பயிற்சியில் 30 விநாடிகளுக்கு ஒருமுறை 10 விநாடிகள் ஓய்வு தேவை.

**3. ஜம்பிங் ஜாக்ஸ்:** குதிக்கும் பயிற்சி. சற்று காலை அகட்டிக் குதித்து, அப்போது கைகளை பக்கவாட்டில் நீட்டியபடி மேலே கொண்டுசெல்ல வேண்டும். கால்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் போது கைகளும் இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். சற்றுக் குதித்து குதித்து வேகமாகச் செய்வது போன்ற பயிற்சி இது. பயிற்சியை ஆரம்பம் முதல் முடிவு வரை ஒரே வேகத்தில் செய்வது அவசியம். 4 நிமிடங்கள் செய்யவேண்டிய இப்பயிற்சியில் 30 விநாடிகளுக்கு ஒருமுறை 10 விநாடிகள் ஓய்வு அவசியம்.●

## கொஞ்சம் சிரிங்க





**டொக்டர்:** ஒப்ரேசன் முடிஞ்சு நடந்தே நீங்க வீட்டுக்குப் போகலாம்
**நோயாளி:** ஏன் டொக்டர் ஓட்டோவுக்கு கூட காசு இருக்காதா

..............................

**ராம்:** சரித்திரத்தை திரும்பி பார்த்தா அது எனக்கு கற்றுக்கொடுத்தது ஒன்று தான்
**சோம்:** என்னடா அது?
**ராம்:** நாம வாழனும்னா நேரா நேரத்துக்கு சாப்பிடனும்.

**நோயாளி :** பிளாஸ்ரிக் சர்ஜரி செய்ய எவ்வளவு செலவாகும் டொக்டர்
**டொக்டர்:** 5 இலட்சம் செலவாகும்
**நோயாளி:** நாங்களே பிளாஸ்ரிக் கொண்டுவந்தா எவ்வளவு குறைப்பீங்க
**டொக்டர்:** ?...

........................

**ஒருவர்:** டொக்டர் ஒப்ரசேன் பண்ணுறதுக்கு முன்னாடி என் பொண்ணுக்கு ஏன் மயக்க மருந்து கொடுக்கல?
**டொக்டர்:** உங்க பொண்ண நான் மயக்கிட்டதா யாரும் சொல்லிட கூடாது பாருங்க

**ஜோன்ஸ் :** எனக்கு ஹார்ட்ல மேஜர் ஒப்ரேசன் பண்ணனுமாம் டொக்டர் சொல்லிட்டாரு
**பீன்ஸ் :** டொக்டர் இருக்கும் போது ஏன் மேஜர் ஒப்ரேசன் பண்ணுராரு.
**ஜோன்ஸ் :** ?....

.............................

**நோயாளி:** டொக்டர் இடது முழங்கால் ரொம்ப வலிக்குது
**டொக்டர்:** வயசு போயிட்டு தானே அதுதான்.
**நோயாளி:** வலது காலுக்கும் அதே வயசு தானே ஆகுது. ஆனா அது வலிக்கலயே.

## மன்னா விளம்பரப் பலகை

சுற்றி இருப்பவர்கள்
சொல்வதை எல்லாம்
கேட்டுக்கொள்
கற்றுக்கொள் ஆனால்
தீர்மானிப்பது சுயமாக
இருக்கட்டும்...
எந்த எண்ணங்கள்
நம் மனதில்
உலவுகின்றதோ
அதன்
வடிவமே நாம்...

உங்கள் பலவீனங்களை
நீங்கள் எவ்வளவு
வேண்டுமானாலும்
நியாயப்படுத்திக்கொள்ளலாம்
ஆனால்
எப்படி இருந்தாலும்
அது உங்களுடையவை தான்
என்பதை நினைவில்
கொள்ளுங்கள்...

நம்மால் முடியுமா
என்று மனத்தளர்ச்சி
அடையாமல்
முடியும் என்ற
நம்பிக்கையுடன்
முயற்சி செய்தால்
அதுவே பெரிய
வலிமையாக அமையும்...

விளக்கம் கொடுப்பதால்
உன்னை யாரும்
புரிந்துகொள்ளப்
போவதில்லை.
உனக்கு பிடித்த
மாதிரியே வாழ்ந்து
பழகு இல்லையேல்
தீயும் வைத்தியமே...

மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978 2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## உயிர்த்தெழுந்தார் உன்னதரே



உலகெல்லாம் மீட்படைய
உன்னதம் உயர்ந்திட
உயிர் பெற்றெழுந்தார்
உன்னதத்தின் வேந்தனே

உதிரமதை சிந்தியே
உலகின் பாவம் போக்கியே
உயிர் துறந்து எம்மவர்க்காய்
உயிர் பெற்றெழுந்தார் உன்னதரே

மனித பாவம் களைந்திட
மனித சாயலாய் புவியில் அவதரித்து
மரியின் மகனாய் மாண்புடன் வாழ்ந்து
மண்ணிற்கு மாணிக்கமாய் வந்த எம் - உன்னதரே

பார் போற்றும் பாவேந்தராய்
பாவத்திற்கு கழுவாயாய்
எம்மவர்க்காய் உயிர்தியாகம்
செய்த உன்னதரே

"உயிர்தெழுந்த உன்னதரே"
உங்களிலே உடனிருந்து
உள்ளங்களிலே உம் தியாகம் உணர்ந்து
உத்தமராய் நாம் வாழ்ந்திட உதவியருளும்
உயிர்தெழுந்த உன்னதரே!

P. அன்ரனி குரூஸ் சரன்சலாமேரி
புனித அன்னை தெரேசா ஆலயம், துட்டுவாகை.

## "உயிர்ப்பின் மேன்மை"

வார்த்தை உலகில் மனிதனாய் தோன்றி
வாழ்வின் நெறியை உலகிற்கு காட்டி
வருந்திடும் உயிர்களுக்கு உற்சாகம் ஊட்டி
பாவிக்கும் வாழ்வு உண்டென்று காட்டி
பரிசுத்தன் இயேசு சாவை வென்று உயிர்த்தநாள் இன்று

மனித பாவத்தைத் தன் தோளிலே சுமந்து
நடக்க பெலமுமின்றி தனிமையாய் நடந்து
எங்களின் வாழ்வினை செழிப்புற எண்ணி
குருதியை எமக்காய் சிலுவையில் சிந்தி
உயிரின் மூச்சை எமக்காய் கொடுத்து
இறைமகன் கிறிஸ்து உயிர்த்த இன்ப நாள் இன்று

மனிதன் போட்ட திட்டத்தை மாற்றி
மனிதர்க்கும் உயிர்ப்பு உண்டென்று காட்டி
மாண்டிடும் வாழ்வைத் தரணியில் மீட்டு
இவ்வுலக வாழ்வில் மானிடரைக் காத்து
முடிவில்லா வாழ்வின் ஆசிகள் கொடுக்க
தூயவன் உயிர்த்தார் உலகினில் இன்று

இறைவனின் உயிர்ப்பால் இன்னல்கள் மறையுது
இகபரவாழ்வு பரிகாசம் கிடைக்குது
துன்பங்கள் மறைந்து இன்பங்கள் தளைக்குது
இருட்டான வாழ்வில் ஒளிக்கீற்று தெரியுது
பாவ வாழ்வை எம் வாழ்வில் களைந்து
இறைவனின் ஒளியில் தினம் தோறும் நடந்தது
உயிர்ப்பின் மகிமையில் அனைவரும் திளைத்து
இவ்வுலகில் காண்போம் மறுமையின் மேன்மையை

சி சுஜீவன் - மடுறோட்

## இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் (மத் 28:7)

உயிர் தரும் உறவாய் - இன்று
உயிர்த்தெழுந்தார் நம் இயேசுக்கிறிஸ்து
உள்ளத்தில் உவகை பொங்க – பல
உண்மைகள் உறுதியாகிய தருணம் இது

உத்தமனின் உதயம் உவப்பாக
உடை உரிந்த கூட்டம் ஊமையாக
உலகின் உரிமை மீண்டும் பிறக்க – மனித
உணர்வுகள் உயர்வடைந்த நேரம் இது

உதிரம் சிந்தி உருக்குலைந்து
உள்ளம் உடைந்து ஊசலாடி அடக்கப்பட்ட பின்னும்
உற்சாகத்துடன் வைகறையின் விடியலாய்
உலகின் வெற்றி கொண்டெழுந்தார் எம் இயேசு நாதர்

உயிரைப் பறித்து உதிரத்தைக் குடிக்கும்
உருவற்ற கொரோனா கொள்ளை நோயை
உருக்குலைக்கச் சாவினை வென்று
உலகை மீட்க வந்துவிட்டார் எம் அன்பர் இயேசு

அபிஷானி ஜெனிங்ஸ்
குருந்தைஇயேசுபுரம் - மன்னார்.

## புனிதர்களின் பாதை வாழ்வின் ஒளியே




தேடிய நிலவிலே என் வாழ்க்கை புனிதர்களே
இருள் சூழ்ந்த என் வாழ்க்கையினிலே
ஒளியாய் என் அகமதில் ஒளிர்ந்தவர்களே
கொடிய வேதனையிலும் இறைவழி நடந்தவர்களே


சிதறிய மந்தைகளை ஒன்று சேர்க்கவே
தடைகள் பல தாண்டி இனிதாகிடவே
துன்பங்களிலும் மன சோராதனவே
எமக்காய் துன்பங்கள் வென்றிடவே

உன்னதர் இயேசு பணி ஏற்றியே
குளிர், சூடு மனதில் தாங்கியே
எதிரியையும் நண்பனாய் மாற்றியே
துன்பங்கள் எமக்காய் வருந்தியே

இறை வழி என் வாழ்வு என மாற்றிடவும்
தாழ்ச்சி, எளிமை, கருணை என்னில் சேர்த்திடவும்
என் பயணம் பிறர் செல்லும் வழியாக மாறிடவும்
கனிதரும் எழில் மரமாக நான் வாழுவேன்.

L. சாள்ஸ் சர்மிலன்
தரணிக்குளம், வவுனியா கப்புச்சின் மிஷன் ஹோம்.

## அமைதியின் அருவுருவே நீயம்மா...



ஈரைந்து மாதங்கள் எனைத்தாங்கி ~ இவ்
உலகத்தைக் காட்டியவள் நீயம்மா! ~ உன்
இரத்தத்தில் ஒரு பாதி பாசத்தில் கலந்து
எனக் கூட்டியவளும் நீயம்மா!

என் முதல் காற்றும் நீயேயம்மா!
உன்னுடலில் இருந்துதான் ~ என்
சுவாசப்பை சுவாசிக்கக் கற்றது – அதனாலென்
சுதந்திர உயிர் மூச்சே நீயம்மா!

சுயநல உலகத்திலே – என்
தியாகத்தின் சின்னமாய் மிளிர்பவள் நீயம்மா!
உன் அன்பிற்கும், அரவணைப்பிற்கும்
எதைத் தருவேன் ஈடாக இவ்வுலகில்

ஞானத்தில் தலை நிமிர்ந்து நான் மிளிர
ஞானத்தில் எனை வளர்த்தாய் ~ நல்
ஆசானாயென்றும் வழி சமைத்தாய் ~ உலகிலோரே
அமைதியின் அருவுருவம் நீயேயம்மா...

S. மெல்வின் சிலாஸ்
காயாக்குளி, முள்ளிக்குளம்.

## சிந்திக்க சில துளிகள்...

### இலட்சியம்
நிகழ்கால பூமியை செதுக்கிக் கொடுத்ததே
இறந்த காலத்தின் இலட்சியம் தான்...

### கல்வி
கல்வி என்பது இதமான விஷயமாக மட்டுமல்ல
உனக்கு இணக்கமான விஷயமாகவும்
இருக்க வேண்டும்...

### நட்பு
சிறகு முளைத்தால் பறந்து விடுவதல்ல
சிலுவை கிடைத்தாலும் சுமப்பதே
உண்மையான நட்பு...

### மொழி
உணவு ஒரு மனிதன் சதையை வளர்க்கின்றது
மொழி ஒருவனின் அறிவை வளர்க்கின்றது...

### கலை
நாம் போக்குகின்ற பொழுதுகளை
ஆக்கத்திற்காய் பயன்படுத்த நம்மை
தூண்டுவது கலை...

### அடக்கம்
அடக்கம் என்பது எதிராளியை மதிப்பது
மட்டுமல்ல தன்னைத்தானே மதிப்பிட்டுக்
கொள்வதும் கூட...

### சோம்பல்
தூக்கம் என்பது கண்களின் தர்மம்
சோம்பல் எனபது ஒருவகையான
தற்கொலை...

### வீரம்
சிறுமை கண்டு பொங்கும் இளம்
சிந்தையின் கம்பீரமான அடையாளம்

### சாதனை
சாதனைகள் நம் கனவுகளிலிருந்து
பிறந்தவையே தவிர அனுபவங்களில்
இருந்து பிறந்தவை அல்ல...

### உறவு
நீ உன் சுயநலத் தீவிலிருந்து பிறர்நல
சமுத்திரத்திற்கு பயணம் செய்ய
பயன்படுத்தும் தோணி...

இ.றோமியோ குரூஸ்
காயாக்குளி, முள்ளிக்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.221
## எரேமியா (அதிகாரம் 15 முதல் 21 முடிய)

உங்கள் விடைகளை மே மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | | | | | 03 |
| | 04 | | | | | 05 | | ✱ | | |
| | ✱ | | | 06 | | | | | | |
| | 07 | | | | | | | | 08 | |
| 09 | | | | | 10 | | 11 | | | |
| | | | 12 | | | | | | | ✱ |
| | | | | 13 | | | | 14 | | |
| | 15 | | | | 16 | | | | 17 | ✱ |
| | | ✱ | ✱ | | | 18 | | | | |
| | | | | 19 | | | 20 | | | |
| 21 | | | | ✱ | | | | | | 22 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. உம் சொற்கள் எனக்கு ……………. தந்தன.
2. அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச் ………………… ஒப்பாவார். (இறுதி இரு எழுத்துக்களும் மாறியுள்ளன.)
4. ஆண்டவராகிய நானே இதயச் ……………. களை ஆய்பவர்.
7. குயவனின் உடைக்கப்பட்ட மண் கலயத்தை ……………… ஒட்ட வைக்க முடியாது.
9. அவர்களைக் கண்டு உலகத்தின் அரசுகள் ………………… திகில் அடையும்.
12. ஏனெனில் அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் ……………….று விடுவித்தார்.
14. திடீரென அவள் துயரும் திகிலும் ……………………… ச் செய்தேன்.
15. தாங்களோ தங்கள் மூதாதையரோ யூதாவின் அரசர்களோ அறிந்திராத வேற்றுத் தெய்வங்களுக்குத் ………………………… காட்டினார்.
16. அவர்கள் கொடும் நோய்களால் ……………………… கள். (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
21. அவர்கள் மேல் தீமையை அனுப்ப வேண்டும் என்று நான் உம்மை …………………… வில்லை.

**மேலிருந்து கீழ்**

1. அவை எனக்கு ……………….. இருப்பதில்லை.
3. பாலை …………… வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர்.
5. நீ எழுந்து ……………… வீட்டுக்குப் போ, அங்கு என் சொற்களைக் கேட்கச் செய்வேன்.
13. ஆனால் ஆண்டவர் ……………… வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கின்றார்.
14. முன்பின் தெரியாத ஒரு நாட்டில் எதிரிகளுக்கு உங்களை …………………… ச் செய்வேன்.
15. உன் உயிரை முன்னிட்டு ஓய்வுநாளில் சுமை ……………. வேண்டாம்.
16. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட …………. க்கு ஒப்பாவர்.
17. உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன. என் உள்ளத்திற்கு ……………………… அளித்தன.
18. நான் கொடுத்த கட்டளைப்படி …………………… நாளைத் தூய்மையாகக் கடைப்பிடியுங்கள்.

**கீழிருந்து மேல்**

8. என் ……………… யும் என் வலிமையும் அறியும்படி செய்வேன்.
10. அதனை ……………… புரிந்து கொள்வர்?
11. உங்கள் மூதாதையருக்கு நான் கொடுத்த ……………………… ப் படி ஓய்வுநாளைத் தூய்மையாய்க் கடைப்பிடியுங்கள். (2ம்,3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
13. உங்களுக்கு எதிராய் வரப்போகும் தீமைக்கு ………………… கொடுத்துக் கொண்டிருக்கின்றேன்.
14. அது நகரின் ………………… களை அழித்துவிடும். (3ம்,4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
17. வடக்கிலிருந்து வந்த இரும்பையும் வெண்கலத்தையும் யாரால் ………………… முடியும்?
20. ஆனால் வெளியேறி உங்களை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் கல்தேயரிடம் சரணடைபவன் …………………… பிழைப்பான்.
21. என் சீற்றம் ……………………… வெளிப்பட்டு பற்றியெரியும்.
22. ஆண்டவர் நானே …………………… சிந்தனைகளை ஆய்பவர்.

**வலமிருந்து இடம்**

3. நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய ……………….க் கொண்டு வருவேன்.
6. உங்கள் வழிகளையும் ………………… களையும் திருத்திக் கொள்ளுங்கள்.
8. என் பெயர் ……… என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.
10. உம்மைப் புறக்கணித்தோர் …………………… வெட்கமுறுவர்.
12. மாடரின் ……………. ன்று உன்னை மீட்பேன்.
13. ஏனெனில் என் …………….. உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன்.
14. அதனை ……………………… வைத்து சோர்ந்து போனேன்.
19. இந்தக் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல இஸ்ராயேல் வீட்டாரே நீங்கள் என் …………………… இருக்கின்றீர்கள்.
22. ……………………………… அனைத்திலும் வஞ்சகம் மிக்கது.

11ம் பக்கத் தொடர்ச்சி

## பெற்றோரை பராமரித்தலும் கனம்...

மனைவியின் அல்லது கணவனின் தொந்தரவு என்று சொல்லி தமது உதிரம் சிந்தி உயிர்கொடுத்து வளர்த்த பெற்றோரை முதியோர் இல்லங்களிலும், அனாதை விடுதிகளிலும் அனுமதித்து சாபங்களை தனதாக்கி கொள்ளுகின்ற கேவலமான பிள்ளைகள் நம் மத்தியில் இல்லையா? முதிய நிலையில் பெற்றோரை பராமரித்துவிட்டு அவர்களின் சொத்துகளுக்கு நான்தான் சொந்தக்காவலன் என்று சொத்திற்காக மட்டும் பெற்றோரை பாரமரிக்கும் பிள்ளைகள் இப்பூமியில் ஏராளமாக உண்டுதானே? கணவரின் தாயை ஒதுக்கிவிட்டு மனைவியின் பெற்றோரை ஒதுக்கிவிட்டு தனது பெற்றோரை மட்டும் பராமரிக்க வேண்டும் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற மருமக்களும் நம் மத்தியிலே உண்டு தானே? யாருடைய பெற்றோராய் இருந்தாலும் வலியும் வேதனையும் ஒன்றுதான். அவர்களுடைய கண்ணீர் நம் வாழ்விற்கு நன்மையை ஒருபோதும் தராது.

**என்னை நல்லடக்கம் செய் உன் தாயை மதித்து நட அவள் வாழ்நாள் முழுவதும் அவளைக் கைவிடாதே அவளுக்கு விருப்பமானதை செய் எவ்வகையிலும் அவள் மனதை புண்படுத்தாதே மகனே நீ வயிற்றில் இருந்த பொழுது உன் பொருட்டு அவள் தாங்கிய துன்பங்களை நினைத்துப்பார் அவள் இறந்த பின் என் அருகில் அடக்கம் செய் (தோபித்து 4:3-5)**

அன்பு உள்ளங்களே நமது பெற்றோர் முதிர்நிலை அடையும் போது அவர்களிடத்தில் ஒரு குழந்தைக்கு உரிய இயல்பு வந்துவிடும். நாம் நமது குழந்தைப் பருவத்தில் எத்தனை குறும்புத்தனங்களையும், குழப்படிகளையும் நாம் செய்திருப்போம். அவற்றையெல்லாம் சகித்து, ரசித்து, தாங்கி ஏற்றுக்கொண்டு வாழ்வு கொடுத்தவர்கள், வளர்தெடுத்தவர்கள் அவர்கள். அதேபோல் அவர்களின் முதுமையில் குறும்புகள், குழந்தைத்தனங்களை பெரிதுபடுத்தாது பொறுமையுடன் சகித்து அவர்களை மரணம் வரை பராமரித்து பாதுகாத்து அவர்களின் ஆசீர்வாதங்களையும், இறைவனின் ஆசீர்வாதங் களையும் சுதந்தரித்துக் கொள்வோம்.

**உன் தந்தையை முழு உள்ளத்துடன் மதித்து நட, உன் தாயின் பேறுகால துன்பத்தை மறவாதே அவர்கள் உன்னை பெற்றெடுத்தார்கள் அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்யமுடியாது என்பதை நினைவில்கொள் (சீராக் 7:27-28)**

**பெற்ற தந்தைக்கு செவிகொடு உன் தாய் முதுமை அடையும்போது அவளை இழிவாக எண்ணாதே (நீதிமொழி 23:22)**

**நீ உன் தந்தையையும் தாயையும் மகிழ்விப்பாயாக உன்னை பெற்றவளைக் களிகூரச் செய்வாயாக (நீதிமொழி 23:25)**

7ம் பக்கத் தொடர்ச்சி

## உயிர்ப்பு தரும் புது வாழ்வு...

**இறைவனின் மக்கள்**

கிறிஸ்துவில் இணைந்த நாம் அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றோம். "அப்பா" என்று கடவுளை அழைக்கும் உரிமையை பெற்றவர்களாகின்றோம். இந்த உரிமையை பெறுவதற்கு காரணம் தூய ஆவியே (உரோ 8:15)

**சாவிலிருந்தும், சட்டத்திலிருந்தும் விடுதலை**

கிறிஸ்து தனது உயிர்ப்பால் சாவினை வென்று அதன் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார். அதுமட்டுமன்றி மோயீசன் சட்டத்தின் துணைகொண்டு பரிசேயர் ஏற்படுத்திய வெளிவேடங்களிலிருந்தும், ஆசாரங்களிலிருந்தும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். அன்பு ஒன்றுதான் அவர் கொடுத்த கட்டளை! சட்டம்!!..

**மனமாற்றம்**

எவ்வாறு கிறிஸ்துவின் மனிதாவதாரம் நம்மிலே மாற்றத்தை திருப்பத்தை ஆசிக்கிறதோ அவ்வாறே உயிர்ப்பும் எதிர் நோக்குகிறது. இந்த மனமாற்றம் மனிதனின் உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே இந்த மனமாற்றம் அவனது ஆன்மீக பொருளாதார, சமுக வாழ்விலே மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

**தூய்மை**

மனமாற்றம் ஒருபொழுதும் மனிதனால் நிகழ்வதில்லை. அதற்கு ஆண்டவரின் அருள் தேவை அந்த அருளின் உதவியால் தான் புதுவாழ்வு நிலை நிற்கமுடியும் விசுவசிப்போர் அனைவரும் ஒருவகையில் தூயவர்கள்! புனிதர்கள்! (உரோ 2:7) "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும் படி அவர்களுக்காக என்னையே அர்ப்பணமாக்குகின்றேன்" (யோவா 17:19)

**மகிழ்ச்சி**

உயிர்ப்பின் மற்றொரு முக்கிய கொடை மகிழ்ச்சியாகும். கிறிஸ்தவன் வாழவேண்டிய புதுவாழ்வின் ஒரு அவசியமான தன்மையும் மகிழ்ச்சிதான் கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சி அவனைப் புது மனிதனாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுள்ளவனாக வாழ்ந்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சி தெரிய வேண்டும். "மகிழ்ச்சியாயிருங்கள்! இடைவிடாது செபியுங்கள்! நன்றி கூறுங்கள்!" (1தெச 5:14) "ஆண்டவரில் அகமகிழுங்கள் காரணம் ஆண்டவர் அண்மையில் உள்ளார்" (பிலிப்பி 4:4) எனவே மகிழ்ச்சியுடன் புதுவாழ்வை ஆரம்பிப்போம் புதுவாழ்வில் திளைத்திடுவோம். ●

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 219 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
P. சுபஸ்னா
காத்தான்குளம்.

**இரண்டாம் பரிசு:**
நெ. ஆன் ஒலிவியா
பெரிய குஞ்சுக்குளம்

**மூன்றாம் பரிசு:**
E. திரேசில்டா
கற்கிடந்தகுளம், முருங்கன்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 124 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 101 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.219ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. மேரி ஜென்சி துரம் - தலைமன்னார்.
2. நிக்ஸ்சிகா ரெக்ஸ்சன்ராஜ் - இறம்பைக்குளம், வவுனியா.
3. ப. ஜனார்த்தன் துரம் - பறப்பாங்கண்டல், சிறுக்குளம்.
4. G. மடோனா – சிதம்பரபுரம்.
5. செ. இன்பென்ரா டயஸ் - மரியாள் வீதி, தாழ்வுபாடு
6. K. கல்பனா – சிதம்பரபுரம்.
7. றி. அமலதர்சினி குரூஸ் - மறிச்சிக்கட்டி, முள்ளிக்குளம்.
8. D. அக்ஷயன் - நானாட்டான்.
9. ப. மேரி மன்ரேசா – நெடுந்தீவு
10. கி. எபிக்ஷன் கூஞ்ஞ – தலைமன்னார்.
11. கி. வேஸ்ரின் - ஆண்டாங்குளம்.
12. ஆ. றூபன்ஜீசஸ் டலிமா - ஆனாள் நகர், வங்காலை.
13. பர்னாந்து யுஜேனிக்கா – காத்தான்குளம்.
14. S. செபமாலை மார்க் - வங்காலை
15. நீ. நிலவரசி – அந்தோனியார்புரம்
16. E.K. ஏரோண்சி – கங்காணிதீவு, நானாட்டான்.
17. நீ. மேரி நியூட்சலா – அந்தோனியார்புரம்.
18. ச. மேரி ஜஸ்மின் - காத்தான்குளம், வட்டக்கண்டல்.
19. அகுஸ்தீன் இசக்கியேல் - ஜோசப்வாஸ் நகர்.
20. ந. நநித்தா – பெரியபண்டிவிரிச்சான்.
21. சி. தனுசன் - எருவிட்டான், நானாட்டான்.
22. ம. றெக்சன் மொறிஸ் - பெரியபண்டிவிரிச்சான்.
23. டெனிசன் மரியோ பிறீனா – நெடுங்கண்டல், அடம்பன்.
24. M. பிறைன் நிம்றோத் பீரிஸ் - பள்ளிமுனை.
25. சி. டொறின் - மகாறம்பைக்குளம், வவுனியா.
26. N.S. மரியம்மா பீரிஸ் - வங்காலை.
27. J. யுவேதன் - நானாட்டான்.
28. ச. நிறோஜன் - கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
29. இ. மேரி அனுஷா – ஆத்திக்குளி, அளவக்கை.
30. ச. மரிய கொண்சிக்கா குரூஸ் - சவேரியார்புரம்.
31. கு. திவோஜினி – பெரியபண்டிவிரிச்சான்.
32. P. கீர்த்தியா – சாந்திபுரம்.
33. எ. மெறோஷ் பீரிஸ் - வங்காலை.
34. வே. ஐறின் ஜெனனி – ஆண்டாங்குளம்.
35. செ. டிலானி – உயிர்த்தராசன்குளம்.
36. ஜெனிங்ஸ் ஜெசிமன் - குழந்தையேசுபுரம்.
37. V. லூட்ஸ் ஜெனிபர் - விடத்தல்தீவு.
38. J. ஆன் றுக்ஷாயினி – பள்ளங்கோட்டை, நானாட்டான்.
39. M. பிளண்ரீனா – கன்னியர்மடவீதி.
40. ச. டிலுக்சன் - சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
41. பெற்றிக் கெப்றின் றோச் - பள்ளிமுனை.
42. ப. கனோமிகன் - காத்தான்குளம்.
43. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா – ஆனாள் நகர், வங்காலை.
44. யே. அஜித்திரா றோச் - பள்ளிமுனை.
45. ப. கிறேஷியன் கூஞ்ஞ – தலைமன்னார்.
46. றி. ஆன் ஆஸ்லின் துரம் - முள்ளிக்குளம்.
47. செ. ஆன் நியூசிக்கா துரம் - தாழ்வுபாடு.
48. ச. டவ்ஷன் - சூரியகட்டைக்காடு நானாட்டான்.
49. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை.
50. செ. வளன் நிலுஜன் துரம் - தாழ்வுபாடு.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 08 1937



உதிர்வு 22 02 2021

### திருமதி. பிலிப்புப்பிள்ளை இராசேந்திரம் சபினம்மா
(அச்சங்குளம், நானாட்டான்)

எங்கள் இல்லத்தின் தெய்வமே! என்றும் எம் உள்ளங்களில் வாழும் ஆருயிர் அம்மா! நீங்கள் இல்லாத உலகமே இருளாய்த் தெரிகிறதே தாயே! உங்களை இழந்து நாங்கள் சிறகிழந்த பறவை போலானோம். வேரிழந்த மரம் போலானோம். நீரில்லா நிலம் போலானோம் எங்களை வித்தகராக்க நீங்கள் பட்ட பாடுகளை நாம் அறிவோம் அன்னையே! அழுகின்றோம் அழுகின்றோம் தினமும் அழுகின்றோம் எங்கள் அழுகுரல் கேட்கவில்லையா அன்புமிகு தாயே! எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீங்கள் தான் எங்கள் அம்மாவாய்த் தோன்றவேண்டும் உங்கள் மடியில் நாங்கள் தலைவைத்து உறங்க வேண்டும் அம்மா! உங்கள் அன்புமுகம் காணத் துடிக்கின்றோம். இறைசந்நிதியில் இளைப்பாறும் எங்கள் ஆருயிர்த் தாயாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக அச்சங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 24.03.2021 அன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். என்றும் அணையாத பாசத்துடன்: அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

தகவல்: கபிரியேல் நிகிலா குடும்பத்தினர் (சுவிஸ்)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 09 1958



இறப்பு 21 04 2020

### திரு. றோசாயில் லூக்காஸ்
(நெடுங்கண்டல், அடம்பன்)

கலங்கிப் போனோம் அப்பா கண் இமைக்கும் பொழுதில் எம்மை விட்டு போய் விட்டீர்களே அப்பா இரண்டு கண்ணாக எம் இருவரையும் காத்து வளர்த்தீர்களே. உம்மோடு நாமிருந்தது அழகான ஆனந்தமான காலமப்பா உம் அன்பில், உம் அரவணைப்பில் உங்கள் கட்டுப்பாடான வளர்ப்பில் நாம் வாழ்ந்த அந்த நாட்களை மறக்க முடியவில்லையே அப்பா, உம்மைப் பிரிந்து வாடிய மலராக வதங்கி விட்டோம் அப்பா. பார்க்கும் இடமெல்லாம் உம் பாசமுகம் தெரியுதப்பா. எம்மை விட்டு நீங்கள் சென்று ஓராண்டு ஓடி மறைந்தாலும் ஒவ்வொரு நொடியிலும் உங்கள் பாசத்தில் நாம் வாழ்வோம் அப்பா உங்கள் ஆன்மா அமைதி காண அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03 11 1961



விண்ணில் 06 04 2020

### திரு. செபஸ்ரியான் லீனஸ் ஜயசீலி கூஞ்ஞ
(3ம் வட்டாரம், பேசாலை)

அன்புக்கு இருப்பிடமாய் பண்பிற்கு உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் பாரினில் வந்தாய் – அப்பா
பாதியில் விட்டு நீயும் பரலோகம் சென்றதேனோ?
பாரினில் உன் முகம் இனி பார்க்கவும் முடியுமோ?
பரிதவிக்கின்றோம் – அப்பா பரிந்து பேசுவீர் எமக்காக
உம் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்

பிரிவினால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 02 1972



உதிர்வு 24 04 2020

### திருமதி. சூரியகாந்தன் ஹெவின்றோஸ்
(ஆசிரியை) (மாவிலங்கேணி)

ஆண்டொன்று போனாலும் ஆறாது ஆறாது எம் துயர்,
பாசப்பறவை பறந்து விட்டது. தியாக தீபம் அணைந்து விட்டது.
அன்பு மனைவியாய், பாசம்நிறை சகோதரமாய், உறவினளாய்,
நல்லதொரு ஆசானாய், ஆசிரியர்களின் ஆருயிர் தோழியாய்,
வலயத்தின் சிறந்த தமிழ்பாட வளவாளராய், பார்போற்ற வாழ்ந்துவிட்டு,
எங்கே? அம்மா ஓடி மறைந்தீர்கள் பேசாமல் போய்விட்டீர்கள்.
இனி எப்போது அம்மா காண்போம்? உங்கள் இனிய வதனம்!
எம்மவர்க்காய், மன்றாடுங்கள்! அமைதியில் இளைப்பாறுங்கள்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவில் வாடும்
பாசமிகு கணவர், தாய், சகோதரர்கள், உறவுகள்,
ஆசிரிய நண்பர்கள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 12 1950



உதிர்வு 25 04 2018

### திரு. அ. மரியான் வெற்றிசீலன்
(வஞ்சியன்குளம், வங்காலை)

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்திற்கு இருப்பிடமாய்
உழைப்பின் உன்னதனாய்
பாரினில் நல்வாழ்வு வாழ்ந்து
பரமனின் பாதம் சரணடைந்தீர்கள்
நித்தியமும் வான்வீட்டில் இளைப்பாற
நித்தமும் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்...

பிரிவினால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 12 1940



இறப்பு 01 04 2011

### திருமதி. தாசில்லா கூஞ்ஞ
(பெற்றா, மன்னார்)

பொறுமையின் சிகரமாய் பாசத்தின் இன்ப ஊற்றாய் எம்மை வளர்த்த அன்புத் தாயே! எமக்கு கல்வி கற்பித்து ஏற்று உலகில் வாழ வழி சமைத்தீர். ஆறு பிள்ளைகளை ஈன்றெடுத்து அன்புடன் வளர்த்து எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்து விட்டீர். தையல் கலையில் சிறந்தவர் என பெயர் எடுத்தீர். உமது ஆன்மா சாந்திபெற ஆண்டுகள் பத்து கடந்தாலும் என்றும் எம் உள்ளங்களில் வாழ்கின்றீர்

பிரிவால் துயருறும்:
கணவர், மகன்மார், மகள்மார்,
பேரன் பேத்திமார்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 03 1951



விண்ணில் 16 04 2010

### செல்வி யசிந்தா குருஸ்
(பேசாலை)

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம். செத்தாலும் ஆண்டவருக்கென்றே சாகின்றோம்"

நீ உனக்கென்று என்றுமே வாழ்ந்ததல்ல,
நண்பன் யேசுவே உன் வழிகாட்டி அவர் வழியில்
வாழ்ந்த உன்னை அவர்தம் அன்பின் ஒளியில்
வைத்துள்ளார் என்று எமது நம்பிக்கை இறை அன்பில்
நாம் என்றுமே ஒன்றித்திருப்போம்

அன்னாரின் ஆன்ம இளைபாற்றிக்காக 16.04.2021
புனித வெற்றியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்

இவரின் பிரிவால் துயருறும்:
சகோதரிகள், மகன்மார், மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

## 15ம், 17ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. திருமதி. பாலசுந்தரம் மதலேனாப்பிள்ளை
(இத்திகண்டல், அடம்பன்)

மலர்வு : 22.08.1947
உதிர்வு : 10.04.2006

மலர்வு : 15.03.1941
உதிர்வு : 04.11.2004

அன்பெனும் கிரீடம் சூட்டி, பண்பெனும் கவசம் தந்து, பாரினில் நாம் பவளமாய் ஒளிர, நல்வரம் கொடுத்த எம் பாசமிகு தெய்வங்களே! இற்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து நீங்கள் இறையடி சேர்ந்து பல ஆண்டுகள் ஆனதுவே, அன்பை ஊட்டி வளர்த்து நீங்கள் எமைவிட்டு பிரிந்து போனாலும் எப்போதும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள். உங்களது ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற இறைவனடி இரந்து செபிக்கின்றோம்...

நீங்காத நினைவுகளோடு
பாசமிகு மகன் அருட்பணி. பா.றொசான்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

11ம் பக்கத் தொடர்ச்சி

### பயம் ஏன் எமக்கு...

ஞானி சில நாளின் பின் அந்த நாய் வந்து ஞானியிடம் கூறியது. இந்தப் புலி என்னை படாத பாடு படுத்துகின்றது தயவு செய்து என்னை ஒரு புலியாக மாற்றிவிடுங்கள் என்றது நாய். ஞானி நாயை புலியாக மாற்றிவிட்டார். ஆனால் சில நாளின் பின் மீண்டும் புலி அங்கே வந்தது. ஞானியிடம் மன்றாடியது இக்காட்டில் வேடன் என்னை வேட்டையாட வருகின்றான். தயவுசெய்து என்னை வேடனாக மாற்றி விடுங்கள் என்று ஞானியை வினையமாக வேண்டியது. ஞானியும் புலிலை வேடனாக மாற்றினார். எனினும் சில நாட்களின் பின் வேடன் ஞானி முன் நின்றான். இப்போது உனக்கு என்ன வந்தது என்றார் ஞானி எனக்கு பிறமனிதர்களைக் கண்டால் பயமாக இருக்கிறது. ஆகவே இடைமறித்தார் ஞானி ஏ சுண்டெலியே உன்னை எதுவாக மாற்றினாலும் உன் பயம் உன்னை விட்டு போகாது. நீ பழையபடி சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு உனக்கு சுண்டெலியின் இதயம்தான் இருக்கின்றது என்றான் ஞானி. உள்ளத்தில் பயம் அகலாத வரை எதுவாக மாற்றினால் என்ன பயும் ஓர் எண்ணம். அதை அகற்றி நம்பிக்கை, துணிவு என்ற மாற்று எண்ணங்களை வைக்காதவரை பயமே நம்மை ஆட்டிப்படைக்கும். பயமே நம்மை விரட்டிக் கொண்டிருக்கும் அதனால் நமக்கு வேறுபட்ட எதிர்பாராத துன்பங்களும் சூழ்ந்து துயரத்தில் ஆழ்த்தி ஆட்டிப்படைக்கலாம். ●

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## துறவற வாழ்வில் வெள்ளிவிழா ஆண்டு



தமது துறவற வாழ்வில் வெள்ளி விழாவை நினைவுகூரும் இவ் ஐந்து அருட்சகோதரிகளையும் வாழ்த்துவதோடு இதுவரை காலமும் இவர்களின் சிறந்த பணிவாழ்வுக்கும், இவர்களை எமக்கு தந்த அவர்களின் குடும்பங்களையும் நன்றியோடு நினைக்கின்றோம். மென்மேலும் இவர்களது இறைபணி பாரெங்கும் சிறந்த விளங்க தேவையான உடல், உள பலம் தந்து தந்தையாம் இறைவன் வழிநடத்த வேண்டும் என்று செபித்த நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: Sr. நிலானியின் சகோதரிகள் குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

**திரு. மரியதாசன் கிறிஸ்துதாசன் பறுனாந்து**
**(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)**

தோற்றம்: 29.11.1956 மறைவு : 06.02.2021



நேற்று வேறொன்றையும் இன்று
மற்றொன்றையும் மாற்றி மாற்றிக் காண்பதே
உலகாகி விடும்போது - நீவீர் கதைத்ததும்
வாழ்ந்ததும் நெஞ்சினில் விதைத்ததும்
ஒன்றாகவே இருக்கும் அன்பும் பாசமும்
அதனூடே இசைந்ததும் வாழ்வும் மண்ணோடு
தங்கி நிற்க விண்ணுலகின் வேந்தனிடம்
சென்றுறைந்தாய் ஐயா...
கடமையில் நேர்மையாய்
உண்மையில் ஓர்மையாய்
மற்றவர்க்கு உதவும் பண்பினனாய்
நீரிருந்ததை யாம் எப்படி மறவோம்?

நினைவுகள் தாங்கி நிற்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்
மற்றும் உற்றார் உறவினர், அயலவர், நண்பர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 16 |
| 01 | 04 |
| 1965 | 2020 |



**திரு. சல்வதோர் அமலநாதன்**
அதிபர், மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை
(கன்னாட்டி, அடம்பன்)

குடும்பத்தின் குதுகலமே குதுகலத்தின் காவியமே
ஓவியமாய் இதயத்தில் உம் உருவம் தெரிகின்றதே!
ஓராண்டு முடிந்தாலும் ஒரு நொடியும் மறவோமே!
வடிக்கின்றோம் கண்ணீரை - உம்
வதனமுகம் தினம் தேடி வல்லவரே! நல்லவரே! - உம்
வான்வீட்டில் நிம்மதியை நிறைவாக ஈந்தருளும்...

பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை மற்றும் உற்றார் உறவினர்கள்

## விண்ணக வாழ்வில் ஓராண்டு நினைவலைகள்



**லியோ ரொமாறியோ குருஸ்**
**(செல்வராஜ்)**

மண்ணில் 2007.11.10 விண்ணில் 2020.04.16

அழகான உன் முகம் - அதில் அழியாத புன்னகை
வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி விட்டுச் சென்ற வாடா மலரே
றொமா உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல உடைந்தது எங்கள்
இதயமே! விருந்துண்டு அயர்ந்து தூங்கும் வயதில் நோய்க்கான
மருந்துண்டு சென்றதேன்? இனி உன்னை நோய்
என்ன செய்யும்? நோயே... இதில் உனக்கென்ன இலாபம்?
எத்தனையோ துன்பங்களை அகத்தே சுமந்தாய் எத்தனை
இடர்வந்தும் பூ முகத்தை பூவாகவே வைத்தாய். ஆசைகளை
முக நூலில் விதவிதமாய் தீர்த்தாய் அதிக நண்பர்களை
உள்ளத்தில் சேர்த்தாய் - அறிவாரோ யாரும்
உன் சோகம் - விழியிலே உன்னை வைத்து விழி நீரால்
சொல்கிறோம் - ஓராண்டுகள் ஓடி மறைந்தாலும் உன் அழகிய
முகம் மறைந்திடுமா? ஒருநாள் விண்ணில் உன்னை
முக முகமாய் சந்திப்போம் சிறிய புனிதனே றொமா
உன் ஆன்மா இறைவனில் இன்புற இறைவனை
வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைபாற்றிக்காக 16.04.2021 மாலை 5.30 மணிக்கு
பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில்
திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி றியான்சன், அருட்சகோதரி ஹில்டா (மாமி),
உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 21 |
| * | * |
| 05 | 04 |
| * | * |
| 1953 | 2019 |



**அமரர்**
**திரு.மைக்கல் மரியதாஸ்**

தகவல்
சகோதரி அமலஉற்பவி பேனாட் ஆனந்தநாயகம்,
தோட்டவெளி

விடத்தல்தீவை பிறப்பிடமாகவும் பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மெற்றில்டாவின் பாசமிகு கணவனுமாவார். அன்னார் 2019ம் ஆண்டு தென்னிலங்கையில் அதாவது கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் பயங்கரவாதிகளின் தற்கொலைக்குண்டு தாக்குதலில் பலியானார். அன்னார் ஓய்வுபெற்ற இலங்கை வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் AJA காப்புறுதி நிறுவனத்தின் ஆலோசகரும் ஆவார். அன்னாரின் 2ம் வருட நினைவில் அவரின் ஆன்மாவிற்காகவும் அவருடன் வேதத்தின் சாட்சிகளாக மரித்தவர்களுக்காகவும் மன்றாட தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

**Let us pray:** Heavenly Father, your Son, our Lord Jesus Christ gave us the Eucharist as a lasting memorial of his saving death on the cross. We pray for those who lost their lives in the Church bombings on Easter Sunday in 2019. As they were united to Christs' suffering and death, may they share with him in the glory of Eternal life, And if it be your saints living in your presence and interceding for us. We ask this prayer through Christ our Lord, Amen.

**மன்றாடுவோமாக:** விண்ணகத் தந்தையே உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய யேசுக்கிறிஸ்து தமது மீட்டழிக்கும் சிலுவை மரணத்தால் முடிவில்லா வாழ்வின் உணவாகத் தந்தாரே. இரண்டாயிரத்துபத்தொன்பதாம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் திருப்பலியில் உயிரிழந்த ஆன்மாக்களுக்காக நாங்கள் மன்றாடுகிறோம். கிறிஸ்துவின் பாடுகளிலும் மரணத்திலும் இவர்கள் இணைந்தது போல் அவருடைய மாட்சியிலும் பங்குபெறுவார்களாக. உமக்குச் சித்தமானால் இவர்களும் புனிதர்களாக வலியுறுத்தப்பட்டு உமது சந்நிதானத்தில் வாழும் புனிதர்களின் வரிசையில் எங்களுக்காக பரிந்து பேசும் புனிதர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்களாக. எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1933 | 2018 |
| 03 | 03 |
| 29 | 01 |



**திரு.சவுரி சந்தியோகு**
(புதுக்கமம், உயிலங்குளம்)

நேற்று போல் உள்ளதையா உங்கள் பிரிவு...
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்ததையா
எங்கள் இதயத்தில் நீங்கள் ஓர்
அணையா தீபம் ஐயா அந்த விளக்கு
எங்கள் வீட்டில் எந்த நேரமும்
எரிந்து கொண்டே இருக்குதப்பா
உங்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாற
வேண்டுறோம் இறைவனிடம் அது நிலைபெற...

பிரிவால் நினைந்துருகும்
குடும்பத்தினர்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
E-mail - mannamnrc@gmail.com/ Web: manna.lk /Fb- Mannar Catholic Media

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 0775338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org